KALKI 19.8.84
ரூ.1.50




வெள்ளிவிழாக் காணும் இருவர்

கல்கி

புதியது

பால் அடங்கிய ஃபாரெக்ஸ் திட உணவு



அதிக சுவையானது அதிக முழுமையானது



நீங்கள் பாசத்துடன் ஊட்டும் ஒவ்வொரு கவளமும் உங்கள் பாப்பாவின் வளர்ச்சிக்குச் சிறந்ததாகும்.

பால் அடங்கிய ஃபாரெக்ஸ் திட உணவு. இதைக் கலப்பது எளிது. பாப்பாவுக்கு ஊட்டுவதும் எளிது.

பால் அடங்கிய ஃபாரெக்ஸ் திட உணவு. பாப்பாவின் வளர்ச்சிக்கு இன்றியமையாத புரதம் நிரம்பியது. மிக ஆரோக்கியமான இரத்தத்திற்குக் கூடுதல் இரும்புச்சத்து கொண்டது. உறுதியான பற்களையும் எலும்புகளையும் பெற சரியான விகிதத்தில் கால்ஷியமும் ஃபாஸ்ஃபரஸும் அடங்கியது. பாப்பாவின் மென்மையான ஜீரணசக்திக்கென முன்கூட்டிப் பக்குவம் செய்தது.

பால் அடங்கிய ஃபாரெக்ஸ் திட உணவு. ஒவ்வொரு கவளத்திலும் அதிக முழுமையான திட உணவு.

CLARION/B/GX/3/203 Tml

ஆசிரியருக்குக் கடிதம் — ஓர் இன்ப ஆச்சரியம்



சிறுகதைக்குள் ஒரு குட்டிக்கதை!

அன்புள்ள ஆசிரியருக்கு,

கல்கி வந்தது. முதல் பரிசுக்கதை பற்றிய அறிவிப்புடன்! ஒரு சந்தோஷ வியப்பு எங்களுக்கு. வீட்டிற்குப் போனதும் அம்மா, 'கல்கி'யிலிருந்து இது வந்தது' என்று ஒரு கடிதத்தை நீட்டினார்கள்.

'அம்மணி' என விளித்து, வாழ்த்துக்களை வழங்கி, வாழ்க்கைக் குறிப்பைக் கேட்ட தங்களின் அன்பான கடிதம்.

அம்மாவின் முகத்தில் ஆச்சரியம், அதிசந்தோஷம், அநேக கேள்விக் குறிகள்.

'இது யார் ராதா—வசுமித்திரன்?' என்று கேட்டார்கள்.

'எங்கள் மனங்களோடு உறவாடும் காதலர்கள். எங்களுடைய முதல் நாவலின் நாயகி ராதா. நாயகன் வசுமித்திரன்!' என்றோம்.

'அதன் கீழே என் பெயர் எதற்கு?' என்றார்கள்.

லேசான தயக்கம்.

'உங்களுக்கு என்றுதான் ஒரு பெயர் வைத்துக் கொண்டிருக்கிறீர்களே, அப்புறம் கல்கிப் போட்டியில் என் பெயரில் ஏனடா கலந்து கொண்டீர்கள், பொடியன்களா?' என்று அழுத்திக் கேட்டார்கள்.

மென்று விழுங்காமல் பதில் சொன்னோம்.

'மூன்று வருடங்களாய் எங்கள் பெயரில் முயற்சி செய்கிறோம். பரிசு பெறும் தகுதி எங்களுக்கு வரவில்லை. எங்கள் நல்வாழ்வில் அன்பான அக்கறை இருக்கும் ஜீவன் நீங்கள்தானே... எனவே இம்முறை உங்கள் ஆசீர்வாதங்கள் கருதி, உங்கள் பெயரில் கலந்து கொண்டோம். தப்பாயிருந்தால் மன்னித்து விடுங்கள்', என்றோம்.

அம்மா முகத்தில் மிக லேசான கோபம் இருந்தது. பொய்க்கோபம்!

'சரி... கல்கியிலிருந்து கடுதாசி வந்திருக்கிறதே, என்ன சொல்லப் போகிறீர்கள்?' என்றார்கள்.

'உள்ளதைத்தான் சொல்லப் போகிறோம்.'

அம்மாவுக்கு நமஸ்காரங்கள்.

அன்புடன்,

'சுபா'

(சுரேஷ்—பாலகிருஷ்ணன்.)

சென்னை-20.

காத்தாடி – மனோரமா சந்திப்பு

நாடக மேடையில் 25 ஆண்டுகள் முடித்த காத்தாடி ராமமூர்த்தியும் திரைப் படத்துறையில் கால் நூற்றாண்டுச் சாதனை புரிந்த மனோரமாவும் கல்கி வாசகர்களுக்காக வீனஸ் ஸ்டுடியோவில் படப்பிடிப்பின் இடையே சந்தித்து உரையாடினார்கள்.

மனோரமா: வாங்க ராமமூர்த்தி சார். நாம சந்திச்சு எத்தனையோ நாளாச்சு, இல்லே'

காத்தாடி: வணக்கம் மனோரமா. எப்படி இருக்கீங்க?

மனோரமா: நல்லா இருக்கேன்... ஆமா வெள்ளி விழாக் கொண்டாடுறீங்களாமே... எந்த வயசுலேர்ந்து டிராமாவ ஆக்ட் பண்றீங்க?

காத்தாடி: பத்தொம்பது வயசிலேர்ந்து. ஸ்கூல், அப்புறம் காலேஜ் ஃபங்ஷன்ல எல்லாம் நடிச்சு, சோ ட்ரூப்ல ஆக்டராச் சேர்ந்து, அதுக்கப்புறம் தனியா வந்து...

மனோரமா: அப்போ தனியா எவ்வளவு வருஷமா செஞ்சிட்டு வர்றீங்க?

காத்தாடி: 20–22 வருஷமா இருக்கும். கிட்டத்தட்ட 2300 ஷோ. அதுலஜாஸ்தி செஞ்சது 'டௌரி கல்யாணம்'தான். ஆமா, என்னையே இந்த வருஷக் கணக்கெல்லாம் கேட்டுக்கிட்டிருந்தா நீங்க எப்போ சினிமா ஃபீல்டுக்கு வந்தீங்க?

மனோரமா: பத்துப் பன்னண்டு வயசிலேயே டிராமாவுல ஆக்ட் பண்ண ஆரம்பிச்சிட்டேன். அமெச்சூர் நாடகந்தான். அப்போதெல்லாம் செட்டிநாட்டுல ஆம்பிளைங்களே பொம்பளை வேஷமும் போட்டுக்குவாங்க... ஒரு ஏசாதசி அன்னைக்கு அந்தமான் கைதின்னு ஒரு நாடகம் போட்டாங்க. ராத்திரி தூக்கம் முழிக்கறதுக்காக. அதுல ஒரு சின்ன பொண் வேஷத்துக்கு நான்தான் ப்ளேபேக் பாடினேன். அதுதான் ஆரம்பம்.

காத்தாடி: பத்துப் பன்னண்டு வயசிலேயே நடிக்க வந்தாச்சன்னு... இப்ப சுமாரா முப்பது வருஷத்துக்கு மேலே ஃபீல்டுலே இருக்கீங்க. அப்பிடித்தானே?

மனோரமா: ராமமூர்த்தி.... என்னை வயசானவன்னு சொல்லிச் சந்தோஷப்படறீங்களா? அட, அதனால என்ன, கேளுங்க... சொல்றேங்க!

காத்தாடி: அன்னிக்கு இருந்தமாதிரியே இன்னிக்கும் இருக்கீங்களே, அது எப்படி? என்னைக் கூட ஒரு தடவை பாலசந்தர் சார் கேட்டார், எண்டா ரோலுக்கு என்னை 'டை' போடறேன்னு... ஆனா ஒண்ணு நிச்சயங்க: அந்தக் காலத்திலேர்ந்து ஹீரோ நிறைய மாறியிருக்கலாம். ஹீரோயினும் மாறி மாறி வந்திருக்கலாம். ஆனா மனோரமா அன்னி

வெள்ளி விழாக் காணும் இருவர்



லோத்து இன்னி வரைக்கும் தொடர்ந்து வந்திட்டிருக்காங்கன்றதே ஒரு பெரிய அச்சீவ்மெண்ட். சரி, சினிமாவில எப்ப வந்தீங்க? மறுபடியும் வருஷமான்னு அலுத்துக்காதீங்க...

மனோரமா: (சிரித்துக் கொண்டே..) சினிமால 58–லே வந்தேங்க. வெள்ளி விழா காலம் ஓடியாச்சு.

காத்தாடி: மாடர்ன் தியேட்டர்ஸ் பிலிம்ல கூட நீங்க ஹீரோயினா நடிச்ச மாதிரி ஞாபகம்.

மனோரமா: ஆமா, 'கொஞ்சும் குமரி'யில நான்தான் ஹீரோயின்.

காத்தாடி: நல்ல வேளை, நீங்க தொடர்ந்து ஹீரோயினா நடிக்கலே.

மனோரமா: என்டவா பண்றீங்க?

காத்தாடி: சரியாப் போச்சு. நீங்க ஹீரோயினாப் போயிருந்தா தமிழ் சினிமாவுக்கு ஒரு நல்ல நகைச்சுவை நடிகை கிடைக்காமலே போயிருக்கும்ங்கறதுக்காகச் சொன்னேன். ஏன், இன்னி வரை உங்களுக்குப் போட்டியா ஒருத்தரைக் கூடச் சொல்ல முடியல்லியே அதுசரி, நீங்களும்தான் மேடை நாடகங்கள்ள நிறைய நடிச்சிருக்கீங்க. உங்களுக்கு எதுல ஆத்ம திருப்தி கிடைக்குது – சினிமாவா, ஸ்டேஜா?

மனோரமா: நம்மோட ஆசைய இஷ்டப்படி நிறைவேத்திக்கறதுக்கு மேடை நாடக... வாய்க்கு... இன்னொண்ணு... அப்பப்ப, அன்னன்னிக்கே, ஜனங்களோட ரியாக்ஷனைத் தெரிஞ்சுக்கற மாதிரி வசதி டெஃபனட்டா டிராமால தான் கிடைக்குது.

காத்தாடி: ரொம்ப உண்மை. அதுவும் நமக்குப் பாதி வயசுல இருக்கறவங்ககூட தான் ஸ்டேஜைப் பொறுத்த வரை ரூல் பண்ண வேண்டியிருக்கு. ஜாஸ்தி இளைஞர்கள்தான். அதனாலேயே உத்சாகம், தெம்பு எல்லாம் கூடவே சேர்ந்துடுது இல்லியா?

மனோரமா: நாம இளமையா இருக்கறதுக்கு என்ன காரணம்னு முன்னால கேட்டீங்களே, அதுக்கு இதுவும் ஒரு காரணம், இல்லே?

காத்தாடி: கரெக்ட். அப்புறம் பாருங்க, இந்த அமெச்சூர் நாடகத்தைப் பொறுத்த வரை ஹீரோயின் ஷார்ட்டேஜ் ஒரு ப்ராப்ளமா இருக்கு. நாடகத்துல நடிக்கவர வங்க, உடனே ஏதாவும் சினிமாவுக்கு சான்ஸ் கிடைக்கணும்கிற நோக்கத்தோட வராங்க. தொடர்ந்து நாடகத்துல நடிக்க விருப்பம் இல்லே அவங்களுக்கு. அமெச்சூரா வந்து கொஞ்சம் கத்துக்கிட்டு, தொடர்ந்து மேடையிலேயே நடிக்கறதுக்கு ஏன் வரமாட்டேங்கறாங்கன்னு தெரியல்லே. இதுக்கு ஏதாவும் வழி உங்களுக்குத் தோணுதா?


மனோரமா: பிரச்சினையை நீங்க வச்சுக்கிட்டு, என்னை வழி கேக்கறீங்க... ம்... எனக்கு ஒண்ணும் தோணல்லியே...

காத்தாடி: சினிமால நடிக்கறதுக்கு இன்ஸ்டிட்யூட் இருக்கற மாதிரி...


மனோரமா: ஆங்... அதுமாதிரி அமைப்புங்க ஏதாவும் பண்ணலாம். அப்பகூட நாடகத்திலேருந்து – சினிமால நிமர்னு என்டர் பண்ணிடலாமே, பாஷை தெரியாம கூட சினிமாவுக்கு வந்திடலாம். நாடகத்துலே அது சரிப்பட்டுவராதே? மொழி தெரியாம, ஆக்டிங் தெரியாம திமர்னு ஸ்டேஜுக்கு வந்திட முடியாதுங்க. கஷ்டம்.

காத்தாடி: என்னோட டிராமா பார்க்க ஒரு தடவை ஒரு லேடி ஸ்டேட்ஸ்ல இருந்து வந்தாங்க. என்னை ஒரு மாதிரி பார்க்கறீங்க...' வயசானவங்க... அம்பத்தஞ்சு வயசு. நாடகம் முடிஞ்சு கிரீன் ரூமுக்கு வந்ததும், நான் ஒரு அமெச்சூர் ஆர்ட்டிஸ்ட்டான்னு சொல்லி அறிமுகப்படுத்திக்கிட்டேன். அவங்க ஸ்டேஜ் ஆர்ட்டிஸ்ட்டாம். அங்க எல்லாம் ஃபுல் டைம் ஸ்டேஜ் ஆர்ட்டிஸ்ட் ஜாஸ்தியாம்... வருமானமும் அதுக்கு ஏத்தபடி கிடைக்குது. இங்கே வருமானம் குறைவும் சினிமாவுக்குத் தாவறாங்க... சரி, டிராமான்கற போது டி.வி. டிராமால்லாம் ஞாபகம் வருது.

மனோரமா: நல்ல சமாசாரம் பேசும்போது டி.வி. டிராமாவையெல்லாம் ஏன் இழுக்கறீங்க? ப்ளெயினாச் சொன்னா ரொம்ப



"A goal established,
an opportunity met...
these are the beginnings
of great achievements"



சமயம் அறுக்கறாங்க. கொடுமைப்படுத்தறாங்கன்னே சொல்லலாம்.

காத்தாடி: நல்ல ஆர்ட்டிஸ்ட் இல்லியா, நல்ல நாடகம் தான் கிடைக்கமாட்டேங்குதா?

மனோரமா: அவர்களைத்தான் கேக்கணும். அவங்களுக்குப் பொறுமை இருக்கா, கேரக்டரோட அருமை தான் தெரியுதா... எப்பவாவது தான் டயம் கிடைக்கும். அப்ப டிராமா பார்க்கணும்னு தோணும். பார்க்க உட்கார்ந்தா போர் அடிச்சிடறுங்க. யாரைக் குத்தம் சொல்றதுன்னு தெரியலே.

காத்தாடி: உங்களுக்கு நிச்சயமா எதாவும் தெரிஞ்சிருக்கும்...

மனோரமா: அங்கே பாலிடிக்ஸ் இருக்குதுங்க... உட்டுடுங்க... ஸ்டேஜ் பத்தி சொல்லுங்க.

காத்தாடி: இப்போ ரெண்டு மூணுவருஷமா மேடை நாடகம் முன்னேற்றத்தான் வருது. பணம் கொடுத்து டிக்கட் வாங்கிட்டு வர அளவுக்கு நாடகம் ஜனங்களைக் கவர்ந்திருக்கு.

மனோரமா: மாசத்துல இருபது — இருபத்திரண்டு நாள் நாடகம் பண்ணுவீங்களா? டிராமா இல்லாதன்னிக்கு எப்படி இருக்கும் உங்களுக்கு?

காத்தாடி: உண்மையிலேயே கஷ்டமாயிருக்கும். சேர்ந்தாப்பல பத்து நாள் டிராமா செஞ்சிட்டு, ஒருநாள் ரெஸ்ட் வந்திட்டா கூட போர் அடிக்க ஆரம்பிச்சுடும். அப்படியே பழகிப் போச்சு. உங்களுக்கு எப்படி?

மனோரமா: எனக்கும் அப்படியேதாங்க. தொடர்ந்து படப்பிடிப்பு இருக்கும்போது ஒருநாள் ரெஸ்ட் கிடைக்காதான்னு தோணும். ஆனா உண்மையில ரெஸ்ட்—டே வந்தா தவிச்சுப் போயிடுவேன்.

காத்தாடி: அப்பவே உங்களை ஒரு கேள்வி கேக்கணும்னு நெனைச்சேன். டிராமால தான் ஆத்ம திருப்தின்னு சொன்னீங்களே, ஏன் சினிமால கிடைக்காதா? இல்லே, டிராமாலதான்னு சொல்லி என்னைத் திருப்திப் படுத்தப் பாக்கறீங்களா?

மனோரமா: உண்மையிலதாங்க சொல்றேன். ஆனா அதே சமயம் ஜாக்கிரதையா ஆக்ட் பண்ண வேண்டிய தொழில் டிராமா. சினிமாவை ரீடேக் பண்ணிக்கலாம். ஆனா மேடையில அது முடியாதுங்கறதுனால ரொம்பக் கவனமா ஆக்ட் பண்ண வேண்டியிருக்கு. நான்பண்ணின எவ்வளவோ டிராமாக்கள் — ஆண்டாள் அவன் ஆண்டாள்; என் மனைவி; என் வீடு; என் உலகம், இந்தியா—டுடே எல்லாமே என்னையே சென்டரா வச்சு எழுதின பிளேங்க. இதில், ஆண்டாள் அவன் ஆண்டாள்'ள கடைசில நான் ஒரு தாலாட்டுப் பாட்டுப் பாடறேன்...

காத்தாடி: யெஸ், ரொம்ப நல்லா இருக்கும் அதுக்காகவே நான் ரெண்டு மூணு தடவை நாடகத்தின் கடைசியில போன துண்டு... சரி, டிராமாவைப் படமாக்கும் போது என்ன செய்யணும்னு நினைக்கறீங்க? உதாரணமா பாலசந்தரின் 'பட்டணப் பிரவேசம்' வெற்றிப்படமா அமையலே. ஆனா ப்ளே சக்ஸஸ்ஃபுல்லா இருந்தது. இத்தனைக்கும் பாலசந்தர்சார் நாடகம், சினிமா ரெண்டுலயும் எக்ஸ்பர்ட்.

மனோரமா: என்ன காரணம்னு என்னால சொல்ல முடியல்லே ஏன்மனைக்கவிறு... நல்லாத்தானே வந்தது?

காத்தாடி: சரி, நாடகத்தோட வெற்றிக்குக் காரணம் கதாசிரியரா, டைரக்டரா?

மனோரமா: இதுக்கு ஒரு சின்ன உதாரணம் சொல்றேன். சில வருஷத்துக்கு முன்னே 'விடை கொடு தாயே'ன்னு ஒரு நாடகம் போட்டோம். முரசொலி சொர்ணம் எழுதினது. அண்ணா வந்து அந்த நாடகத்தைப் பார்ப்பார். எத்தனை தடவை பார்த்தார்ன்னு சொல்ல முடியாது. ஒரு சமயம் படத்துல பிஸியா இருந்ததுனாலே அன்னிக்குநாடகத்துக்குப் போக முடியல என்னால. அன்னிக்கும் அண்ணா அந்த நாடகத்தைப் பார்த்தார். இதையொட்டி, ''ஆசிரியராலும் நாடகத்தாலும் தான் நடிகர்கள்னு இதுவரை நெனைச்சேன். நடிகர்களால தான் நாடகம்னு இப்போ நிச்சயமாகச் சொல்வேன்''னார்.

காத்தாடி: உங்களைப் பொறுத்தவரை அதை நான் பூரணமா ஏத்துக்கறேன்.

மனோரமா: நடிப்பைப் பொறுத்தவரை பேரும் புகழும் ஒரே நாள்ள இமர்னு கிடைக்கறதில்லே.

காத்தாடி: அதுமட்டுமில்லே, பெரிய ரோல் சின்ன ரோல்னு பார்க்கக் கூடாது. பதினெட்டு சீன் வந்தாலும், ஒரே ஒரு சீன் வந்தாலும் சின்ஸியராச் செய்யணும்.

மனோரமா: ஒரு சீன்ல வந்தாக் கூட நல்லா செய்தாப் போதுமே! காரக்டரை உணர்ந்து பண்ணணும். திறமை அடிப்படையா இருக்க வேண்டும். ஆத்மார்த்தமான ஈடுபாடு இருக்கணும். முழுமையாச் செய்யணும்... ஏனோதானோன்னு ஆக்ட் பண்ணிட்டு ஓடறது எனக்குப் பிடிக்கவே பிடிக்காது.

காத்தாடி: மனோரமா, இன்னொரு நல்ல பாயின்ட் உங்ககிட்ட. எப்படி இத்தப் பல மாதிரிப்பட்ட வட்டார மொழிங்களை — கோயமுத்தூர் பாஷை, இரு



நெல்வேலி பாஷை இதையெல்லாம் இவ்வளவு நாச்சுரலா பேசறீங்க?

மனோரமா: என் வீடு — என் கணவர்ல பிராமினிகலா பேசினேன்... முக்கியமா இது டிராமா கம்பெனியில கத்துக்கிட்ட அநுபவம்தாங்க. அதுவுமில்லாம, நான் நல்லா கவனிப்பேன். நாடகங்கள், சினிமா ஷூட்டிங் இதுக்கெல்லாம் பல ஊர்களுக்குப் போறமில்லையா? அதோட அட்வான்டேஜ். எனக்கும் இதுமாதிரி தெரிஞ்சுக் கொள்ளணும்னு இயல்பாகவே கொஞ்சம் ஆசை உண்டு. அதுக்குப் பயனும் இருந்துது...

காத்தாடி: சந்தர்ப்பமும் சரியா கிடைக்குது உங்களுக்கு. அதுவும் முக்கியமாச்சே!

மனோரமா: ஆமா, இதெல்லாம் ஒருதடவை கேட்ட உடனே அந்த டோன், வாக்யமெல்லாம் மெமரியில அப்படியேதங்கிப் போயிடுது இல்லியா?

காத்தாடி: அப்பறம் இந்த காரக்டராவே மாறிப் போயிடற மாதிரி ஆக்ட்பண்றது, மூட் வரணும்கிறது இதுல எல்லாம் நம்பிக்கை இருக்கா உங்களுக்கு?

மனோரமா: ஒரு வேஷம் போட்டால் அந்தப் பாத்திரமா மாறிடலாம். ஆனா அதிலயே நுழைஞ்சிடக் கூடாது. ஆக்டிங்காகவும் இருக்கணும். அதேசமயம் காரக்டரும் தெரியணும்... என்னைக் கேட்டா மூட்னு ஒண்ணு தேவையில்லே. ஒரு சீன்ல நடிக்கப் போறோம். நடிப்புத்தான். முடிஞ்சவெளியில வரபோது அந்த நடிப்பு மூட் சேஞ்ச் ஆகித்தான் வெளியே வர்றோம், நாம செய்யப் போறது நடிப்புத்தான்னு நல்லாத் தெரியுமே நமக்கு!

காத்தாடி: இந்த மூட் வந்தாத்தான் நடிப்பு வரும்கிறது எல்லாம் வெறும் சப்பைக் கட்டு. ஐ அக்ரீ.

மனோரமா: ஆமாங்க. அன்னிக்கு சீன் சோக நடிப்புன்னு, ஒரேயடியா அன்னிக்குப் பூரா சோக மயமா மூழ்கி இருந்துட முடியுமா? நடிப்புத்தானே? நாச்சுரலா இருக்கணும். ஒத்துக்கறேன். நடிப்புங்கறதே ஒரு செயற்கையான விஷயம் — ஒரு காரக்டர் மேல திணிக்கப்படற விஷயம். அதை நடிச்சுட்டுப் போக வேண்டியதுதானே?

காத்தாடி: சந்தர்ப்ப, சௌகரியத்துக்குத் தகுந்த மாதிரி சொல்லிக்க வேண்டியதுதான் — மூட் இல்லே, மூட் வரல்லேன்னு.

மனோரமா: நாடக நடிப்புக்கும் சினிமா நடிப்புக்கும் ஒற்றுமை இருக்குங்கறீங்களா?

காத்தாடி: சினிமால, காமிரா பக்கத்துலேயே இருக்கும். சில எக்ஸ்பிரஷன்களுக்குக் கண்ணை இப்பிடித் தூக்கினாலே போதும். டிராமால அது போதாது. கடைசி வரிசை ஆடியன்ஸுக்கும் தெரியணும்...

மனோரமா: ஆமா, நாடகத்திலே பிரமாதப்பட்ட குறிப்பிட்ட ஆக்ஷனை சினிமால பண்ணினா ஓவர் ஆக்டிங்னுடுவாங்க.

காத்தாடி: ஆனா சினிமால வர்ரவங்களுக்கு நாடக அநுபவம் இருந்தா பரவாயில்லேன்னு — அபிப்பிராயம் இருப்பதாக் கேள்விப் படறேனே?

மனோரமா: ஆமா, வசனங்கள் சொல்றது, எக்ஸ்பிரஷன் குடுக்கறது எல்லாம் சரியா இருக்கும். நாடக அநுபவம் இருந்தா நல்லதுதாங்க.

காத்தாடி: ஆமா, கடைசி வரை நடிச்சுக்கிட்டே இருக்கப் போறீங்களா?

மனோரமா: சாகிற வரை ஆக்ட் பண்றதுல தான் எனக்குத் திருப்தி.

காத்தாடி: எனக்கும் அதே மாதிரிதான். நடிப்பே நமக்கு டானிக்.

மனோரமா: ஆமாங்க. உண்மையான கலைஞர்களுக்கு அப்படித்தான் இருக்கவேணும்.


(இதற்குள் ஷாட் ரெடி என்று உதவியாளர் கூறவே இருவரும் விடைபெற்றுக் கொள்கிறார்கள்.)

உரையாடல் தொகுப்பு: சாருகேசி

புகைப்படம்;

மேலட்டை வண்ணப்படம்: சுபா

மகாத்மா காந்தியும் லாட்டரிச்சீட்டும்



1926–ஆம் ஆண்டு கோவாவிலிருந்த மருத்துவமனைகளைப் பராமரிப்பதற்கு நிதி திரட்டும் நோக்கில் லாட்டரிச் சீட்டு நடத்தலாம் என்று முடிவெடுக்கப்பட்டது.

மகாத்மா காந்தி உடனே 'யங் இந்தியா' இதழில் இம்முடிவைக் கண்டித்து எழுதினார்.

''தர்ம காரியங்களுக்கு நிதி திரட்ட சூதாட்டம் வேண்டாம். அது பாபம்'' என்றார்.

ஆனால் இன்றைய நிலைமை — புற்றுநோய் மருத்துவமனை, குழந்தைகள் நலம், செஞ்சிலுவைச் சங்கம், கப்பற்படை, விமானப்படை, இராணுவப்படை என்று பல்வேறு காரணங்களுக்காகப் பரிசுச் சீட்டுகள் நடத்தப்படுகின்றன. இந்த வரிசையில் கடைசியாக வந்துள்ளது ஆசியாவின் பிரம்மாண்டமான முதுசெ ஹாஸ்பிடல் முதுசேரம்பு மருத்துவமனையின் நிதிக்காக நடத்தப்படும் பரிசுச்சீட்டு. பரிசு ரூபாய் நாலரைக் கோடி. பரிசுச் சீட்டின் விலை ரூ. 100 -

—காயத்ரி

SIRCO

பெருமையுடன் அளிக்கும்
தெய்வீக/கர்நாடக இசை கேசட்டுகள்



முத்துசுவாமி தீட்சுதரின்
''நவக்கிரஹ கீர்த்தனைகள்''
பாடியவர்: திருமதி மணி கிருஷ்ணசாமி
கேசட் எண்: 6 SRC 5003

''கோபிகா கீதம்''
(கண்ணன் பாடல்கள்)
பாடியவர்: திருமதி மணி கிருஷ்ணசாமி
கேசட் எண்: 4 SRC 1012

சங்கீத கலாநிதி
G.N. பாலசுப்பிரமணியம்
வழங்கும் கர்நாடக சங்கீதம்
கேசட் எண்: 6 SRC 5006




எமது முந்தைய வெளியீடுகள்


4 SRC 1001	நித்ய பாராயண ஸ்லோகங்கள் By S.P. பாலசுப்ரமணியம்
4 SRC 1002	சக்தி பாடல்கள் By P. சுசீலா
4 SRC 1003	முருகன் சகஸ்ரநாமம் By M.L. வசந்தகுமாரி
4 SRC 1010	சுவாமியே சரணம் ஐயப்பா By பித்துகுளி முருகதாஸ்
6 SRC 5001	அருணகிரி நாதர் உபந்யாசம் By திருமுருக கிருபானந்த வாரியார்
6 SRC 5002	சிவசங்கீர்தனம் By Dr. M. பாலமுரளி கிருஷ்ண
6 SRC 5004	கோவூர் பஞ்சரத்ன தியாகராஜ கீர்த்தனைகள் வயலின் By குமரேஷ் & கணேஷ்
6 SRC 5005	குன்னக்குடி வைத்தியநாதன் கர்நாடக சங்கீதம் வயலின்

தயாரித்து, வெளியிடுபவர்கள்:
சவுத் இந்தியா ரெக்கார்டிங் கம்பெனி (பி) லிட்.,
21, போயஸ் ரோட் இரண்டாவது தெரு.
சென்னை-600 018. போன்: 454692


SIRCO



ஜெயவர்த்தன
அமைதி திட்டம்
ராணுவம், கடற்படை தாக்குதல்
யாழ்ப்பாணம்



பஞ்சாபில் போல் மற்ற மாநிலங்களிலும் ரகசிய விசாரணை மன்றங்கள் நிறுவப்படலாம்— செய்தி




வோட் விளைச்சல்
இலவச மின்சாரம்

கல்கி



1984 ஆகஸ்டு 19
மலர் : 43 இதழ் : 3
ரக்தாக்ஷி ஆவணி 3



மேளா தாளத்துடன் கடன்!

இஸ்திரி தொழில் செய்து வரும் திரு. சம்பத் கார்ப்பரேஷன் வங்கியிலிருந்து ரூ. 800 கடன் பெற்றுத் தவணை முறையில் திருப்பித் தந்து வந்தார். ஒருநாள் அவர் வீடு தீப்பற்றி எரிய பெருநஷ்டமடைந்தார். இருப்பினும் அம்மாதத்திய கடன் தவணையை ஒழுங்காகத் திருப்பித் தர முன்வந்தார். அவர் பரிதாப நிலை உணர்ந்த வங்கி மேலாளர், 'அடுத்த மாதம் கட்டிக் கொள்ளலாம்' என்று தாமாகவே அனுமதி தர முன்வந்தார்!

இவ்வாறு வங்கிக் கடனை ஒழுங்காகத் திருப்பித் தந்த நலிந்த பிரிவினரில் பலரை கார்ப்பரேஷன் வங்கி அண்மையில் சென்னையில் விழா எடுத்துச் சிறப்பித்துள்ளது. ரொம்ப நல்ல காரியம். பெரிய தொழிலதிபர்களில் பலர் கூட காட்டாத பொறுப்புணர்வை நலிந்த பிரிவினரில் பலர் காட்டியது பாராட்டுக்குரியதே. ஆனால் இந்த நாணயத்துக்கு மறுபுறம் உண்டு. அந்த மறுபுறமானது அரசு உத்தரவின் பேரில் பாங்குகள் நடத்தும் கடன் வழங்கு மேளாக்களைச் செல்லாக் காசாக்குகிறது.

இந்த மேளாக்களைக் கட்சி அரசியலின் வெற்றியாகவும் பொருளாதாரத்தின் படுதோல்வியாகவும் கருதலாம். இத்தனை லட்சம் பேருக்கு இன்ன தேதிக்குள் கடன்கள் தரப்பட்டே ஆகவேண்டும் என்ற அரசு ஆணையை பாங்குகள் அமல்படுத்த முற்படும்போது கடன்வேண்டுவோர் பாங்கை நாடி வருவதற்குப் பதில் பாங்குகள் மக்களைத் தேடிப் போய் வலுக்கட்டாயமாக அவர்கள் தலையில் கடனைச் சுமத்தி அவர்களைக் கடன்காரர்களாக்குகிறது. கடன் பெறுவது பெரிய காரியமல்ல; அதைச் சாமர்த்தியமாக முதலீடு செய்து மேலும் பணம் பண்ணி வட்டியும் முதலும் திருப்பித்தருவதென்பதுதான் பெரிய விஷயம். இந்தத் திறமை எல்லோருக்கும் வந்துவிடாது. அப்படிப் பட்டவர்கள் மீது கடன் திணிக்கப்படும்போது அவர்களில் நேர்மையாளர்கள் குற்ற உணர்வால் பாதிக்கப்படுவார்கள். பெறுகிற கடனுக்கு அடமானம் ஏதும் தேவையில்லை, ஜாமீன் கையெழுத்து அவசியமில்லை என்னும் போது வேறு பலருக்குத் திருப்பித்தர வேண்டும் என்ற எண்ணமே போய்விடும். பெரும்பாலான கடன்கள் பாங்குகளால் தள்ளுபடி (ரைட் ஆஃப்) செய்யப்படுகின்றன. இதனால் நாட்டின் பொருளாதாரச் சீர்குலைவு மேலும் அதிகரிக்கும். நிகர விளைவு, எந்த ஏழைகளுக்கு இவர்கள் உதவுவதாகக் கூறுகிறார்களோ அந்த ஏழைகளே தான் மேன்மேலும் துன்பத்தை அனுபவிப்பார்கள்!

ஆளும் கட்சியின் பெருந்தலைவர்களும் குட்டித்தலைவர்களும், தொண்டர்களும் கட்டிக்காட்டுகிறவர்களுக்குத் தான் அவர்கள் முன்னிலையில் பாங்குக் கடன்கள் வழங்கப்பட்டுகின்றன. கடன் விண்ணப்பத்தாள்கள் கூட கட்சி அலுவலகங்களில் பூர்த்தி செய்யப்பட்டு பாங்குக்குக் கட்சிப் பிரமுகர்களால் கொண்டு செல்லப்படுகின்றன. ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் கமிஷன் அடிப்பது சர்வ சகஜமாகி விட்டது. திருப்பித் தரத் தேவையில்லாத ''கடனை'' ஆளும் கட்சிதான் வழங்கியுள்ளது என்ற எண்ணத்தை மக்கள் மனத்தில் பதியச் செய்வது அக்கட்சிக்குத் தேர்தல் சமயத்தில் எவ்வளவு அனுகூலமாயிருக்கும் என்று கூறத் தேவையில்லை. இந்த அநீதி சர்வகட்சிகளையும் சேர்ந்த பாங்கு டெபாஸிட்தாரர்களின் பணத்தைக்கொண்டு நடக்கிறது. அந்த டெபாஸிட்தாரர்களுக்கு வட்டி விகிதத்தில் கால் சதம் கூட அதிகரித்துத் தரப்படுவதில்லை.

கட்சிவேறு, ஆட்சி வேறு என்ற நிலையை முதலில் மாற்றி, கட்சியும் ஆட்சியும் ஒன்றுதான் என்பது போல் நடந்து கொண்டார்கள். இப்போதோ கட்சியின் பணத்துக்கும் பாங்குகளில் உள்ள டெபாஸிட்தாரர்களின் பணத்துக்கும் வித்தியாசமில்லாமல் செய்து கொண்டிருக்கிறார்கள். இப்படியே போனால் அரசாங்க கஜானாவே ஆளும் கட்சிக்குத்தான் சொந்தம் என்றாகிவிடும்!

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

என்ன ஒலிம்பிக்ஸோ!



மாலினி சேஷாத்ரி

"எத்தனை நடவை உங்களைத் தொண்டை கிழியக் கூப்பிடுவது?" என்று அலுத்துக் கொண்டாள் அஞ்சலி. சாப்பாடு ஆறிப் போகிறது. இந்த ஒலிம்பிக்ஸ் வந்ததோ இல்லையோ, உங்களுக்கு எல்லாம் பசி தூக்கம் ஒன்றுமே தெரியாமல் போய் விட்டது."

"உஷ்" என்றார் ராஜகோபாலன், டீ.வி.யை விட்டுக் கண்களை அகற்றாமல். குத்துச் சண்டை ஒன்று திரையில் ஓடிக் கொண்டிருந்தது. "கடைசிச் சுற்றுதான் பாக்கி. கொரியாக்காரன் தான் ஜெயிப்பான் போலிருக்கிறது"

"துளிகூட நாகரீகமே இல்லாத விளையாட்டு" என்றாள் அஞ்சலி வெறுப்புடன். "யார் ஜெயிக்கிறார்கள் என்று எப்படித் தெரிந்துகொள்வது? இரண்டு பேருமே ஒருவரை ஒருவர் அடித்துத்துவைத்துக் கொள்கிறார்கள். பாருங்களேன் அந்த ஆரவாரம் செய்கிற கும்பலை!"

"அம்மா சொல்வது தான் சரி" என்றாள் ரஞ்சிதா. "பண்டைக் காலத்தில் ரோமாபுரியில் அடிமைகள் ஒருவரோடு ஒருவரும், மிருகங்களோடும் மோதிச் சண்டையிட்டுக் கொண்டது மாதிரி தான் இருக்கிறது இதுவும்!"

மற்றவர்களை விடத் தனக்குத்தான் எல்லாம் தெரிந்த மாதிரி காண்பித்துக் கொள்ளும் விவேக் குறுக்கிட்டான்: "மன இயல் நிபுணர்கள் சொல்லுவார்களே, தெரியாது? உண்மையிலே மக்களுக்கு வன்முறையில் மிகுந்த ஆசை உண்டாம். ஆனால் நாகரீக சமுதாயத்தில் அது அமுக்கப்பட்டதல்லவே! அதனால் தான் குத்துச்சண்டை, மல்யுத்தம் மாதிரி விளையாட்டுக்களை உண்டாக்கியிருக்கிறார்களாம்! அதைப் பார்ப்பதிலேயே ஒரு வக்கிரமான மகிழ்ச்சி."


"யார் சொன்னது இவை எல்லாம் வன்முறை விளையாட்டுக்கள் என்று?" என்று 'சண்டை'க்கு வந்தார் ராஜகோபாலன், டீ.வி.யை அணைத்துவிட்டு, சாப்பாட்டு மேஜையை நோக்கி நடந்தபடியே. "ஸ்பெயின் நாட்டுக்கு விஜயம் செய்கிறவர்கள் எல்லோரும் காளைச் சண்டையைப் பார்ப்பதை ஒரு கௌரவமான செயலாகக் கருதுகிறார்கள். நிச்சயமாக, குத்துச் சண்டை, மல்யுத்தம் இவற்றைவிட அவை பயங்கரமானவைதான்."

"எல்லோருக்கும் இப்படி ஒருவரை ஒருவர் ஆக்ரோஷமாகத் தாக்கிக் காயப்படுத்திக் கொண்டு இருக்கும் போது, எப்படி சிநேகபாவமான போட்டி என்று எடுத்துக் கொள்ள முடியும்?"

ரஞ்சிதா அம்மாவைச் சமாதானப்படுத்தப் பார்த்தாள். "பயப்படாதே அம்மா. அவர்களுக்குப் பெரிதாக ஒன்றும் அடிபட்டு விடாது. அவர்கள் ஹெல்மெட் அணிந்திருக்கிறார்களே, பார்க்கவில்லை?"

"ஒலிம்பிக் விளையாட்டிலிருந்து குத்துச் சண்டையையே எடுத்துவிட ஒரு யோசனை இருப்பது தெரியுமோ?" என்றான் விவேக். "ஒலிம்பிக் விளையாட்டின் ஆதாரமான அமைதி, நட்பு, சமாதானம் ஒன்றுமே குத்துச்சண்டையில் இல்லை, அதனால்."

"குத்துச் சண்டை என்ன பாவம் செய்தது, அதன் மீது பழிபோட?" என்றார் ராஜகோபாலன், கிண்டலாக. "ஏதோ ஒலிம்பிக்ஸில் மற்ற எல்லாமே ரொம்ப





விவாத மேஜை

சமாதான -- சிநேக அடிப்படையில் நடக்கிற மாதிரிதான் இருக்கிறது நீ பேசுவது.''

''ஆமாம், ஒரே சந்தேக மயம், நம்பிக்கையின்மை மயம்'' என்று வெடித்தாள் ரஞ்சிதா. ''முக்கியமான பெரிய நாடுகளின் விளையாட்டு வீரர்களும் மானேஜர்களும் நடந்து கொள்கிறதைப் பார்த்தால், பள்ளிக்கூடத்துச் சிறுவர்களே பரவாயில்லை என்று தோன்றுகிறது.''

அஞ்சலிக்கு என்னவோ அது சரியாகவே பட்டது. ''விளையாட்டுக்களின் அடிப்படையான மனோபாவமே போய் விட்டது... எல்லாவற்றிலும் அரசியல் மயம்...''

பரபரப்புடன் குறுக்கிட்டான் விவேக். ''உனக்குத் தெரியுமா? அரசியல் என்னவோ இப்போது தான் ஒலிம்பிக்ஸில் நுழைந்தது மாதிரி நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள். இந்த அரசியல், பாரீஸ் ஒலிம்பிக்ஸிலேயே நுழைந்துவிட்டதாக ஒரு கட்டுரை படித்தேன்!''

அஞ்சலி பெருமூச்சு விட்டாள். ''மனிதர்கள் மாறவே மாட்டார்கள்! இந்த உலகத்தில் உள்ள நாம் எல்லோருமே ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்று நாடகமாடுவதை விட்டுவிட்டால் நல்லது.''

ராஜகோபாலனுக்கு எரிச்சலாக வந்தது. ''உனக்கு என்ன வந்து விட்டது?'' என்றார் ஆத்திரத்துடன். ''திருடர்கள் தொடர்ந்து வீடுகளில் கொள்ளையடிக்கிறார்கள்; போலீஸ் இருந்தும் பயன் இல்லை. ஆகவே போலீஸ் வேண்டாம் என்பாய் போலிருக்கிறதே! நாம் முயற்சி செய்து கொண்டே இருக்க வேண்டும்... பாரேன், சீனா முதன் முதலாக ஒலிம்பிக்ஸில் பங்கெடுத்துக் கொள்ள வந்து விட்டதே!''

உலகிலேயே மிக உயரமான எவரெஸ்ட் சிகரத்தில் ஒவ்வொருவராக ஏறிச் சாதனை ஏற்படுத்தியதில் அங்கு குப்பை பெருகி விட்டது.

ஏறத்தாழ 400 கிலோ குப்பை கிடப்பதாக நேபாள சுற்றுலா அமைச்சகம் கூறியுள்ளது.

இதை அப்புறப்படுத்தும் பணி விரைவில் நடக்கும் என்றும் இனிமேல் மலை ஏறுகிறவர்கள் தங்களுடன் குப்பைத் தொட்டி ஒன்றையும் கொண்டு சென்று குப்பைகளைக் கீழே கொண்டு வந்து விட வேண்டும் என்றும் அவ்வமைச்சகம் உத்தரவு பிறப்பிக்கப் போகிறது.

—எம். ஜெதிஸ்து பாவலன்.
நன்றி: தினகரன்





விவேக் மறுபடி குறுக்கிட்டான். ''அப்படிச் சொல்லுங்கள்'' என்றான் உரத்த குரலில். ''நாம் அரசியலும் விளையாட்டுக்களும் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோமே, நினைவிருக்கா? சீனாவும், அமெரிக்காவும் எப்படி முதல் முதலில் சிநேகமானார்கள் என்று தெரியுமோ? பிங்-பாங் அதாவது டேபிள் டென்னிஸ் மூலமாக. முதலில் சில பிங்-பாங் விளையாட்டுக்காரர்கள் அமெரிக்காவுக்கு விஜயம் செய்தார்கள். அதற்குப் பிறகே அரசாங்க அதிகாரிகளும், தூதுவர்களும்... ஆகவே அரசியலுக்கும் விளையாட்டுக்கள் உதவும்.''

''இது அபூர்வம். தலைகீழாக நடக்கிறது தான் சகஜம்!'' என்றாள் ரஞ்சிதா. ''விளையாட்டுக்களை அரசியல் சீரழித்து விட்டது. எந்தப் பத்திரிகை எடுங்கள்: விளையாட்டுச் சங்கங்களில் அரசியல், ஆட்டக்காரர்களைத் தேர்ந்தெடுப்பதில் அரசியல்...''

''அதனால் தான் நம் இந்தியர்கள் எந்த விளையாட்டிலும் சிறந்து விளங்க முடிவதில்லை'' என்றாள் அஞ்சலி கவலையுடன். ''எவனாவது தப்பித் தவறி முன்னேறிவிட்டால், மற்றவர்கள் அவனைப் பிடித்துக் கீழே தள்ளி விடுகிறார்கள்.''

''எப்போதுமே அப்படித்தான் என்று சொல்வதற்கில்லை'' என்று மறுத்தார் ராஜகோபாலன். ''அன்னாவியை எடுத்துக் கொள்; எல்லோரும் அவரை ஊக்குவிக்கிறார்களே?''

''எப்படி அவரை ஊக்குவிப்பதாகக் கூறுகிறீர்கள் அப்பா?'' என்றான் விவேக். ''பத்திரிகைகள்தான் பத்தி பத்தியாக அவரைப் பற்றி வாராவாரம் எழுதின... அவர் ஒலிம்பிக்குக்குப் போயிருக்க வேண்டும்.''

''சீச்சீ!'' என்று ரஞ்சிதா மறுத்தாள். ''அந்த அளவுக்கு அவர் இன்னும் சாதிக்கவில்லை. அனுப்பி வைத்துவிட்டு, பத்தாவதும், பதினைந்தாவதுமாக வந்து துவளச் செய்வானேன் அவரை?''

''ஆனால் அறுபதாவதும் எழுபதாவதுமாக வருகிறவர்களை நாம் ஊக்குவிக்கத் தவறுவதே இல்லை!'' என்றான் விவேக்.

''அதென்னவோ'' என்றாள் அஞ்சலி. ''எழுபது கோடிப்பேர் இந்த நாட்டில் இருக்கிறோமே. ஆனாலும் ஒலிம்பிக்ஸில் ஒரே ஒரு தங்கப் பதக்கமாவது...ஹூம்''

''ஹாக்கி'' என்று ராஜகோபாலன், ரஞ்சிதா, விவேக் மூவரும் ஒரே சமயத்தில் கூச்சலிட்டனர், கையைக் கழுவிக்கொள்ள முண்டியடித்து முன்னேறினர். ''சீக்கிரம் விவேக்! டி. வி.யைப் போடு!''


மாலினி சேஷாத்ரி புகைப்படம்: சுபா

மூலக் கனல்

அத்தியாயம் 19

'பதவியிலிருக்கும் போது செய்யும் தவறு என்பது மலைமேல் நெருப்புப் பற்றுவது போல எல்லார் கண்ணிலும் பளிரென்று தவறாமல் தெரியக் கூடியது. அதைத் தவிர்க்க வேண்டும்' — என்றார் அன்பு அண்ணன். அதற்குமேல் திருவை அதிகம் வற்புறுத்திக் கண்டிக்கவில்லை அவர். பிறரை முகம் சுளிக்கும்படி கடுமையான சொற்களால் கண்டிக்க அண்ணனால் முடியாது. தாட்சண்யங்களை அவரால் தவிர்க்கவே முடியாது என்பது திருவுக்கு நன்றாகத் தெரியும். தன்னுடைய அரசியல் எதிரிகள் கண்களில் விளக்கெண்ணெயை ஊற்றிக் கொண்டு -- காத்திருக்கிறார்கள் என்று இந்த நிகழ்ச்சியின் மூலம் திருவுக்குத் தெரிந்தது. தன்னுடைய ஒவ்வொரு தவற்றையும் பிறர் பூதக கண்ணாடி வைத்துப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும் புரிந்தது. பேச்சாளனாகவும், தலைவனாகவும், கட்சித் தொண்டனாகவும் மேடை மேல் நின்று பார்த்த அதே மக்கள் கூட்டத்தைக்கோட்டை அலுவலகங்களின் வராந்தாவிலும் வாயிற்படிகளிலும் இன்று மறுபடி பார்த்த போது பயமாயிருந்தது. இந்தக் கூட்டமும் தாங்கள்நினைத்தகாரியம் நினைத்தபடி நடக்காவிட்டால் எப்படி உடனே எதிரியாக மாறும் என்பதை எண்ணி மிரட்சியாயிருந்தது. ஆட்சிக்கு வருவதற்குமுன் இருந்த தைரியம் இப்போது பயமாக மாறியிருந்தது.

திருமலையைத் தொழில் வளர்ச்சி மந்திரி என்று போட்டிருந்தார்கள். அதுவரை அவனுக்குத் தெரிந்திருந்த தொழில்கள் நாடகமும், சினிமாவும் தான். இரண்டையும் தவிர, மூன்றாவதாக ஏதாவது ஒரு தொழில் அவனுக்குத் தெரியுமானால் அது வெறும் மேடைப் பேச்சுத்தான்.



நா. பார்த்தசாரதி

''எப்படிச் சமாளிப்பது?'' -- என்று தனியே அண்ணனைச் சந்தித்துக் கேட்டான் அவன். அண்ணன் சிரித்தார்.

''இலாகாவில் படித்த அதிகாரிகள், விவரம் தெரிந்த ஐ. ஏ. எஸ். எல்லாம் இருக்கிறார்கள். நடைமுறை அவர்களுக்குத் தெரியும்.''—

''அதிகாரிகளை நம்பலாமா? அவர்கள் எல்லோரும் முந்திய அரசில் பல ஆண்டுகள் இருந்தவங்கதானே?''


இதைக் கேட்டு அண்ணன் மேலும் சிரித்தார். ''தம்பி அரசுகள் மாறலாம். ஆனால் அரசாங்கம் மாறாது. இந்திரன் மாறினால் இந்திர லோகத்து நடன அழகிகளும் மாறிட வேண்டுமென்ற அவசியமில்லை. மாறி வந்திருக்கும் புதிய இந்திரனுக்கு ஏற்றபடி ஆடி மகிழ்விக்க அவர்களுக்குத் தெரியும்.''–

அண்ணனின் இந்த உவமையில் அவனுடைய சந்தேகத்துக்கு விடை இருந்தது. தன்னுடைய நயப்பாட்டைத் தெளிவிப்பதற்கு அண்ணன் கூறிய உவமையின் அழகில் நெடுநேரம் மெய்ம்மறந்திருந்தான் அவன்.

தேர்தலுக்கு முன் அவர்களுடைய இயக்கம் அறிவித்திருக்கஇரண்டு கொள்கைப் பிரகடனங்களை அமுல் செய்வதில் இப்போது சிக்கல் எழுந்தது. அரசின் தலைமைச் செயலாளரும் நிதித் துறைக் காரியதரிசியும் அவை நடைமுறையில் சாத்தியமாகமுடியாதவை என்று தடுத்து முட்டுக்கட்டை போட்டார்கள்.

'மூன்றுபடி லட்சியம் – ஒரு படி நிச்சயம்' –என்பது சொல்ல அழகாயிருக்கிறது. ஆனால் நடைமுறையில் அப்படிச் செய்தால் பொருளாதார ரீதியாக அரசாங்கம் இவாலாகி விடும் என்றார்கள் அதிகாரிகள். இரண்டாவது சிக்கல் அமைச்சர்களின் சம்பளம் பற்றியது. தங்கள் கட்சி அமைச்சர்களுக்கு முந்திய ஆட்சியின் அமைச்சர்கள் வாங்கிக் கொண்டிருந்த சம்பளத்தில் பாதிச் சம்பளமே போதுமானது என்றார் அண்ணன்.


''மற்ற மாநிலங்கள், நாடுகளில் அமைச்சர்கள் பெறும் சம்பளங்கள் வசதிகளைவிட இங்கு அவர்கள் வாங்கும் தொகை மிகவும் குறைவு. அதை மேலும் குறைத்தால் காணாது. மக்களுக்கு அமைச்சர்கள்மேல் வேறு வகையான சந்தேகங்கள் வரும். முடிவில் நீண்ட நாள் கடைப்பிடிக்க முடியாத ஒரு வகை 'ஸ்டண்ட்' ஆகிவிடும் இது. நடைமுறைக்கு ஒத்து வராது'' -- என்றார்கள் அதிகாரிகள். இதை அண்ணன் சிரித்தபடி கேட்டுக் கொண்டிருந்தார். அவனும் உடன் இருந்தான். 'ஸ்டண்ட்' என்று அவர்கள் பயன்படுத்திய வார்த்தை அவனுக்கு ஆத்திரமூட்டி விட்டது. ''இந்தப் பதவியின் சம்பளமும் வருமானமும் எங்களுக்குப் பிச்சைக் காசுக்குச் சமம். பேசச் செல்லும் ஒவ்வொர இயக்கக் கூட்டத்துக்கும்




ஐந்நூறு ரூபாய் என்று வைத்தோமானாலும் மாதாமாதம் நாங்கள் ஐம்பதினாயிரம் கூடச் சம்பாதிக்கலாம்'' — என்று சீறினான் அவன்.

''அமைச்சரானபின் அரசாங்கப் பயணப்படி, அலவன்சுகளைப் பெற்றுக் கொண்டு கூட்டங்களில் பணம் கைநீட்டி வாங்குவது என்பது நாளடைவில் ஒருவகை லஞ்சமாக மாறிவிட நேரும்'' — என அதிகாரிகள் மீண்டும் குறுக்கிட்ட போது முன்னைவிட ஆத்திரமடைந்த திருவை அண்ணன் சமாதானப்படுத்தினார். 'கட்சியும், ஆட்சியும் ஒன்றில்லை' — என்பதை அவனுக்கு விளக்கினார். முடிவில் படி அரிசித்திட்டத்தைச் சில இடங்களில் மட்டும் பரீட்சார்த்தமாக அமுல் செய்து பார்க்க அதிகாரிகள் அரை மனத்தோடு இணங்கினார்கள். காபினெட் அமைச்சர்கள் பாதிச் சம்பள விஷயத்தில் அவர்கள் அதிகம் தலையிட்டு முழுச் சம்பளமே பெறுமாறு வற்புறுத்தவில்லை. புதிய ஆட்சியும், புதிய மந்திரிகளும் நாளடைவில் முழுச்சம்பளத்தின் அவசியத்தைத் தாங்களே புரிந்து கொள்வார்கள் என்று விட்டுவிட்டார்கள். அதிகாரிகளிடமும் ஆட்சி அமைப்பிடமும் அண்ணனுக்கு இருந்த நிதானம் மற்றத் தம்பிகளுக்கு வியப்பூட்டியது. அண்ணனுக்குப் பயப்பட்டதை விட அதிகாரிகள் திருவுக்கு அதிகமாகப் பயப்பட்டார்கள். தாழ்வுமனப்பான்மை காரணமாகச் சில சாதாரண நிகழ்ச்சிகளைக் கூடத் தனக்கு இழைக்கப்பட்ட பெரிய அவமானங்களாகப் புரிந்து கொண்டான் திரு. ஒரு மூத்த ஐ. ஏ. எஸ். அதிகாரி தொழில் வளர்ச்சித் துறையின் காரியதரிசியாக இருந்தவர் 'பைப்' புகைப்பதை நெடுநாள் வழக்கமாகக் கொண்டிருந்தார். அவர் தலைக்கு முன் சரிசமமாக அமர்ந்து பைப் புகைப்பதைத் திரு விரும்பவில்லை. என்னதான் சமத்துவம், பொதுமை, என்று பேசினாலும் திருவிடம் 'ஃப்யூடல்' — அதாவது படிப்பறிவற்ற முரட்டு நிலப் பிரபுத்துவ மனப்பான்மையே' எஞ்சி நின்றது. இதனால் அந்தத் தொழில் வளர்ச்சி எக்ஸ்பர்ட்டை உடனே கோழி வளர்ப்புத் துறை இயக்குநராக மாற்றித் தூக்கிப் போட்டுப் பழிவாங்கினான் அவன். தலைமைச் செயலாளர் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். ''நஷ்டம் உங்களுக்குத்தான். அந்த அதிகாரி பல நாடுகளைச் சுற்றிப் பார்த்தவர். தொழில் வளர்ச்சியில் இன்று நாம் அடைந்திருக்கும் சில உயரங்களுக்கு அவர்தான் காரணம். பெரிய நிபுணரை இழக்கிறீர்கள்'' — என்று தலைமைச் செயலாளர் கூறியதை அவன் ஏற்கவில்லை. தொழில் வளர்ச்சி நிபுணர் கோழி வளர்க்கப் போனார். மீன் வளர்ப்புத் துறையில் மிகவும் ஜூனியர் அதிகாரியாயிருந்த இளவழகன் என்பவரைத் தன் இலாகாவின் செயலாளராகப் போடுமாறு ஏற்பாடு செய்து கொண்டான் திரு. கட்சிக்கும் இயக்கத்துக்கும், கட்சி ஆட்களுக்கும், இயக்க ஆட்களுக்கும் ஒத்து வராத அதிகாரிகளைப் பந்தாடவும், மாற்றவும் அவன் ஒரு கணம் கூடத் தயங்கவில்லை. இந்த விஷயத்தில் அண்ணனிடமிருந்த நிதானமும், பொறுமையும் அவனிடம் இல்லை. இரகசியமாகக் கட்சியின் அடிமட்டத்து ஊழியர்கள் மத்தியில் அவனுடைய செல்வாக்கு மெல்ல மெல்ல வளர்ந்தது. தங்களைத் தேர்ந்தெடுத்து ஓட்டுப் போட்டவர்களுக்கு மட்டுமின்றித் தங்களைத் தேர்ந்தெடுக்காத — மற்றவர்களுக்கு வாக்களித்தவர்களுக்கும் சேர்த்துத் தான் தாங்கள் ஆட்சி நடத்துகிறோம் என்று அண்ணன் புரிந்து கொண்டிருந்தார். திருவோ தங்கள் கட்சிக்காகவும் தங்களுக்கு வாக்களித்தவர்களுக்காகவும் மட்டுமே ஆட்சி நடத்துவதாகப் புரிந்து கொண்டிருந்தான். ஓர் அரசாங்கம் அல்லது ஆட்சி என்பது யாரால் நடத்தப்படுகிறது என்பதை விட யாருக்காக நடத்தப்படுகிறது என்பதை ஜனநாயக ரீதியாகப் பார்ப்பதற்கு அவன் மனம் போதுமான அளவு பக்குவமோ, விசால நிலையோ பெற்றிருக்கவில்லை. ஓர் ஆட்சி என்பது அதற்கு விரும்பி வாக்களித்தவர்கள், எதிர்த்து வாக்களித்தவர்கள், இருவருடைய வரிப் பணத்திலிருந்தும் — வருமானத்திலிருந்துமே நடத்தப்படுகிறது என்ற உணர்வு அண்ணனுக்கு ஓரளவு இருந்தது. தம்பிகள் பலருக்கு அந்த உணர்வு இல்லை.

அந்தக் கட்சியின் தொண்டர்கள், அடிமட்டத்து ஊழியர்கள் சிறிய காரியங்களுக்காகப் பெரிய பதவிகளில் இருப்பவர்களைத் தேடிக் கோட்டைக்கு வர ஆரம்பித்தார்கள். 'அந்த இன்ஸ்பெக்டரை மாற்ற வேண்டும். இந்த டி. இ. ஓ.வைத் தூக்க வேண்டும். அந்த ஆர். டி. ஓ. கதர் போடுறதில்லே. இந்த சி. டி. ஓ. நம்ம ஆளுங்க சொல்றதைக் கேக்கறதில்லே' — என்று இப்படி வந்தவர்களைத் திரு அரவணைத்து ஆவன செய்ய முற்பட்டதால் கட்சி மட்டத்தில் அவனுடைய செல்வாக்கு உறுதிப் பட்டுக் கொண்டிருந்தது. புதுப்புது ஊர்களில் ஏற்பட்ட இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்கள் — என்ற தொழிற்பேட்டைகளில் இடவசதி, மின்சார வசதி — கடன் வசதிகளுடன் கட்சி ஆட்களுக்கு நிறையவாய்ப்புக்களை அளித்தான். வீட்டுக்கும், கோட்டைக்கும் கட்சி ஆட்கள் நிறைய அவனைத் தேடி வந்தார்கள். ஓர் அதிகாரியும், கட்சி ஆட்களும்



பொய்யெனில் உண்மை! உண்மையெனில் பொய்!



கிரேக்க தத்துவஞானி 'ப்ரோடாகோராஸ்' அரிஸ்டாட்டிலிடம் ''உலகில் எல்லாமே பொய்மையானவைதான். உண்மை என்று எதுவுமே கிடையாது'' என்று சவால் விட்டார். அதற்கு அரிஸ்டாட்டில் சொன்னார் அமைதியாக: ''நீங்கள் கூறுவது உண்மை அல்லது பொய் இரண்டில் ஏதாவது ஒன்றாக இருக்க வேண்டும். பொய் என்றால் உங்கள் கருத்து அடிபட்டு விடுகிறது. நீங்கள் கூறுவது மெய்யானால் உண்மையென்று ஒன்று இருக்கிறது என்பதை நீங்களே ஒப்புக் கொள்கிறீர்கள். எப்படிப் பார்த்தாலும் உங்கள் வாக்கு தோற்றுவிடுகிறது!''

—சம்பத்குமாரி.

ஆதாரம்: வேர்ல்ட் எக்ஸிகியூடிவ் டைஜெஸ்ட்.

ஒரே சமயத்தில் அவரது அலுவலக அறையைத் தேடி வந்தால் அதிகாரியைக் காத்திருக்கச் சொல்லிவிட்டுக்கட்சி ஆட்களைத் தான் உடனே முதலில் சந்தித்தான் அவன். அண்ணனே கூட இப்படிச் செய்ததில்லை. பல பெரிய அதிகாரிகள் இதுபற்றித் தலைமைச் செயலாளர் மூலம் அண்ணனிடமே புகார் செய்திருந்தார்கள்.

பதவி ஏற்றவுடன் எழில்இருப்புக்குப் போய் டிராவலர்ஸ் பங்களாவில் ஒருபெண்ணுடன் தான் தங்கி அது ரசாபாசமாகி விட்டதால் அதன்பின் ஆறேழு மாதங்கள் வரை திரு அந்தப் பக்கமே போகவில்லை. பின்பு கட்சி மகாநாடு ஒன்றிற்காக அவன் அங்கே போகநேர்ந்தது. அப்போது தேர்தலில் அவனிடம் தோற்ற ஜமீன்தாரான சின்ன உடையார் ஊரில் இருந்தார். மந்திரி என்ற முறையில் உள்பட்டணத்தாருக்கு அவன் மூலம் சில காரியங்களைச் சாதித்துக் கொள்ள வேண்டியிருந்தது. கட்சிச் சார்பற்ற முறையில் சில உள்பட்டணத்துப் பெரியவர்கள் அவனுக்கு ஒரு வரவேற்புக்கொடுக்க விரும்பித் தேடிப் போய் அழைத்தார்கள். அப்போது அவனுள்ளத்தின் ஆழத்தில் புற்றடி நாகத்தைப் போல் சுருண்டு கிடந்த பழிவாங்குகிற உணர்வு சீறிப் படமெடுத்தது. ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை அடிக்க விரும்பினான் அவன். 'ஜமீன்தாரே திருமலையைத் தேடி வந்து காலில் விழுகிறார்' என்று ஊர்ப் பாமர மக்கள் பேசும்படி செய்ய வேண்டும் என்று அப்போது அவனுக்குத் தோன்றியது.

''உள்பட்டணம் என்பது உடையாருடையது. நான் அங்கே வரணும்னா உடையாரும், ராணியுமே வந்து நேரிலே என்னை முறையா அழைச்சாகணும். இல்லாட்டி நான் வரமுடியாது''—என்று அடம்பிடித்தான் திரு. இப்படி அவன் நிபந்தனை போட்டதும் உள்பட்டணத்துப் பிரமுகர்களுக்குத் தர்ம சங்கடமாகப் போயிற்று. பாரம்பரியப்பெரிய மனிதரான உடையார் தேர்தலில் அவனிடம் தோற்ற அவமானம் போதாதென்று இப்போது அவனையே தேடி வந்து அழைப்பதற்கு ஒப்புவாரா என்று தயங்கினார்கள்.

ஒருவேளை உடையார் அவனை அழைக்க இணங்கி வந்தாலும் வந்து விடலாம். ராணியும் உடன் வருவதென்பது எப்படி முடியும்? என்றெல்லாம் யோசித்துக் குழம்ப வேண்டியிருந்தது. போகாத ஊருக்கு வழி சொல்வதாக இருந்தது அமைச்சரின் நிபந்தனை. ஆனால் அமைச்சரானதிருவுக்கோ ஊரறிய, உலகறியத் தன்னிடம் தோற்ற முன்னாள் அமைச்சரும், முன்னாள் ஜமீன்தாருமான உடையார் குடும்ப சகிதம் தன்னைத் தேடி வந்து உள்பட்டணத்துக்கு அழைத்தார் என்று பாமர மக்கள் பேசிக் கொள்ளச் செய்து விடவேண்டும் என்பதில் அதிக அக்கறை இருந்தது. அதனால் ஊர் உலகத்தில் தன்னுடைய மரியாதை கூடும் என்று இரகசியமாக நம்பினான் அவன். எந்த டி. பி. யில் ஒரு பெண்ணுடன் தான் தங்கியது வெளிப்பட்டுத் தனக்குத் தற்காலிகமான அபவாதத்தை ஏற்படுத்தியதோ அதே டி. பி. யில் ஜமீன்தாரும், ராணியும் தேடி வந்து தன்னை அழைத்தார்கள் என்று பத்திரிகையில் புகைப்படத்தோடு நியூஸ் வரச் செய்துவிட ஆசைப்பட்டான் அவன்.

உள்பட்டணத்துப் பிரமுகர்களில் வயது மூத்த ஒருவர் துணிந்து உடையாரிடமே நேரில் போய், ''பெரிய மனசு பண்ணி ஊர் நன்மையை உத்தேசித்து நீங்க மந்திரியை நேரிலே போய் அழைக்கணும்''—என்று வேண்டிக் கொண்டார். ஜமீன்தாரும் பரந்த மனப்பான்மையோடு அதற்கு இணங்கினார். 'பணியுமாம் என்றும் பெருமை'—என்ற பழமொழிக்கு உடையாரும், 'சிறுமை அணியுமாம் தன்னை வியந்து'—என்ற பழமொழிக்கு அமைச்சர் திருவும் உதாரணங்களாய் இருப்பதாக அழைக்கப்போன பெரியவருக்குத் தோன்றியது.

ஜமீன்தாரும், ராணியும் திருவைத் தேடிச் சென்ற போது சுற்றியிருந்த எல்லோரும் காண ஒரு நிமிஷம் அவர்களை நிறுத்தி வைத்தே தான் உட்கார்ந்தபடி பேசினான் திரு. அடுத்த நிமிஷம் அவர்களை உட்காரச் சொல்லிவிட்டு இன்னொரு தர்ம சங்கடமான நிபந்தனையை மெல்ல அவர்களிடம் வெளியிட்டான். ஆனால் உடையார் அதைக் கேட்டுப் புன்முறுவல் பூத்தார்.

(தொடரும்)

வட்டமேஜை



● எம்.ஜி.ஆர். அவர்கள் அறிமுகப்படுத்தியுள்ள தொழிற்கல்வி திட்டத்திற்கு — தங்கள் இலவச இணைப்பு—'வாழ்க்கை வளம் பெற''— உண்மையிலேயே ஒருசிறந்த வழிகாட்டியாக அமைந்துள்ளது.

திருக்காட்டுப்பள்ளி ப.கோ. ராமகிருஷ்ணன்

● பிரளயம் என்ற சிறுகதையைப்படைத்த ராதா வசுமித்திரனுக்குப் பாராட்டுக்கள். அவரின் கதாநாயகி நாராயணி 'நம் மகா கவி பாரதியார் கண்ட புதுமைப்பெண். இப்பெண்மணியின் செயலைக் கண்டவுடன் அறிஞர் மா. கார்கிஸ் அவர்கள் கூறிய ''அஞ்சி ஒடுங்கிக் கொண்டிருக்கும் வரை மக்கள் சேற்றிலே வேரற்றுக்கிடக்கும் செடி கொடிகளைப்போல அழுகிப் போவார்கள்'' என்ற வரி நினைவுக்கு வருகிறது.

திண்டுக்கல்—7, கிளமெண்ட் செபாஸ்டியன்

● தனது பேரன் சென்ற விமானம் காணவில்லை என்பதை அறிந்து பதறிய ஜெயவர்த்தனே — ஆயிரமாயிரம் தமிழர்கள் தங்கள் குடும்பத்தினரை இழந்து தவிப்பதை உணராத அரக்கன். நாடறிந்த நடிகன் என்பதை நேரில் அறிந்து எழுதிய அனிதா பிரதாப்பிற்கு வாழ்த்துக்கள்.

மேட்டுப்பாளையம், பி. ஏ. வதூத்.

● படித்துவிட்டு இதுவரை வேலை கிடைக்காமல் விரக்தி அடைந்திருந்த நான் இப்பொழுது புதுத் தெம்பு பெற்றிருக்கிறேன். என்னைப் போன்ற பல இளைஞர்களைச் சிந்திக்கத் தூண்டிய ராஜேந்திரனின் பேனாமுனைக்கு என் நன்றிகள்.

சென்னை—38. புகழேந்தி.

● மிரட்டலுக்குப் பணியாத ராமசுப்பையர் பற்றி விளக்கமாய் எழுதி பத்திரிகை ஆசிரியர்கள் தன்னிச்சையாய், சுதந்திரமாய், யாருடைய மிரட்டலுக்கும் பயப்படாமல் உண்மைகளை உலகுக்கு உணர்த்த வேண்டும் என்கிற உங்களுடைய நல்லெண்ணத்தை புரிந்து கொள்ளச் செய்து விட்டீர்கள்.

கரூர்—2. கே. என். இராமகிருஷ்ணன்.

● எனக்கு வயது 74. 'கல்கி' ஆசிரியரின் முன்னுரைக்குப்பின் சில வார்த்தைகள். சுமார் 30 வருடங்களுக்கு மேலாகத் தொடர்ந்து 'ஒரு பிடிவாதத்துடன்' விடாமல் தினசரி யோகப் பயிற்சி செய்து வருகிறேன். மித ஆகாரம் மிக மிக அவசியம். 'நான் டாக்டரிடம் போனதே இல்லை'.

நங்கநல்லூர், என். எஸ். சுப்பிரமணியன்.

● இந்துமதியின் அட்டைப் படமும், ''நெருப்பு மலர்'' ஆரம்பமும் மாருதியின் கைவண்ணமும் வெகு ஜோர்!

சுவுந்தப்பாடி, அன்புதாசன்.

● அமிர்தசரஸ் பொற்கோயிலில் நாட்டின் ஒருமைப்பாட்டுக்காக உயிர் துறந்தராணுவ வீரர் குப்புசாமி அவர்களின் மனைவி காசி அம்மாளுக்கு ரூ. 150 திரட்டி மணிஆர்டர் கமிஷன் ரூ. 4.50 போக பாக்கியை அனுப்பியுள்ளோம்.

பெண்ணாடம்,

அருணா சர்க்கரை ஆலை ஊழியர்கள்.

● 29.7.84 கல்கி இதழில் ''கவிதைக்கு நல்ல நேரம்'' கட்டுரையின் தொடக்கத்தில் ''வானொலி நிலைய அதிகாரியான'' என்று ஒருமையில் அச்சானதால் ஒரு குழப்பம் நேர்ந்திருக்கிறது. பன்மையில் அது இருக்க வேண்டும். வர்த்தக ஒலி பரப்பின் நிலைய இயக்குனர் திரு சந்திரமௌளி, நிகழ்ச்சி தயாரிப்பு அலுவலர் திரு ஜே. டி. சுவாமிநாதன்.

சென்னை, சுப்ரபாலன்.

● நீதி மன்றங்களிலிருந்து அனுப்பப்படும் அழைப்பாணைகளின் வாசகங்கள் யூனியன் ஜாக் பறந்த காலத்தை நினைவூட்டும் வகையில் நாகரீகமற்ற முறையிலும், மனத்தைப் புண்படுத்தும் வகையிலும் அமைந்துள்ளன. எளிய தமிழில், பாமரரும் புரிந்து கொள்ளும் வண்ணம் தன்மானத்தைத் தட்டிப் பார்க்காத வகையில் நீதிமன்ற அழைப்பாணைகளின் வாசகங்களைத் திருத்தியமைக்கத் தமிழக அரசும் சட்டத்துறை ஆட்சிமொழி ஆணையமும் முன்வர வேண்டும்;

விருத்தாசலம், ஜி. பாலசந்திரன்.

(வழக்கறிஞர்).

(கடைசிக்கடிதம் பரிசு பெறுகிறது)

தன்மானத்தைத் தட்டிப் பார்க்க வேண்டுமா?


அமிர்தாஞ்சன்
அறியும்
தலைவலியின்
கடுமையை
எளிதாகப் பூசிட ஏற்ற மிருதுவான
அடிப்படைபொருள் கொண்டது.
புத்தம் புதிய, கார்க்கினாலான
உள் அமைப்பு மருந்தின்
சக்தியைப் பாதுகாக்கிறது.
AMRUTANJAN
Pain Balm
AMRUTANJAN
OBM 9708 TM
1984 ஒலிம்பிக் போட்டி
இந்திய விளையாட்டு
வீரர்களுக்கு பெய்ன்-
பாம் சப்ளை செய்ய
அங்கீகாரம் பெற்றவர்கள்.
அமிர்தாஞ்சன்
துரித நிவாரணம் உறுதியுடன் அளிப்பது.
தீய பின்விளைவுகள் இல்லாதது.

3

"நீங்கள்தான் என்னை மன்னிக்க வேண்டும். மனிதர்களைத் தவறான கோணத்திலிருந்து பார்க்கிற போது அவர்களின் எந்த ஒரு சாதாரணப் பேச்சையும் மூளை தவறாகத்தான் கிரகித்துக் கொள்ளும் என்பதற்குச் சற்றுமுன் நான் கேட்ட முட்டாள்தனமான கேள்வியே ஒரு எடுத்துக்காட்டு..." — ருக்மிணியின் முகத்திலும் பேச்சிலும் தெரிந்த நிஜமான வருத்தத்தை உணர்ந்த அவன் அவளை மாற்றுவதற்காகச் சடாரென்று சிரித்துக் கொண்டே கேட்டான்.

"அடேடே... அப்படியானால் நீங்கள் ஆரம்பத்திலிருந்தே என்னைத் தவறான கோணத்தில்தான் பார்த்துக் கொண்டு வந்திருக்கிறீர்கள் என்று சொல்லுங்கள். ஆமாம், உங்களின் அந்தக் கோணம் எது என்று நான் தெரிந்து கொள்ளலாமா?..."

"வேண்டாம் விட்டுவிடுங்கள். அதுதான் தவறு என்று தெரிந்து விட்டதே..."

"இல்லை; இல்லை... ஒரு வேளை நீங்கள் சரியாக இருந்து நான் தவறாக இருந்தால் என்னைச் சரி பண்ணிக் கொள்ள ஒரு சந்தர்ப்பம் கிடைக்கிறதல்லவா ...?சொல்லுங்கள். என்ன நினைத்தீர்கள்...?"

அவள் சற்றுத் தயங்கிப் பின் சொன்னாள்.

"எல்லா வட இந்தியர்களைப்போலவே நீங்களும் தென்இந்தியர்களை அலட்சியமாகப் பார்க்கிறவர் என்று நினைத்தேன்."

அதைக் கேட்டு அவன் ஒரு விநாடி யோசித்தான். பின் மென்மையான புன்சிரிப்புடன் அவள் முகத்தை ஏறிட்டுப் பார்த்து சிரிப்புமாறாமல் இயல்பாகச் சொன்னான்.

"உங்களின் முதல் அனுமானமே தப்பு.."

"எது...?"

"நான் வட இந்தியன் என்பதை எப்படி ஊகித்தீர்கள்?..."

"இதற்கு ஊகம் எதற்கு...? முகத்திலேயே தான் எழுதி ஒட்டியிருக்கிறதே..."

"என்னவென்று...?"

"நீங்கள் வட இந்தியரென்று..."

"ஓஹோ... ஒருவேளை நீங்கள் வைத்துக் கொண்டிருக்கிற இந்திய தேசத்து வரைபடத்தில் குடகுப் பிரதேசம் வடபகுதியில் இருக்கிறதோ என்னவோ... எங்களுடையதில் எல்லாம் தென் இந்தியாவில்தான் இருக்கிறது..."

"கூர்க் பகுதியைச் சேர்ந்தவரா நீங்கள்...!" — அவள் ஆச்சரியத்துடன் கண்கள் விரிய அவனைப் பார்த்தாள். அவன் மீண்டும் சிரித்தான்.

"சத்தியம் பண்ணினால் கூட நம்பமாட்டீர்கள் போலிருக்கிறது. என் பெயர் என்ன



தெரியுமா...? அர்ஜுனப்பா... கூப்பிடுவது அர்ஜுன். அப்பா பெயர் என்ன தெரியுமா... பாஸ்கரப்பா. தாத்தா பெயர் பெல்லியப்பா...''

''போதும்ப்பா...'' என்று அவன் விளையாட்டாகக் காதுகளைப் பொத்திக்கொள்ள, ''இப்போதாவது நம்புகிறீர்களா...?'' என்றான் அவன்.

நம்புவதாகத் தலையாட்ட, மீண்டும் பேசினான்.



இந்துமதி

''நீங்கள் சொன்னது ஓரளவு நிஜம். ஒருசில வட இந்தியர்கள் தென் பகுதியைச் சேர்ந்தவர்களை அலட்சியமாகத்தான் பார்க்கிறார்கள் மிஸ்-''

''இருத்திகா...''

''இருத்திகா...'' என்பதைத் திருப்பி உச்சரித்தவன் ''அது ஒரு நட்சத்திரத்தின் பெயரில்லையா...?'' என்று கேட்டான்.

''ஆமாம்.''

''இந்தப் பெயரை யார் உங்களுக்கு வைத்தது...?''

''ஏன் கேட்கிறீர்கள்...?''

''ரொம்பத் தவறாக வைத்திருக்கிறார்களே என்றுதான் கேட்கிறேன்...''

''தவறாக வைத்திருக்கிறார்களா...?''

''ஆமாம். சூர்யா என்று வைத்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் சந்திரா என்றாவது வைத்திருக்க வேண்டும். இரண்டுமில்லாமல் நட்சத்திரத்தின் பெயரையா வைப்பார்கள்...? இது வெறும் நட்சத்திர மினுங்கலாகத் தெரியவில்லையே...? கண்களைக் கூச அல்லவா வைக்கிறது.!''

மனம் குளிர மென்மையாகச் சிரித்தான் அவன்.

''உங்களுக்கு யார் அப்பா, இப்பா என்றெல்லாம் பெயர் வைத்தது... பேசாமல் ஷெல்லி, கீட்ஸ் என்று ஏதாவதுதானே வைத்திருக்க வேண்டும்...''

''அப்படியானால் நான் பொய் சொல்கிறேன் என்கிறீர்கள்...''

''இல்லை. கவிஞன் என்கிறேன்.''

''அதைத்தான் நான் பொய்யன் என்கிறேன்...''

''எப்படி...''

''முக்கால்வாசிக் கவிஞர்கள் பொய்தானே எழுதுகிறார்கள். பெண்களின் முகத்தைச் சந்திரன் என்று வர்ணிக்கிறார்கள். கூந்தலை மேகம் என்கிறார்கள்...''

''அப்படியானால் சற்றுமுன் நீங்கள் சொன்னதும் பொய்தானே...?''

''எது...?''

''எனக்கு சூர்யா சந்திரா என்று பெயர் வைத்திருக்க வேண்டுமென்பது...''

அவனின் முக பாவம் அதிதீவிரமாக மாறிக் குரலில் ஒரு உறுதி தொனித்தது.

''நோ. நோ. நிஜமாகத்தான் சொன்னேன் இருத்திகா. The face that had launched thousands of ships படித்திருக்கிறீர்களா...?'' சட்டென்று நிறுத்தி ''ஐயாம் ஸாரி...'' என்றான். ''நீங்கள் என்ன படித்திருக்கிறீர்கள், எங்கே போகிறீர்கள் என்ற எதையும் கேட்கவில்லை. நமக்குள் அறிமுகமே இன்னும் பூரணமாக நடக்கவில்லை. அதற்குள் நான் The face that had launched thousands of ships பேச வந்துவிட்டேன். என்ன முட்டாள்தனம் பார்த்தீர்களா...? முதலில் நீங்கள் எங்கே போகிறீர்கள் சொல்லுங்கள்...''

''டில்லி...''

''எதற்கு என்று நான் தெரிந்துகொள்ள லாமா...?''

''மேற்படிப்பிற்கு...''

''டாக்டரா...?''

''ம்ஹூம்...''

''இன்ஜினீரிங்கா...?''

''நோ நோ. வெறும் பி. ஏ. தான்.''

''வெறும் பி. ஏ. படிப்பிற்காக டில்லி வருகிறீர்கள்...? ஏன்...?''

''அதுதான் எனக்கும் தெரியவில்லை...''

''என்ன சொல்கிறீர்கள்...?''

''நிஜமாகத்தான் சொல்கிறேன். வெறும் பி. ஏ. படிக்க எதற்காக டில்லி போக வேண்டும் என்பது எனக்கே புரியவில்லை...''

''பின் எதற்காக வருகிறீர்கள்...''

''அம்மா போகச் சொன்னாள். போகிறேன்...''

''என்ன மிஸ் இருத்திகா இது...? மெட்ராஸ் கல்லூரிகளில் உங்களுக்கு இடம் கிடைக்கவில்லையா...?''

''மெட்ராஸ் கல்லூரிகளுக்கு யார் அப்ளை பண்ணினார்கள்...?''

''ஏன் பண்ணவில்லை...''

''அம்மா நான் டில்லிக்குப் போய்த்தான் படிக்க வேண்டுமென்றாள். சரி என்று சொல்லி விட்டேன்...''

''உங்களுடன் ஸ்டேஷனுக்கு வந்திருந்தார்களே, அவர்கள்தான் உங்கள் அம்மாவா...?''

இருத்திகா தலையாட்ட அவன் ஏதோ யோசனையில் ஆழ்ந்தவனாகச் சொன்னான்.

''அவர்களை எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கிறது...''

''நீங்கள் சௌதாமினியின் நாட்டிய நிகழ்ச்சி எதற்காவது போயிருக்கிறீர்களா...?''

அவன் புருவங்கள் சுருங்க ''அது யார் சௌதாமினி...'' என்று கேட்டான்.

''என்ன இப்படிக் கேட்டு விட்டீர்கள்... தமிழ்நாட்டின் தலைசிறந்த பரதநாட்டியக் கலைஞர் சௌதாமினியை யார் என்கிறீர்களே...? சமீபத்தில் டாக்டர் பட்டம் கூட வாங்கினார்களே...?''

''அப்படியா... எனக்குத் தெரியாது. ஆமாம் இதையேன் அவர்களைப் பற்றி ஏன் சொல்கிறீர்கள்...?''

''அம்மாவை அந்த நிகழ்ச்சிகள் எதிலாவது பார்த்திருக்கலாம் என்றுதான் சொல்ல வந்தேன்...''

''உங்கள் அம்மாவும் அந்த சௌதாமினியுடன் நாட்டியமாடுகிறார்களா என்ன...''

''சீ! என்ன நீங்கள்... அம்மாவைப் பார்த்தால் பரத நாட்டியம் ஆடுகிற மாதிரியா இருக்கிறது...?''

''ஏன்...? அவர்களும் அழகாகத்தானே இருக்கிறார்கள்...?''

''அழகு மட்டும் போதுமா நாட்டியம் ஆடுவதற்கு...?''

''அப்படிச் சொல்லவில்லை. நீங்கள் பேசியதைக் கேட்டால் அப்படி இருக்கலாமோ என்று—''

''நோ. நோ. அம்மா சௌதாமினிக்குப் பின்பாட்டுப் பாடுகிறாள். அதனால் அந்த நிகழ்ச்சி எதிலாவது பார்த்திருக்கலாமென்று சொன்னேன்...''

''ம்ஹூம். இதுவரை நான் பரதநாட்டிய நிகழ்ச்சி எதையும் பார்த்ததில்லை.''

அதன் பின்னரும் ஏதோ யோசனையுடன் இருந்த போது ரயில் ஏதோ ஒரு ஸ்டேஷனில் நிற்க — அர்ஜுன் இரண்டு காப்பிக்கும் ஒரு டீக்கும் ஆர்டர் கொடுத்து விட்டு,

''நீங்கள் காபி சாப்பிடுவீர்கள் இல்லையா...?'' என்று இருத்திகாவிடம் கேட்டான்.

''காபிதான் சாப்பிடுவது'' என்று பதிலுக்குச் சிரித்தாள் அவள்.

''நான் கூட காபிதான். மெஸ்ஸில் எல்லோருக்கும் டீ என்றால் எனக்கு மட்டும் ஸ்பெஷலாக ப்ரூ அல்லது நெஸ்கஃபே உண்டு...''

அதற்குள் மூன்று சின்ன ரயில்வே பிளாஸ்குகளில் இரண்டில் காபியும் ஒன்றில் டீயும் வர டீயைக் கோப்பையில் ஊற்றி அந்த மார்வாடிப் பெண்மணியிடம்கொடுத்து விட்டு, பின்பு இருத்திகா ஊற்றி வைத்திருந்த காபிக் கோப்பையை எடுத்து உறிஞ்சின அர்ஜுன் ''காபி அவ்வளவு ஒன்றும்மோசமில்லை...'' என்று சொல்ல அதை மௌனமாய் ஆமோதித்த இருத்திகா கேட்டாள்.

''மெஸ் என்கிறீர்களே எந்த மெஸ்...?''

''எங்கள் ராணுவ மெஸ்தான்...''

''நீங்கள் இராணுவத்திலா இருக்கிறீர்கள்...''

''ஐயாம் ஸாரி. நான் யூனிபாரத்தில் இருப்பதாக நினைத்து நீங்களாகப் புரிந்து கொண்டிருப்பீர்கள்என்று விட்டுவிட்டேன்!''

''ஆனாலும் நீங்கள் ராணுவத்திலோ விமானம் அல்லது கப்பற்படையிலோ தான் இருக்க வேண்டும் என்பதை நான் ஊகித்துத் தெரிந்து கொண்டு விட்டேன்!''

''எப்படி...?''

''ஒட்ட வெட்டப்பட்ட உங்களின் கிராப்பிலிருந்து...''

பெரிதாய்ச் சிரித்தான் அவன். தான் ராணுவத்தில் காப்டனாக இருப்பதைச் சொன்னான். அப்பா தாத்தா எல்லோருமே ராணுவ வீரர்கள்தான். தாத்தா கர்னல். அப்பா பிரிகேடியர். இரண்டு மூன்று தலைமுறைக்கு மேலாக டில்லியில் வசிப்பவர்கள். அநேகமாகக் கொங்கிணி பேசுவது மறந்து போய் இந்தியும் ஆங்கிலமுமே தாய்மொழி போல் மாறிவிட்டன. ஒரே பிள்ளை. அம்மா இல்லை. அப்பா ஓய்வு பெற்று வீட்டில் இருப்பவர். பள்ளிப் படிப்பு, கல்லூரிப் படிப்பு, ராணுவப்பயிற்சி தற்போதைய முகாம் எல்லாமே டில்லியில்தான். நல்ல வசதியான குடும்பம். பெரிய அரண்மனை மாதிரி வீடு. ஏகப்பட்ட பணியாட்கள் நாலைந்து கார்கள். அவன், அப்பா இரண்டே பேர்தான்.

பகல் சாப்பாட்டிற்குள் அத்தனையும் சொல்லி முடித்து விட்டான். சாப்பாட்டிற்கு விஜயவாடாவில் ரயில் நிற்க, மூன்று சாப்பாடு கொண்டு வரச் சொன்னான். மார்வாடிப் பெண்மணி தான் கையோடு

சப்பாத்தி கொண்டு வந்திருப்பதாகச் சொல்லியும் விடவில்லை.

''இல்லை மாஜி. எங்களோடு இப்போது சாப்பிடுங்கள். ராத்திரி சாப்பாட்டிற்குப் பதில் நாம் எல்லோருமே உங்கள் சப்பாத்தியைச் சாப்பிடலாம்...'' என்று அவளைச் சாப்பிட வைத்தான். பின்னர் அரை டஜன் ஆரஞ்சுப் பழங்களை வாங்கி இரண்டை இருத்திகாவிடம் கொடுத்து இரண்டு பழங்களை உரித்து மார்வாடிப் பெண்மணிக்குத் தந்து மெல்லப் பேச்சுக் கொடுத்தான்.

''எதுவரை போகிறீர்கள் மாஜி...?''

''டில்லிக்குத்தான்...''

''அங்கேதான் இருக்கிறீர்களா...?''

''இல்லேப்பா. இங்கே சென்னையில் ஒரு பையனும் டில்லியில் ஒருவனுமாக இருக்கிறார்கள். மாறி மாறி இங்கே ஆறு மாதமும் அங்கே ஆறு மாதமுமாக இருப்பேன்...''

''இந்த வயதான காலத்தில் எம்மா இப்படி அலைகிறீங்க...? ஒரே இடத்தில் நிலையாக இருக்கக் கூடாதா...?''

அவ்வளவுதான், கிழவி புலம்பத் தொடங்கி விட்டாள். தன் பிள்ளைகளும் மருமகள்களும் தன்னைப் படுத்துகிற பாட்டைச் சொல்லி அழத் துவங்கினாள்.

''அவர் இருந்தவரை ராணி மாதிரி இருந்தேன். இப்போ பாருப்பா. காடாறு மாசம் வீடாறு மாசம் என்கிற மாதிரி டில்லிக்கும் மதராசுக்குமாக அலைகிறேன். அதுவும் என் சின்னப் பிள்ளை 'உனக்கு இரண்டாம் வகுப்பு டிக்கெட் எடுத்தால் போதாதா, என்று கேட்கிறான். சணவனுக்குப் பின் மனைவி உயிர் வாழ்வதென்பது எவ்வளவு கஷ்டமான விஷயம் தெரியுமாப்பா உனக்கு...''

அர்ஜுன் அவளுக்காக நிஜமாக வருத்தப்பட்டான். கிழவியின் தோளைத்தொட்டு ஆறுதல் சொன்னான். பின்னர்,

''மாஜி, உங்களுக்கு இப்படி உட்கார்ந்து வருவது சிரமமாக இருக்கும்... சற்று படுத்து ஓய்வெடுங்கள்...'' என்றவன் உட்காருகிற ஸீட்டைப் படுப்பதற்கு வசதியாக முதுகுப் பக்கமிருந்த குஷனைப்புரட்டி, கிழவியின் ஹோல்டாலை விரித்து, தலையணை போட்டுப் படுக்க வைத்ததைப் பார்த்துக் கொண்டே இருந்த இருத்திகாவிற்கு ஆச்சரியமாக இருந்தது. ஒரு ராணுவ காப்டனுக்கு இருந்த மென்மையும் இரக்கமும் முரண்பாடாகப் பட அவன் வந்து தன் அருகில் உட்கார்ந்ததும் மெதுவாகச் சொன்னாள்:

''ஒரு ராணுவ அதிகாரிக்குள் இத்தனை மென்மையா...? ஆச்சரியமாக இருக்கிறது.''

மெதுவாகச் சிரித்தான் அவன்.

''அதற்குக் காரணமிருக்கிறது இருத்திகா. பிறந்ததிலிருந்து எங்கள் வீடு பெண் வாசனையை அறிந்ததில்லை. அம்மா செத்துப் போய் சகோதரிகள் யாருமின்றி, அத்தை, சித்தி என்கிற உறவுகளை அறியாமல் வீட்டில் வேலை செய்யக் கூட ஒரு பெண்மணி இருந்ததில்லை- அப்படிப்பட்ட சூழ்நிலையில் வளர்ந்தவனுக்குத் தான் பெண்களின் அருமை தெரியும். அவர்களின் அன்பும் அரவணைப்பும் தேவைப்படும். டூ. நோ. ஹௌ ஐ லாங் ஃபார் மதர்'ஸ் லவ்...?''

தன்னையும் மீறிப் பெருமூச்சு விட்டவன் உடனே குரல் மாற ''ஏன் இருத்திகா டில்லியில் உங்களுக்கு யார் இருக்கிறார்கள் என்று சொல்லவே இல்லையே...?'' என்று கேட்டான்.

''ம்... ஒரு ராணுவ அதிகாரி இருக்கிறார்...'' என்றாள் அவள் ஒரு தீவிர முகபாவனையுடன்.

உடனே பரபரப்படைந்தான் அர்ஜுன்.

''ராணுவ அதிகாரியா...? யார் அவர்...? பெயரென்ன சொல்லுங்கள்...? ராணுவ அதிகாரியானால் நிச்சயம் எனக்குத் தெரிந்திருக்க வேண்டும்...''

''உங்களுக்கு நன்றாகத் தெரியும் அவரை...''

''யார் அது? சொல்லுங்கள்...''

''மிஸ்டர் அர்ஜுனப்பா...''

ஓஹோஹோ என்று பெரிதாய்ச் சிரித்தவன் கிழவி திரும்பிப் பார்க்க சட்டென்று தன் சிரிப்பை மட்டுப்படுத்திக் கொண்டு அவளருகில் குனிந்து சொன்னான்.

''தாங்க்யூ இருத்திகா. உங்களுக்கு அந்த நம்பிக்கை இருக்கிற பட்சத்தில் கடைசி வரை — அதாவது நீங்கள் டில்லியில் இருக்கிற வரை மட்டுமில்லை, என்னுடைய கடைசி மூச்சு வரை அதைக் காப்பாற்றுகிற பலமும் தைரியமும் திடமும் என்னிடம் நிறைய உண்டு...''

—சொன்னபோது அவன் கண்கள் விவரித்துச் சொல்ல இயலாத ஓர் உணர்வால் மின்ன, அவள் கண்களிலும் அதே மின்னலை மிக ஆர்வத்துடன் தேடி ஆழமாகப்பார்க்க—

அந்தப் பார்வையின் ஆகர்ஷணசக்தியைத் தாங்க மாட்டாதவளாகத் தலையைக் குனிந்து கொண்டாள் அவள்...


(தொடரும்)

ஆவக்காய்

ஆவக்காய் என்பது ஊறுகாய்ப்பிரியர்களுக்குப் பிடித்தமான பெயர். இந்தப் பெயர் ஏன் வந்தது?

தெலுங்கில் ஆவாலு என்றால் கடுகு என்றும் காய் என்றால் மாங்காய் என்றும் பொருள். இந்த மாங்காய் ஊறுகாய்த் தயாரிப்பில் கடுகை அரைத்துச் சேர்ப்பதால் 'ஆவக்காய்' ஆகிவிட்டது.

—'யெஸ்.'



வெள்ளித்திரை

மகுடி



ஒரே ஒரு கிராமமாம். அந்த ஊரில் கொம்பு மிட்டாய் விற்கிற அமாவாசை என்கிற அப்பாவிக்குப் புல்லாங்குழல் ஊத வருமாம். ஊத வரும் என்றால் சாதாரண ஊத வரும் இல்லை. மகுடி வாசித்தால் புற்றிலிருந்து பாம்பு கிளம்பி வந்து ஆடாமல் அசையாமல் நின்று கேட்குமாம். அந்தக் கிராமத்தில் ஒரு பணக்காரப் பண்ணையாராம். அவருக்கு அம்பாய் ஒரு பெண்ணாம். அந்தப் பெண்ணுக்கு இசையின் மேல் காதலாம். முறை மாப்பிள்ளையை முறைத்துக் கொண்டு அமாவாசையைக் கல்யாணம் செய்து கொள்வாளாம். குழந்தை பிறக்குமாம். பணக் கஷ்டத்தில் மகுடி வாசிப்பதை அடமானம் வைத்து விட்டதால், குழந்தையை வந்து பாம்பு கடித்து சாகிறவரைக்கும், அப்பாவும், அம்மாவுமாய் சண்டை போட்டுக் கொண்டு திரிப்பார்களாம், சண்டையோடு இரண்டு பேரும் பிரிந்து போக, அமாவாசைக்கு சினிமா அதிர்ஷ்டம் அடித்து அருண்குமார் என்கிற இசையமைப்பாளனாகி...

கொட்டாவி வந்திருக்குமே உங்களுக்கு? சும்மா கதையைக் கேட்டதற்கே இப்படி என்றால் படத்தில் போய் உட்கார்ந்தால் எப்படி இருக்கும்? இசைக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்தான். அதற்கு இன்னும் சுவையான சம்பவங்களாய்ப் பொறுக்கிக் கொள்ளக் கூடாதோ?



இளசு இளசாம் முகங்கள். தூசு தட்ட வேண்டிய பழைய கதை. இரண்டையும் கலந்து 'குயிலே, குயிலே.'

எடுத்தவுடனேயே மலைப் பிரதேசம். பனி மூடிய ரயில்வே ஸ்டேஷன். வந்து இறங்குகிற ஒற்றைப் பிரயாணியாய் மீசை முளைக்காத இளைஞன். முகவரியைத் தேடிப்போகிற வழியில், துள்ளும் இளமையுடன், குயிலுடன் சம்பாஷணை செய்யும் பெண்ணின் துடுக்கான அறிமுகம். அப்புறம் அவளைக் கவர அவன் மேற்கொள்ளும் சாகசங்கள்...

இமே மிரட்டலுக்குப் பயந்து பாகவதர் (எஸ். எஸ். சந்திரனுக்குத் தான் அந்த மையிட்ட கண்களும், வேஷ்டி அங்கவஸ்திரமும் எத்தனை பொருத்தம்!) ராக ஆலாபனையுடன் பாடிக் கொண்டிருக்க, மேலே உயரமான காம்பவுண்டு சுவரில் உட்கார்ந்து கொண்டு காதலிக்குத் தெரிகிற மாதிரி வாயசைக்கிற காதலன் சொந்தமாய்ப் பாடுகிறான் என்று அவள் மெச்சிக் கொண்டிருக்கும் நேரத்தில், தெருவோடு போகிறவன் பாகவதரை வேடிக்கை பார்க்க, அவர் கப் பென்று வாய் மூடிக் கொள்ள... அங்கங்கே சுவையான காட்சிகள் இந்த மாதிரி உண்டு.

குயிலே குயிலே

ஓரளவுக்காவது மனசில் நிற்கிற மாதிரி பண்ணியிருக்கிறார் என்றால் வடிவுக்கரசியைச் சொல்லலாம். புருஷன் குடிந்தான் என்று பிரிந்து வந்து விட்டு, பிழைப்புக்காக உடம்பை விற்கிறவர், தினமும் சாராயம் தேடி அலைவது நெருடலாயில்லை?

மோகனும், நளினியும் முதலிரவில் கதவைத் தாழ்ப்பாள் போட்டுக்கொள்வதும் கதவைத் தட்டி எழுப்பி, 'இந்தப்போர்வை வேண்டாம். கண்டவனும் வந்து தினம் படுத்த படுக்கை, என்னோட பட்டுப்புடவை யைப் போட்டுக்குங்க' என்று சொல்லி எடுத்து வருகிற கட்டம் இதம்.

இளையராஜாவின் குரலில் 'கரட்டோரம் மூங்கில் காடு' பாடலும், மற்றும் எஸ்.பி.பி. ஜானகி குரல்களில் 'நீலக்குயிலே உன்னோடு நான்' பாடலும் மனத்தில் ரீங்கரிக்கின்றன.

புல்லாங்குழலில் இசைக்குத் தகுந்தமாதிரி விரலசைப்பது எப்படி என்று மோகனும், வீணையில் நாதத்திற்குப் பொருந்துகிறமாதிரி விரலோட்டுவது எப்படி என்று நளினியும், ரசிக்கத் தகுந்த மாதிரி படம் எடுப்பது எப்படி என்று டைரக்டர் சக்தியும் தெரிந்து கொண்டிருக்கலாம்.

நாட்டியம் சொல்லித்தருகிறேன் பேர்வழி என்று சபலத்தோடு இடுப்பைப் பிடிக்கிற நட்டுவனாராய் வெண்ணிற ஆடை மூர்த்தி. மனுஷர் முகத்தைப் பார்த்தாலே புன்னகை வருகிறது. ஆனால் பாகவதரும், நட்டுவனாரும் மோதுகிற இடம் ரசமில்லை, விரசம்.

சண்டை போட்டு ஆரம்பித்த உறவு நட்பாய் மாறிப் போக, நண்பனையும், அவன் காதலியையும் இணைத்தே தீருவது என்ற வைராக்கியத்துடன் அறிமுகமாகும் இளைஞனாய் பிருதிவிராஜ். மனசில் நிற்கிற பாத்திரம். நாயகனாய் அறிமுகமாகிற ரகுவுக்குக் கொழு கொழுவென்று மலையாள முகம். சற்று ஓய்வான கண்கள். நாயகி ராணிக்குச் சரித்திரம் பேசும் மூக்கு. உணர்ச்சிகள் காட்ட இரண்டு பேரும் சளைக்கவில்லை.

ஆனால் அத்தனை பேரையும் தூக்கிச் சாப்பிட்டு ஏப்பம் விடுகிற ஒருத்தர் உண்டு. 'நாகப்பறவை' பவனி வரும் ராதாரவி. பழுது சொல்ல முடியாதபடிக்கு அத்தனை அற்புதமாய் முரடும், முன்கோபமுமாய் அசத்துகிறார்

அனுராதா, தவக்களை — முந்திரி பருப்பு, ஏலக்காய்.

ஷ்யாமின் இசையில் ஜேசுதாஸின் 'பால் நிலா வேளையில்' மட்டும் மனத்தைத்தொடுகிறது.

காதலர்கள் உயிர் பிழைத்தால் படம் செத்து விடும் என்கிற பயம் நம் டைரக்டர்களுக்கு எப்பொழுது விலகும்?

—ஜெயமன்மதன்



அன்புள்ள ரஜினிகாந்த்

1

இந்த வாரம் மீனுக்குட்டிக்காக

குண்டுக்கன்னத்துடன் வீல்சேரில் அந்த உம்மணாமூஞ்சி!

சும்மா இருக்கக் கூடாதோ இந்தக் கருணை இல்லத்து வேலைக்காரர்கள். உசிலைமணி ஒரு பக்கம் சீண்டுகிறார். மகேந்திரன் ஒரு பக்கம் சீண்டுகிறார்.

அந்தக் குண்டு முகத்தில் ஒரு புன்னகையின் கீற்று? ஊஹூம்.

அப்புறம் புஸ்தகத்தில் அம்மா என்ற வார்த்தையைப் பார்த்தவுடன் அதைப் பென்ஸிலால் கிறுகிறு என்று கீறி 'சொதக்' 'சொதக்' என்று ஓட்டை போட்டு — அம்மாவின் மேல் அத்தனை ஆத்திரம்; அனாதையாய் விட்டுவிட்டுப் போய்விட்டாளே!

எல்லோரும் பார்க்கத் துடிக்கிற நடிகர் ரஜினிகாந்த் வந்த பின்னாலும் சரி அந்த உம்மணாமூஞ்சி அப்படியேதான்.

ராத்திரி யாருமறியாமல் ரகசியமாய்ப்போய் ரஜினியின் அன்னை மூர் ஆலயம் பார்த்த பின்னாடிதான் ரஜினி அங்கிளிடம் தப்பாக நடந்து கொண்டு விட்டோம் என்று புரிகிறது.

அப்புறம் பாருங்களேன்.

என்னவோ படம் முழுக்க இப்படியே ஊமையாய் வரப் போகிறதாக்கும் அந்த நொண்டிக் குழந்தை என்று எண்ணுகிற வேளையில், எண்ணெய்க் கடுகு மாதிரி பொரிந்து தள்ளுகிற ஜோர் என்ன?

'என்னை எங்கம்மா கிட்ட சேர்க்காதீங்க ரஜினி அங்கிள்' என்று சொல்லும்போது உருகும் உருகல் என்ன?

பார்க்கிறவர் நெஞ்சை ஆக்கிரமித்து, அவர்கள் இதயத்தைப் பிசைந்து —இதற்கு மேல் என்ன சொல்வது?

—தொடரும்

தாயம்மா கிழவி

ஸ்ரீவத்ஸன்

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி-84
ரூ.250 - 3ம் பரிசுக் கதை

தாயம்மா கிழவிக்கு ஒரு வார காலமாகவே உடல்நிலை சரியில்லை — அவளுக்கென்று வீடோ வாசலோ குடிசையோ கிடையாது. காத்தவராயன் சத்திரத்தின் திண்ணையின் கோடியில் தான் இருப்பாள். படுப்பாள். பிள்ளை குட்டிகள் கிடையாது. ஓர் அனாதையேதான்.

அக்கம்பக்கத்தில் உள்ள வக்கீல் வீட்டம்மா, பாங்க் மானேஜர் மனைவி, பள்ளி ஆசிரியர் வீட்டம்மா, குருக்களையா வீட்டு அம்மா இவர்கள் தான் அவ்வப்போது எடுபிடிகளை அவளிடம் வாங்கிக் கொண்டு பழையதோ பலகாரமோ கொடுப்பார்கள். சாப்பிட்டுவிட்டுத்தெருக் குழாயில் தண்ணீர் குடித்து விட்டுச் சத்திரத்துத் திண்ணையில் படுப்பாள்.

கடந்த மூன்று நாட்களாகவே விடாத அடைமழை பெய்ததில் அவளிடமிருந்த இரண்டு மூன்று புடவைத் துண்டங்கள் நனைந்து விட்டன. உடல்நலம் சரியில்லாத போது ஈரப் புடவைத் துண்டங்களை ஈரக் காற்றிலேயே உலரப் போட்டுக் கட்டிக் கொள்ள நேரிட்டது. பணம் கொடுத்துப் புதுப் புடவை வாங்கித் தரவோ அல்லது கிழிசல் புடவைத்துண்டங்களை அளிக்கவோ யாருமே முன் வந்ததில்லை. அவர்கள் அபிப்பிராயத்தில் கிழிசல் புடவை பெறுவதற்கு உண்டான நிறைய வேலைகளைத் தாயம்மா கிழவியிடம் தாங்கள் வாங்காத போது புடவை எப்படித் தர முடியும்? ஒருவேளை பழைய சோறு,மீந்து போன பலகாரம் இவைகளே அதிகம் என அவர்கள் கணிப்பு.

யார் செய்த புண்ணியமோ ஒரு புண்ணியவான் அவள் மேல் இரக்கப்பட்டு 'முதியோர் உதவிப் பணம்' பெறும் ஒரு நபராக அவளை ஆக்கினார். மாதாமாதம் உதவிப் பணம் வரும். வருடத்திற்கு இரண்டு புடவைகள். கவலை இல்லை.

"மாதாமாதம் முப்பத்தைந்து ரூபாய் பணம் வருதே அதிலே புடவை வாங்கிக் காயல் சர்க்கார் புடவைக்குக் காத்திருக்க வேணுமா?" என தாயம்மாவைக் கேட்டால் "வருடத்துக்கு இரண்டு சர்க்கார் புடவையே இந்தக் கிழவிக்கு அதிகம்" என அவள் சொல்வாள்.

கடந்த ஒரு மாத காலமாகவே கிழவி கந்தல் புடவை இன்னும் கந்தலாகி விட்டதால் மறுபடி சர்க்கார் புடவைக்குச் சாதக பட்சி போல் காத்திருந்தாள்.

அன்று காலை முதல் மழை நின்று விட்டது. வானம் லேசாக வெளிவாங்க சூரியன் பிரகாசித்தான்.

ஈரமாய்க் கிடந்த இரண்டு புடவைத் துண்டங்களைச் சத்திரத்து வாசலில் கிடந்த ஒரு பெரிய பாறாங்கல்லின் மேல் உலர்த்தி விட்டு வெய்யிலில் உடம்பைக் காட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

மணி எட்டு இருக்கும்.

தெருவில் தண்டோரா சப்தம் கேட்டது.

"இன்னிக்கு காலை பத்து மணிக்குத் தாலுகா கச்சேரியில் முதியோர் உதவிப் பணம் வாங்குறவங்க வந்து வழக்கம்போல் புடவை வேட்டி வாங்கிப் போகலாம். இது சர்க்கார் உத்தரவு."

தாயம்மா செவிக்குச் சரியாகக் காதில் விழவில்லை.

தண்டோரா போடுபவன் அவளைத் தாண்டிப் போன போது அவள் கேட்டாள்:

"என்டா தம்பி, என்ன தமுக்கடிக்கிறே. எந்தப் பொணம் பொறப்பட்டிடுச்சா..."

"ஆமாம் கிழவி. உன் பொணம் தான் புறப்படப் போவுது. அதுக்குத்தான் இந்தத் தண்டோரா போடுறேன்."

"விளையாடாதே தம்பி. விஷயத்தைச் சொல்லு. என் பொணம் ஒருநாள் பொறப்படவேண்டியது தான். ஆனால் தண்டோரா போடும்படி நான் என்ன பெரியமனுஷியா? அனாதைப் பிணம். அதுக்கு ஏது தண்டோரா கிண்டோரா எல்லாம்."

"இன்னிக்குக் காலை பத்து மணிக்குத் தாலுகா ஆபீசிலே முதியோர் உதவிப்பணம் வாங்குபவர்களுக்குப் புடவை வேட்டி தராங்க."

"தம்பி நல்லாயிருப்பே நீ. கஞ்சிவரதப்பா என்று எவ்வளவு காலமாய் காத்திருக்கேன் தெரியுமா? ஒரு மாசமா கிழிசல் துண்டங்களைத்தான் கட்டிக்கிட்டுக் காலந்தள்றேன். வயிறு பசிக்கு சத்திர சோத்துக்கு சாப்பிட வர்ற பரதேசிங்க கூடப்போதும் போதாமல் நான் கிழிசல் புடவையைக் கட்டியிருக்கும் போது கிழவியின்னு கூடப் பார்க்காமே என்னைப் பார்க்கும் பார்வை சரியாயில்லை. அவங்க கண்களில் கொள்ளி வைக்க."

''சரி சரி. உடனே போய்க் க்யூவிலே நில்லு.''

''அதைவிட எனக்கு வேறு வேலே ஏது?''

''சட்டென்று போ. இல்லாட்டி யாராவது மந்திரிங்க வருவாங்கன்னு சேதிவரும். தாசில்தார் ரக்ஷைக் கட்டிக்கிட்டுப் பறப்பார். புடவை விநியோகமும் நடக்காது.''

''புறப்பட்டேன் இதோ.''

நான்கு வீடுகள் தாண்டிப் போனாள்.

வக்கீல் வீட்டம்மா வாசல் படியில் நின்றிருந்தாள்.

''அடிச்சக்கை தாயம்மா இடுப்பிலே இன்னிக்குப் புதுப்புடவை ஏறப் போகிறதாக்கும்.''

''இன்னிக்குப் புடவை தராங்களாம், அதான் கிளம்பிட்டேன்.''

''உனக்கு ஒரு வாரமா உடல் நலமில்லே. உன் கூட எங்க குமாஸ்தாவை அனுப்பறேன். உனக்கும் உதவியாய் இருக்கும்.''

''எதுக்கம்மா சிரமம். தடவைக்குத் தடவை நானே தானே போய் வாங்கி யாறேன்.''

''ஒரு முக்கிய விஷயம் தாயம்மா.''



''என்னம்மா?''

''புடவையை வாங்கிக் கொண்டு ஓரிடமும் போகாமல் நிற்காமல் என்கிட்டே வந்துவிடு. உன்கிட்டே ஒரு முக்கிய விஷயம் பேசணும். புரிஞ்சுதா?''

''சரிம்மா.''

''நீ வரியான்னு காத்துக்கிட்டு இருப்பேன்.''

தெருமுனையில் திரும்பும் போது பாங்க் வாசலில் மானேஜர் மகேஷ் நின்று கொண்டிருந்தான்.

''நீ புறப்பட்டு வருவேன்னு தான் நான் காத்திருக்கிறேன் தாயம்மா.''

''என்னம்மா விசயம்? பாமாயில் க்யூவுக்கு போகணுமா? நாளைக்கு ஆகட்டும்மா. நான் புடவை வாங்கத் தாலுகா கச்சேரிக்குப் போறேன்.''

''பாமாயில் கிடக்கட்டும் தாயம்மா. அதைவிட முக்கியம் உன் புடவை சமாசாரம்.''

''ஆமாம் அம்மா.''

''மறுபடி மழை வரும் போலிருக்கு. உனக்கும் உடம்பு ஒரு வாரமாய் சரியில்லே. குடை தரேன் கொண்டு போ. அதுக்குமுன்னாடி ஒரு டம்ளர் காப்பி தரேன். சாப்பிட்டு விட்டுப் போ. தெம்பாயிருக்கும்.''

''வேண்டாம்மா. இப்பதான் கஞ்சி குடிச்சேன்.''

''சரி சரி. நீ திரும்பி வரப்போ அவசியம் என்னை வந்து பாரு. நீயே சந்தோஷப்படும்படியே நான் ஒரு காரியம் செய்யப் போறேன்.''

மாரியம்மன் கோயில் வாசலுக்கு வந்து விட்டாள்.

கோயில் வாசலில் டைலர் தம்பு கடை வாசலில் நின்று கொண்டிருந்தான்.

''என்ன ஆயா தாலுகாபீசுக்கா. கிளம்பி விட்டாயா? சைக்கிளை எடுத்தாரேன். பின்னாடி குந்திக்க.''

''எதுக்குத் தம்பி இதெல்லாம்?''

''காலம் கெட்டுக் கிடக்கு. நீ புடவையை வாங்கிட்டு வரப்போ யாராவது பொறுக்கிப் பசங்க, திருடங்க புடவையைப் புடுங்கிகிட்டுப் போயிட்டா என்ன செய்வது?''

''என்கிட்டே யாரும் நெருங்க முடியாது.''

''சரி உன் இஷ்டப்படி செய். ஆனால் புடவையை வாங்கிட்டு நேரே என்னை வந்து பார். நீ சந்தோஷப்படும் படியான ஒரு காரியம் செய்யப் போறேன்.''

ஒரு வழியாகத் தாலுகாபீசுக்கு வந்து விட்டாள் தாயம்மா.

மழை வேகமாகத் தூற ஆரம்பித்தது.

தாயம்மா கார்டைக் கொடுக்கும்போது ''அடேடே, தாயம்மா. நீயும் வந்திருக்கியா சரி சரி. நீ புடவையை வாங்கிட்டதும் இங்கேயே இரு. உன்கிட்டே ரொம்ப ரகசியமா ஒரு சமாசாரம் சொல்லணும்.'' சேவகர் சொன்னார்.

அதேசமயம் தாசில்தார் அந்தச் சேவகரைக் கூப்பிட்டுக் கலெக்டராபீசுக்கு அனுப்பினார்.

சேவகர் தாசில்தாரைத் திட்டியபடியே மறுபடியும் தாயம்மாவிடம் வந்து ''அரை மணியிலே வருவேன். போயிடாதே. நான் வர நாழிகையானாலும் எனக்காக நீ காத்திருக்கணும். காத்திருந்தா உனக்கு ஒரு புதையல் கொடுப்பேன்'' என்று சொல்லி விட்டுப் போனார்.

நேரம் ஓடிக் கொண்டே இருந்தது. அட்டைகளை வாங்கிப் போய் மூன்றுமணி நேரமாகியும் ஒருவரையும் கூப்பிடவில்லை. கொட்டகையில் ஒரே முணுமுணுப்பு.

''எப்பதான் தருவாங்களாம்?''

''எப்ப வேணுமானாலும் தரட்டும். இடையாது என்று சொல்லாமல் இருந்தால் சரி. கொடுப்பாங்கல்லே.''

''போன தடவை கொடுத்த புடவை ஒரேயடியா மக்கிப் போய் ஒரே மாசத்தில் நார் நாராய்ப் போச்சு.''

''தானம் கொடுக்கிற மாட்டைப் பல்லைப் பிடிச்சுப் பார்க்கலாமா?''

''தானமா? நமக்கு உரிமையில்லையா கேக்க?''

''ஏன் உரிமையில்லே? தேர்தல் சமயத்தில் தொண்டர், தலைவர் சட்டமன்ற உறுப்பினர், மந்திரிங்க வீட்டுப்படி ஏறி எல்லாரும் ஓட்டுக் கேட்கல்லே.''

''அழுத பின்னேதான் பால் குடிக்கும்.''

''வாங்க கோஷம் எழுப்புவோம்.''

''ஆமாம். இல்லாட்டி வழி பிறக்காது.''

''கொடு கொடு! உடனே புடவை வேட்டி கொடு!''

''ஏமாத்தாதே! ஏமாத்தாதே!''

தாசில்தார் ஓடிவந்தார்.

''மந்திரி போனிலே பேசிகிட்டிருந்தார். நாழியாகி விட்டது. இதோ தரேன்.''

ஒருவழியாய்ப் புடவை வேட்டி வழங்கி முடிக்கப்பட்டு விட்டது.

தாலுகா கச்சேரி காம்பவுண்டே வெறிச்சென்றிருந்தது. இனிமேல் எப்போது கூட்டம் வருமோ?''

மணி ஐந்து.

கலெக்டர் ஆபீசுக்குப் போன சேவகர் வந்து பார்த்தார். தாயம்மா சுழி இல்லே. பதறிப் போனார்.

''நான் ஒரு துக்கிரிப் பய. அதிர்ஷ்டக் கட்டை. இல்லாட்டி கூட நின்னு தாயம்மா கிட்டே புடவையை வாங்கி இருக்க மாட்டேனா? கலெக்டர் ஆபீசிலே படுபாவிங்க நாழியாக்கிட்டாங்க. எவ்வளவு ஆசையோடு இருந்தேன். காண்ட்ராக்டர் சொன்னாரே, ஒரு புடவைக்கு முப்பது தரேன்னு. இழவு கிட்டே மூணு நாலு விட்டெறிஞ்சிட்டு வாங்கி முப்பதுக்கு விக்கப் பார்த்தேன்.

என் வாயிலே மண் விழுந்துடுத்து. இனிமே எங்கே போய்க் கிழவியைத் தேடறது.?''

வக்கீல் மனைவி இருப்புக் கொள்ளாமல் உள்ளுக்கும் வாசலுக்கும் அலைந்தாள்.

''மணி ஆறாகப் போகிறதே. தாயம்மாவைக் காணுமே. ஒருவேளை அந்தப் பேராசை ஜம்மம் பாங்க் மானேஜர் மனைவி தாலுகாவுக்கே போய் வாங்கியிருப்பாளோ? செய்தாலும் செய்திருப்பா. படு அல்ப மாச்சே. மூணு ரூபாயை விட்டெறிஞ்சு வாங்கி எவர்ஸில்வர் பாத்திரக்காரன் கிட்டே கொடுத்தா கண்ணை மூடிண்டு ஒரு வாட்டர் ஜக் கொடுத்திருப்பான். கிழவி மோசம் செய்துவிட்டதே!''


மானேஜர் மனைவி கணவனிடம் ''நீங்க சட்டுன்னு ஸ்கூட்டர்லே தாலுகாபீசுக்குப் போய் தாயம்மா கிழவி நின்னா பின்னாடி ஏத்திண்டு வாங்க. இல்லாட்டி நமக்குத்தான் நஷ்டம்.''

''ஸ்கூட்டர் பின்னாலே கிழவியா? குமரியானாலும் பரவாயில்லை.''

''கிண்டல் போதும். உடனே புறப்படுங்க. நீங்க தாமதிக்கிற ஒவ்வொரு நிமிடமும் அந்தப் புடவை அந்தத் தரித்திரம் பிடிச்ச வக்கீல் மனைவி கையில் போய்ச் சிக்கிடும்.''

''போகட்டும் போ. அல்பம் மாதிரி உனக்கு ஏன் அந்தப் புடவை?''

''நம்ம வேலைக்காரி பொங்கலுக்கு புதுப் புடவை வாங்கித் தராட்டி வேலையைவிட்டு நின்னுடுவாளாம். அப்புறம் யார் வீட்டு வேலை செய்யறது? நாம நஷ்டப்பட முடியுமா அதுக்காகத்தான் தாயம்மாகிட்டே அதை இரண்டு மூணு ரூபாய்க்கு வாங்கி வேலைக்காரியிடம் கொடுக்க நினைச்சேன். இவ்வளவு நேரம் நீங்க பேசி வீண் பொழுது போக்குகிறீர்கள். புடவை எப்படிக் கிடைக்கப் போகிறது. இந்நேரம் அந்த வக்கீல் மாமி வாங்கிப் பத்திரப்படுத்தி இருப்பாளே...''



டைலர் தம்பு தன் தலையைப் பிய்த்துக் கொண்டிருந்தான்.

''படுபாவி கிழவி. போய் ரொம்ப நேரமாச்சேன்னு வந்து பார்த்தா கிழவியைக் காணும். அதுகிட்ட இரண்டு ரூபாய் கொடுத்துவிட்டு அதை வாங்கி பத்து பதினைந்து ஜாக்கெட் தைச்சு ஆத்து திருவிழாவின் போது வித்தா மூட்பது நாப்பது லாபம் வரும்னு நான் ப்ளான் போட்டேன். என் வாயிலே மண்ணைப் போட்டு விட்டாள் கிழவி. அதிர்ஷ்டக்கட்டை நான்.''

இப்படி ஒவ்வொருவரும் கிழவியின் புதுப் புடவையை அபகரிக்கப் போட்டி போட்டுக் கொண்டிருந்த போது தாயம்மா கிழவி எங்கே போனாள் புடவை என்னாச்சு என்பது அவர்களுக்குப் புரியாத புதிராக இருந்தது. அதற்கு விடை காண வேண்டு மானால் சுவரன்கோவில் வாகன மண்டபம் அருகில் போக வேண்டும்.

''ஏ கிறுக்கு பிடிச்சவளே. நான் சொல்றது காதிலே விழுதா?''

''கோவில்தானே. ஐயர் வந்து திறப்பாரு.''

''நீ நாசமாய்ப் போக. நான் அதையா கேட்டேன். நீ வயசுக்கு வந்த பொம்பளை இருபத்தி ஐந்தாவது இருக்கும். ஒரு கிழிசல் புடவைத் துண்டத்தைக் கட்டிக் கிட்டு ஊர் பூரா பவனி வரே.

''வஞ்சனை இல்லாமல் ஆண்டவன் உனக்கு நல்ல அங்க அமைப்புக்களை வாரி விட்டிருக்காரு. உன்னைப் பைத்தியம்னு பேசுகிற கும்பல்கூட உன்னை அனுபவிக்க நாக்கைத் தொங்கப் போட்டுக்கிட்டு நாயா அலையுறாங்க.

''நீ யார் பெத்த பெண்ணோ என் வயிறு எரியுது. இந்தா இந்தப் புடவை எனக்குச் சர்க்காரிலே கொடுத்தாங்க. என்னைவிட இந்தப் புடவை உனக்குத் தான் அவசியம்னு எனக்குத் தோணுது. இதை உனக்குத் தரேன். உடுத்திக்க. தயவு செய்து கந்தல் புடவையிலே வரதை இந்த 'நிமிட்'டோட நிறுத்திக்க. அந்தக் கொள்ளிக் கண்கள் உன் உடல் மேலே மேயறது நிக்கட்டும். இந்தா கட்டிக்க.''

கட்டிக் கொண்டாள் அந்தப் பைத்தியம்.

''நல்ல மகராசியாய் இரு'' வாழ்த்தி விட்டு இரவு எட்டு மணிக்கு சத்திரத்துக்கு வந்து படுத்தாள் தாயம்மா கிழவி.

''சாமி ஆண்டவனே! என்னை எப்பவும் ஏழையாவே வச்சிடு. அப்பதான் மனசிலே கொஞ்சமாவது ஈவிரக்கம் இருக்கும். இருமா சர்க்காரிலே கொடுத்த புடவையைப் பேரம் பேசி விலைக்கு விக்காமல் ஒரு பொம்பளை மானத்தைக் காப்பாத்துன்னு என் புத்தியிலே பட்டதுக்குக் காரணமே நான் ஏழையாய் இருப்பதால் தான்!''

வேங்கை வனம்

அத்தியாயம் 17

கானப்பேரெயில் கோட்டை

வேங்கைவனமாம் கானப்பேரெயில் கோட்டையின் மேற்கு வாசலுக்கு வெகு தூரத்தில், ஓர் அடர்ந்த வனாந்திரத்தில் ஆலோசனையில் மூழ்கித் தவித்துக் கொண்டிருந்தார்கள் காளிங்கனும் இளங்கோவேளானும்.

தொலையில் உடன் வந்த பாண்டிய வீரர்கள் புரவிகளைப் புல்மேய விட்டுவிட்டு ஒரே மூச்சாகப் பயணப்பட்டு வந்த சளைப்பு நீங்க ஓய்வு கண்டிருந்தனர்.

நிலாவெளிச்சம் தரையில் வெள்ளிப்பாய் விரித்திருந்ததால் தீப்பந்தங்களும் ஓய்வு கண்டிருந்தன.

''காளிங்கரே! முடிவுதான் என்ன? இப்படியே உட்கார்ந்திருந்தால் பொழுது தான் விடிந்துவிடும்'' என்றான் இளங்கோவேளான். அவனது குரலில் 'ஏதோ பெரிய வீராதி வீரனைப் போலக் கிளம்பி வந்து, இங்கே இடிவிழுந்தாற்போல் அமர்ந்துவிட்டால் எப்படி?' என்பது போன்ற ஏளனம் தெரித்தது.

பலத்த சிந்தனையுடன் போராடிக்கொண்டிருந்த காளிங்கன் இளங்கோவேளானைக் குனிந்த வண்ணமே கண் மலர்த்திக் கூர்ந்து கவனிக்கிறான். அந்தக் கவனிப்பு, 'வேங்கை வனம் என்பது வேடிக்கை வனமல்ல' என்பது போலிருந்தது.

''இரவில் நுழையலாமா? விடிந்ததும் நுழையலாமா என்று யோசிக்கிறேன் இளங்கோ!'' என்றான் காளிங்கன்.

ஆ! இந்தக் கானப்பேரெயில் கோட்டையின் கிழக்கு வாசல் பிரதான தலைவனாகவும் தானைத் தலைவர்களுள் ஒருவனாகவும்இருந்த கௌரவம் எங்கே?

இப்போதும் அந்தக் கௌரவம் இருக்குமா? துரோகியாக மாறிய பழியால் அழுக்கேறிய அகௌரவம் இருக்குமா?

விஷயம் தெரியாமல் இருந்தால் ,செயல் விஜயமாக முடியும்! தெரிந்திருந்தால்...

பாண்டிய நாடுவேறு அவனது தலையை ஏலம் போட இருக்கிறது...

விஜயமாக முடிகிற காரியந்தானா இது? ரகசியமாகவும் எவ்வாறு முடிக்க இயலும்?

''இளங்கோ! ஒரு காரியம் செய்வோம். நமது வீரர்கள் இங்கேயே இருக்கட்டும். இவர்கள் மொத்தமாக ஓரிடத்தில் இருப்பதும் சந்தேகத்துக்குரியது. ஆபத்தை விளைவிக்கும். கோட்டையின் மேற்குப் புறமாகவே பிரிந்து ஆங்காங்கே சிதறிக் கிடக்கட்டும். நாமிருவரும் பத்து வீரர்களுடன் கோட்டை வாயிலை அடைவோம். என்னைக் காவலர்கள் சந்தேகிக்க நியாயமில்லை. உள்ளே நுழைந்து விட்ட பிறகு மேற்கொண்டு ஆலோசிப்போம்!''

''உள்ளே சென்று ஆலோசிப்பதாவது? அகப்பட்டுக் கொண்டால் எவ்வாறு தப்புவது என்பது குறித்தா? எதையும் தீர்க்கமாகச் சிந்தித்துச் செயல்படுங்கள். காளிங்கரே! கானப்பேர் கோட்டை கானப்பயங்கரமாமே?''

''பயப்பட வேண்டாம். சில சிந்தனைகள் நிலைமைக்கேற்ப, நிலவரங்களுக்கேற்ப ஏற்படும்.''

''ஏன், ரகசியமாக நுழைய இங்கு சுரங்கங்களில்லையா?''

''பன்னிரண்டு சுரங்கங்கள் உண்டு.''

''ஒன்றில் நுழைய வேண்டியதுதானே?''

''யாருக்குத் தெரியும்? வேங்கை மார்பனுக்கும் அமைச்சருக்கும் மட்டுமே தெரியும்.''

''பின் ஏன் வீராதி வீரர் போல் புறப்பட வேண்டும்? எதற்காக ஒரு குட்டி சைன்னியம்?''

''நானா புறப்பட்டேன்? பாண்டியமன்னர் ஆணை. அதனாலென்ன? துணிந்து என்னுடன் வாருங்கள். எனக்கு என் தலையின் பேரிலும் எனது தங்கையின் உயிரின் பேரிலும் கவனம்

கோவி. மணிசேகரன்



உண்டு. எனது தங்கையை வைத்துத்தான் இங்கே சதுரங்கம் ஆடப்போகிறேன்.''

இளங்கோ வேளான் மட்டும் என்ன செய்து விட முடியும்? அவனுக்கும் மன்னர் உத்தரவுதானே? மறுக்கத்தான் முடியுமா?

காளிங்கன் சொன்னது போலவே வீரர்களைச் சிதறச் செய்து பரவலாக்கினான் இளங்கோவேளான். பின்னர் பத்து வீரர்களுடன் காளிங்கனைப் பின்தொடர்ந்தான்.

வெகுதொலைவில் ஏதோ விளையாட்டுப் பொம்மை போலச் சிறியதாகத் தெரிந்த கோட்டை. அருகே நெருங்க, நெருங்க...

இளங்கோ தலையை அண்ணாந்தி மருண்டு மயக்கமுற்றே கவனிக்கிறான்.

ஒரே நேர்க்குத்தாக இல்லாமல், பாதி வரை உயர்ந்து, உயர்ந்து மறுபாதி சற்றே பின்புறமாகச் சரிந்து, அந்தச் சரிவினூடே மேலே உயர்ந்து அந்த உயர்வில் குடிகைகள் வித்தியாசமான பாணியில் விளங்குகின்றன.

நான்கு திசைகளிலும் இதுபோலவே கோட்டை காணப்படுகிறது.

நடுவே அகன்ற வானம் பார்த்த சதுர வடிவம்.

அந்த வானம் பார்த்த வடிவத்துக்கு நடுவில் பூமியிலிருந்து எழுப்பப்பட்ட நீண்ட ஸ்தூபி. கோட்டையின் உயரத்தையும் மீறிக் கம்பீரமாக நிற்கும் கல்தூண்.

நாலுதிசையிலும் கம்புகளின் மீது மீன் கொடி பெருமிதத்துடன் பறக்கிறது.

''இளங்கோ! புறப்படு.''

காளிங்கன் குரல் கேட்டுத் தனது நிலையடைந்த இளங்கோ வேளான், ''வேங்கைமார்பன் துள்ளலுக்கு இப்போது தான் காரணம் புரிகிறது'' என்றான்.


பழகிவிட்டதாலோ என்னவோ அதன் பிரமிப்பை உணராத காளிங்கன் சிரித்துக் கொண்டிருந்தான்.

''காளிங்கரே! அது என்ன ஸ்தூபி?''

''பூம்புகாரின் சதுக்க பூதம் போல இது ஒரு பலி பீடம் ஸ்தூபி. வென்ற எதிரிகளின் தலையை இங்கே பலியிடுவர். இந்த ஸ்தூபியின் உச்சியில் போர்க் காலங்களில் அக்னி மூட்டி இரவும் பகலுமாய் அகண்டாகாரமாய் எரியும். அது அடங்காத வரையில் வேங்கை வீரர்கள் அடங்க மாட்டார்கள்.''

''ஓ... அப்படியா?''

இளங்கோவேளான் வியப்பு ஸ்தூபியின் உச்சிக்கே சென்று வியர்த்துக் கொட்ட வைத்தது.



''இளங்கோ! தயங்காமல் வாருங்கள். நானிருக்கிறேன். எனது தலை போகிறதோ இல்லையோ உங்கள் தலையைக் காப்பேன். புறப்படுங்கள்.''

ஒருவாறு தன்னைத் தேற்றிக் கொண்டு காளிங்கனைப் பின் தொடர்ந்தான் இளங்கோ வேளான்.

அகழியையொட்டி மலைக்கத்தக்க பெரு மதில்சுவர். ஓ... இதுதான் பேரெயிலோ?

கோட்டைக்குள் நுழைய வேண்டுமானால் அதோ நெடிதோங்கி நிற்கும் பெரும்பாலம் இறங்க வேண்டும். அந்தப் பெரும்பாலப் பலகை இரும்புப் பட்டைகளால் பின்னப் பட்டு முப்பிரிவுகளையுடையது. நடுப்பிரிவு சின்ன பலகைப்பாலம். அது மட்டும் இறங்கு மானால் அரண்மனை சம்பந்தப்பட்ட ரதம், பல்லக்கு இரு வரிசை கட்டிய வீரர்கள் ஏறிச் செல்லலாம். போர்க்காலங்களில் மட்டுமே வரிசை கட்டியமுப்பிரிவுப் பலகைப் பாலம் பெருத்த பூதாகாரமான சத்தத் துடன் இறங்கும். அது அகன்ற பாதைக்கு வழிவகுக்கும்.

யாராவது உள்ளே நுழைய வேண்டும் என்றால் வாயில் கைகுவித்துச் சங்கேத முறையில் ஒலியெழுப்ப வேண்டும். பிறகு கொத்தளங்களில் நின்று ஆட்கள் கவனித்துச் சமிக்ஞை செய்வர். ஒருவன் கோட்டையின் பெருங்கதவில் அமைந்த திட்டி வாசலைத் திறந்து கொண்டு எட்டிப் பார்த்து காவற் பேராட்கள் என்றுணர்ந்த பின்னரே முப்பிரி வின் நடுப்பிரிவு சிறுபாலத்தை இறக்கி, புரவில் வந்து விஷயமறிந்து அனுமதிப்பான். அராஜகமாக எவரேனும் வீரனைத் தாக்கி விரைந்து நுழைவார்களேயானால் கோட்டை கதவங்களுக்கு இருபுறங்களிலும் பொருத்தப் பட்ட விற்கால்கவணை என்கிற பொறியி லிருந்து அம்புகள் வரிசை கட்டிக் குறுக்கும் நெடுக்குமாகப் பாய்ந்து வருபவர்களைப்பதம் பார்த்து அகழியில் தள்ளிவிடும். பிறகு முதலைகள் பாடு கொண்டாட்டம்தான்.

அகழியோரமாகச் சென்று சங்கேத முறையில் சத்தமெழுப்பலாமா என்று யோசிக்கிறான் காளிங்கன். தனது அபிராகச் செயலை ஒற்றர் மூலம் அறிந்து கோட்டை யில் வேங்கைமார்பன் பிரகடனப்படுத்தி இருப்பானேயானால்?

முதலைகள் வாய் பிளந்து அண்ணாந்து வேறு கவனிக்கின்றன. மனித ருசி கண்டு அவற்றுக்கு நீண்ட நாட்களாகின்றனவே!

இரவின் கரும் போர்வை வேறு பயத்தின் பழுக்கத்தை வெளிப்படுத்திக் கொண்டிருந் தது. எங்கோ ஓநாய்களின் சத்தம்.

''உள்ளே நுழைவது சாத்தியம்தானா காளிங்கரே? நேர்முகத்தை விட இரகசிய வழியில் சிலையைக் கடத்த முடியுமா என்று சிந்தியுங்கள். பகிரங்கம் நம்மைப் பலி கொண்டு விடக் கூடாது. கோட்டை யைப் பார்த்த பிறகுதான் ரத்தமே உறைந்து போயிருக்கிறது. எவர் முற்றுகை யிட்டாலும் திரும்பித்தான் போக வேண் டும் என்பது போலல்லவா இருக்கிறது! இதனைக் கட்டியவர் யார்?''

''வேங்கைமார்பனே! யவனர், சோனகர் துணை கொண்டு தனது சிந்தனை பலம் கொண்டு உருவாக்கிய கோட்டை இது. அஞ்ச வேண்டாம். உள்ளே நுழைய முதலில் வழி தேட வேண்டும். நானே உள்ளே நுழைந்து விடுவேன். நான் பாண்டி யர்பால் சேர்ந்து கொண்ட ரகசியம் வேங்கைமார்பன் அறிந்திருந்தால் கதை வேறாகி விடுமோ என்றுதான் அஞ்சு கிறேன். ஒரே வழி. நியாசவல்லியின் பெயரைக் கொண்டு எவ்வாறு ஆதாடுவது என்றுதான் பலமாகச் சிந்தித்து வரு கிறேன். அந்த ஓர் ஆயுதம் தான் வேங்கை மார்பனிடம் செல்லுபடியாகிற இரக்கத்துக் குரியது...''

காளிங்கன் இவ்வாறு விளக்கி வருகிற போது யாரோ இருவர் புரவிகளில் வருவது தெரிய வரவே பேச்சை நிறுத்தி உற்றுக் கவனிக்கிறான்.

''மறைந்து கொள்ளலாமா?''

''வேண்டாம். நான் கவனித்துக் கொள் கிறேன். நீங்கள் பேசாமலிருந்தால்போதும்.''

இதற்குள்புரவிகளில்வந்த அந்த இருவரும் சமீபித்து விட்டார்கள். காளிங்கனைக் கண்ட தும் அவசரமாகப் புரவிகளிலிருந்து இறங்கி னார்கள்.

''சேனாதிபதியாருக்கு எங்கள் வணக்கம்.''

''நீங்கள்?''

''மன்னர் பெருமானின் அந்தரங்க ஒற்றர்கள்.''

''எங்கே சென்று வருகிறீர்கள்?''

''பக்கத்திலிருக்கும் ஏரெயில் கோட் டைக்கு!''

''ஏன்?''


''இப்படி நீங்கள் கேட்கலாமா? இது மன்னர் பற்றிய அந்தரங்கமல்லவா?''

நெற்றியில் வியர்த்தது காளிங்கனுக்கு.

''எனிங்கே நிற்க வேண்டும் சேனாதிபதி யாரே!''

''மதுரையிலிருந்து இப்போதுதான் அவசரமாக வந்திருக்கிறேன்.''

''அவர் உங்களைப் பார்க்கத்தானே நேற்று மதுரைக்கு ரகசியமாகப் பயணமாகி இருக் கிறார்!''



பளீர், பளீர், பளீர்...

மின்னல் சிந்தனையில் ஒளிக்கொடி பரப்புகிறது.

மன்னன் வேங்கைமார்பன் பதுரையில் இருக்கிறானா?

இனியும் தயங்கி யோசித்தால் ஐயம் அவர்களுக்கு அருகவை படைத்துவிடும்.

''தெரியும். மன்னர் என்னிடம் அவசரமாகச் செய்தியொன்றை ஒப்படைத்திருக்கிறார். கதவைத் திறக்கச் செய்.''

புரவியில் வந்த அந்தரங்க ஒற்றர்களில் ஒருவன் வாயில் கரங்களைக் குவித்துச் சங்கேத ஒலியைப் பெரிதாக எழுப்புகிறான்.

சற்றைக்கெல்லாம் திட்டிவாசல் திறவுபடுகிறது. இரு கண்கள் கவனிக்கின்றன.

அந்தரங்க ஒற்றர்களுடன் எறைஇகாளிங்கன் வேறு...

அடுத்த கணம்...

முப்பிரிவுப் பாலத்தின் நடுப்பிரிவு சின்ன பாலம் கிறீச்சிட்ட ஓசையுடன் இறங்குகிறது. அந்தச் சத்தம் கேட்டு அகழிக் கரையிலிருந்த முதலைகள் 'புதுக் புதுக்' கென்று அகழி நீரில் பாய்ந்து மறைகின்றன.

அந்தச் சிறிய பாலத்தில் பதினொன்று புரவிகள் ஏறிச் சென்று கோட்டைக்குள் மறைய பாலம் மீண்டும் மூடிக் கொள்கிறது.

இப்படியும் காலம் கைகொடுக்கும் என்பது இளங்கோவேளான் எதிர்பாராதது.

கோட்டையின் பேரெயிலைத் தாண்டிப் பிரதான கோட்டை வாசலை, அதே சங்கேத ஒலியுடனும் கோட்டைக் காவலர்களின் ஆராய்ந்த கண்களுடனும் கடக்கிறார்கள்.

அடியோடு பிரமிப்பு கண்டு அதிர்ந்து போகிறான் இளங்கோவேளான்.

ஏழு பேரெயில் வாயில்கள். நடுவேதான் பிரமாண்டமான கோட்டை.

ஒவ்வொரு பேரெயில் வாயிலிலும் ஒரு சிறு நகரமே இருந்தது.

ஏழு பேரெயில் வாயில்களையும் கடக்கிறார்கள்.

அதோ பிரதான கோட்டை நகரம்.

ஆ! இது என்ன தலைநகரமா அல்லது அரண்மனைக் கோட்டையா?

நடுவே அரண்மனை நெடிதோங்கிக்காணப்படுகிறது. இந்தக் காளப்பேரெயிலைப்பட்டப் பகலில் பார்வையிடும் பாக்கியம் மட்டும் கிடைத்தால்...

எப்படி இதனை மனத்தளவில் குறிப்பெடுப்பது என்பது புரியாது விழிக்கலானான் இளங்கோவேளான்.

அரண்மனையை அவர்கள் நெருங்குகிறார்கள்.

வேங்கைவனத்து வேங்கைகளின் உறுமல்கள் அப்போது அளவுக்கு மீறியே கேட்கின்றன.

அதோ ஸ்தூபி...

எவ்வளவுக்கு நீண்ட ஸ்தூபி...

எங்கும் புரவிகளில் வீரர்கள் குறுக்கும் நெடுக்குமாக மெல்லக் காவல் காத்து உலா வந்து கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு முக்கிய வாசலிலும் வேல், வில் தாங்கிய வீரமறவர்கள்.



உடன் வந்த பத்து வீரர்களையும் ஒருபக்கமாக நிறுத்தி வைத்து விட்டு ஒற்றர்களுடன் அமைச்சர் குறுமலைக்கிழார் மாளிகை நோக்கிச் செல்கிறார்கள்.

வானில் நிலா வணக்கம் கூறிக் கொண்டிருக்கிறது.

ஒற்றர்களும் அமைச்சரை அவசரமாகப் பார்த்தாக வேண்டும். அதுவே காளிங்கன் செயலுக்கும் உறுதுணையாக அமைந்து விட்டது.

ஆனால் அமைச்சருக்குமா காளிங்கன் சுயரூபம் தெரியாமல் இருக்கும்?

அந்தரங்க ஒற்றர்கள் அமைச்சர் மாளிகையின் வெளி முற்றத்தில் காளிங்கனையும் இளங்கோவேளானையும் இருக்கச் செய்து விட்டு உள்ளே நுழைந்தனர்.

அரை நாழிகைப் போதை கணங்கள் பிழியோ பிழியென்று பிழிந்து கடத்தப் பட்டபாடு...

நாடித் துடிப்புகளே நன்கறியும்.

என்ன நடக்குமோ இந்த ரகசிய ஒற்றர்களே ஏன் நல்லவர்களைப் போல நாடகமாடி உள்ளே அழைத்து வந்து அமைச்சர் மாளிகையில் சிறை வைத்திருக்கக் கூடாது

காளிங்கனுக்கே இந்தக் கேள்விக் குறி என்றால் இளங்கோவேளானைப் பற்றிச் சொல்லவே தேவையில்லை...

சற்றைக்கெல்லாம் காளப் பேரமைச்சர் குறுமலைக்கிழார் அங்கு வந்து நிற்க...

காளிங்கனும் இளங்கோ வேளானும் எழுந்து நின்று மரியாதை செலுத்த...

குறுமலைக்கிழாரின் கண்கள் குறுகுறுவென்று இருவரையும் கவனிக்க...

அப்போது பார்த்து வேங்கைவனத்தில் வேங்கைகள் ஒன்றோடொன்று ஊடுதல் காரணமாக ஏற்பட்ட முரண்டால் பிளிறிக் கொண்டு பயங்கரச் சத்தம் எழுப்ப...

நரம்பு தளர்ந்து நாடி நின்று விடுமோ என்று நடுக்கமுற்றவன் பாண்டியநாட்டின் புரவித் தளபதி இளங்கோவளான்.

(தொடரும்)


"டைம் பாம் வெடிக்கப் போறதுன்னு.....
... டெலி:.போனில் செய்தி வந்த உடனே....
... ஏர் போர்ட்டில் மூலைக்கு மூலை இருக்கிற ஒலிபெருக்கியிலே...
... எல்லோரும் கட்டிடத்தைவிட்டு வெளியேறி திறந்த வெளியில் நில்லுங்க...
... டைம்பாம் இருக்கான்னு சோதனை போட்டப்புறம் மறுபடி உள்ளே அழைக்கிறோம்...
... அதுவரை விமானங்கள் புறப்படுவது தாமதிக்கப்புறம்'னு அறிவிக்க வேண்டியது தானே?...
சிறுமி :
நன்றி :
வசனம் :


... இது கூடவா தெரியாது விமான நிலைய அதிகாரிகளுக்கு?...
... சே! ரொம்ப மோசம்!..
...போதாக்குறைக்கு டெல்லியிலிருந்து பறந்து வந்த மத்திய அமைச்சர்...
... செத்துப் போனவங்க 32 இல்லே 29 தான்னு...
... சமாதானம் சொல்றார். எப்பத்தான் இவங்களுக்குப் புத்தி வருமோ?...
சிண்டைப் பிய்ச்சுக்கலாம் போல வேதனையாயிருக்கு!

சொல் நின்று வேண்டும்

அனுராதா ரமணன்

32

ராஜா தன் தந்தையின் கையாலேயே சுடப்பட்ட செய்தி – காட்டுத் தீ போலப் பரவுகிறது...

கோவில் வாசலில் – தன் மகனின் கையில் பரந்தாமன் விலங்கு பூட்டிய போது...

காலில் பட்ட காயத்துடன் நடக்க முடியாமல் சுருண்டு விழுந்தவனை: அள்ளித் தன் மடியில் வைத்து: தான் போர்த்தியிருந்த ஜரிகை அங்கவஸ்திரத்தையே ரத்தம் பெருகும் இடத்தில் பரந்தாமன் சுற்றிய போது...

அவனை அழைத்துப் போகப் போலீஸ் வேன் வந்து நின்றவுடன் எழுந்திருக்க முடியாமல்– தரையில் தூக்கி எறியப்பட்ட மீன் போல ராஜா தத்தளிக்க – பரந்தாமன் அவனது ஒரு கையைப் பிடித்து – தனது மறு கையால் அவனுடைய இடுப்பைச் சுற்றி வளைத்து – பெருத்த ஹூங்காரத்துடன் தூக்கித் தனது பரந்த மார்பில் போட்டுக் கொண்டு வேனை நோக்கி நடந்த போது...

''ஐயோ!!!''

மீனாட்சி வாய் விட்டு அலறுகிறாள். உமா தன் அத்தையின் தோளில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அழுகிறாள்...

வேனில் ஏறப் போன பரந்தாமன் ஒரு கணம் நின்று – மனைவியைத் திரும்பிப் பார்க்கிறார்.

''என்ன மீனாட்சி... எதுக்காக அழறே...? உன் பிள்ளைய சின்ன வயசுல என் நெஞ்சு மேலேயும் தோள் மேலேயும் தூக்கிப் போட்டு எப்படி வளர்த்தேன்கறது... உன் மருமகளுக்குத் தெரியாது இல்லையா...? அதுக்காகத்தான் இப்ப – இது மாதிரியான ஒரு சந்தர்ப்பம் வந்திருக்கு... அழாதே...!''

''அம்மா உமா...''

பரந்தாமன் மருமகளைக் கூப்பிடுகிறார்.

''பெத்தவங்களைப் பரிதவிக்க விட்டுட்டு, தாலி கட்டினவனை கண்ணும் கண்ணீருமா நிக்க வச்சு இவன் மேல உசிரையே வச்சிருந்த அப்பாவிப் பொண்ணோட. மரணத்துக்குக் காரணமாகி... 'ச்சே இந்தப்பாவி மனசுலப் பாசமே இல்லையோ'ன்னு வெறுத்துப் போயிருந்தேன். நல்லவேளை, அவன் தன் மனசுலேயும் பாசத்துக்கு இடமுண்டு தானும் மனுஷன்தாங்கறதை நிரூபிச்சுட்டான். பரவாயில்லே... பிள்ளைப் பாசமாவது இருக்கே... அதுக்காக சந்தோஷப்படு...''

''அவருக்கு எல்லார் மேலேயும் பாசம் உண்டு மாமா... பெத்த பிள்ளையையே– காலைப் பார்த்துச் சுடற கல் நெஞ்சுக்காரத் தகப்பனுக்குப் பிள்ளையாப் பொறந்திட்டாலும்... தான் பெத்த பிள்ளை அடிபட



றதைத் தாங்காத பூஞ்சை மனசுதான் அவருக்கு...''

உமா அழுகையும் ஆத்திரமும் ஒருசேர குரலுடையச் சொல்கிறாள்.

சென்னையில் —

கோர்ட் வாசலில் கூட்டமாவது கூட்டம்.. ராஜா வேலை பார்த்த அலுவலக ஊழியர்கள் அத்தனை பேரும் வந்திருக்கிறார்கள்.


எத்திராஜ் பார்வையாளர்கள் வரிசையில் ஒரு ஓரமாய் உட்கார்ந்திருக்கிறான்.

நெஞ்சுக்குள் அவன் தாயின் முகம்...

''சொன்ன சொல்லைக் காப்பாத்திட்டேம்மா... அந்தப் பரந்தாமனைக் கூண்டுல ஏத்த முடியல்லேன்னாலும்... அவன் பிள்ளைய ஏத்திட்டேன்... ஒரு காலத்துல உன்னை போலீஸ் வேன் வந்து இழுத்துட்டுப் போனப்ப — நான் எப்படி கதி கலங்கி நின்றேனோ... அது மாதிரி — இன்னிக்கு ராஜா வோட மகன் நிக்கப் போறான். உத்தமி பெத்த பிள்ளையான என்னை ஊர் உலகம் 'தறி கெட்டவ பிள்ளைன்னு' எப்படி வாய் கூசாமப் பேசித்தோ — அதேபோல: இன்னிக்கு ராஜாவோட மகனை துலங்க 'கொலை காரன் பெத்த பிள்ளை'ன்னு கண்டிப்பாச் சொல்லுவாங்க...'

'அது சரி... உங்க அம்மா நிரபராதி... ஆனா ராஜா அப்படியில்லையே... கொலை செஞ்சவன்தானே...'

'யாருக்குத் தெரியும். அவன் செஞ்சானோ... இல்லே வேற யாராவது செஞ்



விட்டு பழி இவன் தலைமேல விழுந்திடுச்சோ நமக்கு எதுக்கு பாடு...'

மகனைக் கூண்டில் நிறுத்தி வைத்திருப்பதைப் பார்க்க முடியாதவளாய் மிரண்டு குமுறி அழ...

உமா அழக் கூட மறந்தவளாய்க் கணவனை வைத்த கண் வாங்காமல் பார்த்திருக்க...

சாட்சியங்கள் ஒருவர் பின் ஒருவராய் விசாரிக்கப்பட...

அத்தனையுமே ராஜாவுக்கு எதிராய்...

''நான் டீக் குடிச்சிட்டு ஆபீசுக்குள்ளார நுழையறப்ப ராஜா என்னை மோதித்தள்ளிட்டு வெளியே ஓடினாருங்க... அப்புறம் தான் உள்ளாறப் போய்ப் பார்த்தேன்.''

—இது வாட்ச்மேன்.

''முத நாள் இரண்டு பேருக்கும் பழிசண்டைங்க. முதலாளி தன் காரை நிறுத்த இடமில்லேன்னு ராஜாவோட மோட்டார் சைக்கிளை ஒதுக்கச் சொன்னாரு. அப்பவே ரெண்டு பேருக்கும் சண்டை ஆரம்பமாயிடுச்சுங்க... சின்ன முதலாளி சட்டையைப் பிடிச்சு இவர் உலுக்கினாரு... 'உன்னை விடறேனா பார்... தீர்த்துக் கட்டிட்டுத் தான் மறுவேலை' அப்படின்னு அத்தனை பேர் முன்னாடியும் ராஜா கறுவினாருங்க... அந்தச் சமயத்துல ஆபீசுக்காரங்க அத்தனை பேரும் அங்கே இருந்தாங்க... வேணுமானாக் கேட்டுப் பாருங்க.''

—இது ஆபீஸ் பியூன்.

''சின்ன எஜமானுக்கு எப்பவுமே கோவம் அதிகம் சார். ஒரு தடவை பாருங்க. ஒன்னுமில்லாத சின்ன விஷயத்துக்காக என்னைப் போட்டு உலுக்கி எடுத்துட்டாரு. இவரோட முதலாளி என்ன சொன்னாரோ, இவரு பதிலுக்கு என்ன கத்தினாரோ... ஆனா ஒன்னு... எங்க எசமான் பரந்தாமன் சாரும் அவர் சம்சாரமும் பார்வதி பரமசிவன் மாதிரி... அவங்களுக்கு இப்படியொரு மகன் பொறந்து — இத்தனை கஷ்டத்தைக் கொடுக்க வேணும்... எப்படி யிருந்த எசமான் எப்படி ஆயிட்டாரு...''

—இது எத்திராஜ்.

ராஜா......

கோர்ட்டில் வழக்கைப் பார்க்க வந்திருந்த அத்தனை கும்பலிலும் ஒரு முகத்தைத் தேடினான்...

'அவ எங்கே...?'

'பத்திரிகைகளிலே எல்லாம் நான் பிடிபட்ட செய்தி சிரிப்பாச் சிரிபடறதே... அவ பார்த்திருக்க மாட்டாளா என்ன...?'

'ஒருவேளை — அவ புருஷனுக்கு உடம்பு நிலைமை மோசமாகியிருக்குமோ...?'

'இல்லே — அந்த நீண்ட மயக்கத்திலே யிருந்து அவன் மீண்டு எழுந்திருப்பானோ...?'

அவனை யோசிக்க விடாமல் இருதரப்பு வக்கீல்களும் மாறி மாறிக் கேள்விகள் கேட்க...

''உங்க மேலத் தொடுக்கப்பட்டிருக்கிற இந்த வழக்கைப் பத்தி நீங்க என்ன சொல்றீங்க ராஜா... உங்க முதலாளி மகனை...''

''நான் தான் கொலை செஞ்சேன்...''

''காரணம்?''

''......''

''நீதி மன்றத்துல கேட்கப்படற கேள்விகளுக்குத் தகுந்த பதிலைச் சொல்லாம நிற்கறது — நீதி மன்றத்தையே அவமானப்படுத்தற மாதிரி ஆகும்...''

''காரணத்தை வெளியில சொல்ல முடியாத நிலை ..''

''நான் சொல்றேன். உங்களுக்கும் கொலை செய்யப்பட்ட நபருக்கும் ஏற்கெனவே பகை இருந்திருக்கு. பத்து பேர் முன்னாலே நீங்க அவரைத் தொலைச்சுக் கட்டிடறதா சபதமெடுத்திருக்கீங்க...''

''அது சபதமில்லே. கோவத்துல யதார்த்தமா சொன்ன வார்த்தைதான்...''

''இல்லேன்னு நான் சொல்றேன். மறுநாள் சாயந்திரம் ஆபீஸ் நேரம் முடிஞ்சதுக்கு அப்புறமா அவரைக் கொலை செய்யத் திட்டம் போட்டீங்க. இதுக்காகவே நீங்க எல்லோரையும் போல ஆபீஸ் முடிஞ்சதும் வீட்டுக்குக் கிளம்பற மாதிரி கிளம்பிட்டு— மறுபடியும் வந்திருக்கீங்க...''

''நான் திரும்பி வந்ததுக்கு எந்தவித உள்நோக்கமும் இல்லே. அன்னிக்கு சாயந்திரம் நான் என் மனைவியை சினிமாவுக்கு அழைச்சுக்கிட்டுப் போறதா இருந்தேன்... ரிசர்வ் பண்ணின சினிமா டிக்கட்டை என் டேபிள் டிராயர்லே போட்டு வச்சிட்டுக் கிளம்பிட்டேன்... அதை எடுக்கறதுக்காகத் தான் திரும்பி வந்தேன்... உங்க சோதனையில அந்த டிக்கெட்டுகள் கிடைச்சிருக்கும்னு நினைக்கறேன்...''

''சாயந்திரம் சினிமாவுக்குப் போகப் போற விஷயம் உங்க மனைவிக்குத் தெரியுமா?''

''தெரியாது...''

''ஏன் தெரியாது?''

''அது என்னமோ — சொல்லணும்னு தோணலை. மேலும் அவளைத் திடீர்னு சினிமாவுக்கு அழைச்சுக்கிட்டுப் போய் ஆச்சரியத்துல மூழ்கடிக்கணும்னு நினைச்சேன்...''



இந்தச் சமயத்தில் உமாவின் விசும்பல் மட்டும் கோர்ட்டின் அமைதியைக் குலைப்பதாய்...

''டிக்கட்டை எடுக்க வந்த நீங்க —எதுக்காக உங்க எம்.டி.யோட ரூமுக்குள்ளப் போனீங்க...?''

''......''

''என்ன மிஸ்டர் ராஜா? டிக்கெட்டை எடுக்க வந்தவங்க எடுத்திட்டு நேரே வீட்டுக்குப் போக வேண்டியது தானே...! எல்லோரும் போனதுக்கு அப்புறம் எம்.டி. யோட ரூம்லே உங்களுக்கு என்னவேலை?''

''......''

''கமான் சொல்லுங்க...''

ராஜா — என்ன பதிலைச் சொல்வது என்றே புரியாமல் திகைத்து நிற்க –

எதிர்த்தரப்பு வக்கீல் விசாலமானதொரு புன்னகையுடன் நீதிபதியைப் பார்க்கிறார்.

''கனம் நீதிபதி அவர்களே – ராஜா ஒரு பயங்கரமான குற்றவாளி. அவருள் எப்போ முதுமே கொலைவெறி தூங்கிக்கொண்டிருந்தது என்பதை இதற்கு முன் சாட்சி சொன்னவர்களின் வாக்கு மூலங்களும் எதிரியின் மௌனமும் நமக்குத் தெளிவாக்குகின்றன. கொலை செய்தது மட்டுமல்லாமல் தன்னை மறைவாகச் சட்டத்தின் கண்களில் மண் தூவவும் முயன்றிருக்கிறார். இவரை இன்னமும் வெளியே திரிய விட்டால் தன் குடும்பத்துக்கும் தனக்குமே பெரிய இடையூறாக— உயிருக்கு ஆபத்து நேரிடலாம் என்று கொலையுண்ட பரிதாபத்துக்குரிய இளைஞரின் தந்தை பயப்படுகிறார். ஆதலால் மிஸ்டர் ராஜாவுக்குத் தூக்கு தண்டனையோ அல்லது அதற்குச் சமமான...''

அவர் பேசிக் கொண்டிருக்கும்போதே கூட்டத்தில் சிறு சலசலப்பு.

இடிந்து போய் அமர்ந்திருந்த பரந்தாமன் கூட சலசலப்பு வந்த திசை நோக்கித் திரும்ப...

ராஜா தலையை உயர்த்திப் பார்க்க...

அங்கே—

தாரா!!

அடர்த்த கூந்தலை முடியாமல் அப்படியே அவள் பிரித்து விட்டிருந்த கோலமும், அழுதழுது சிவந்த கண்களும் நெற்றியில் வெறிச்சிட்ட வெறுமையும்...


''தாரா!!''

ராஜா தன்னை மீறி அலறுகிறான்...

இதற்குள் ராஜாவின் தரப்பு வக்கீல் படு சுறுசுறுப்பாய் எழுந்து போய்த் தாராவிடம் ஏதோ சொல்லிவிட்டு நீதிபதியைப் பார்த்துத் தலையைத் தாழ்த்துகிறார்.

''என் கட்சிக்காரருக்குச் சாதகமாய் ஒரேயொரு பெண் சாட்சி சொல்ல வந்திருப்பதால் மதிப்பிற்குரிய நீதிபதி அவர்கள் அதற்கு அனுமதி....''

''இதை நான் ஆட்சேபிக்கிறேன். இந்த வழக்கு ஆரம்பமாகிப் பதின்மூன்று நாட்களாகிறது... இந்தக் கொலை செய்யப்பட்டோ ஐந்து வருடங்களுக்கும் மேலாகிறது... இத்தனை நாள் இந்தச் சாட்சி எங்கிருந்தார்? ஒரு குற்றவாளியை வெளியே உலவ விடுவதற்காகப் பணம் கொடுத்துப்



பொய் சாட்சி தயார் செய்வதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்...''

எதிர்க்கட்சி வக்கீல் ஆவேசமாய்க் குரலெழுப்ப... நீதிபதி தாராவை ஒருகணம் பார்க்கிறார்.

''குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டிருக்கும் ராஜாவுக்கு – தன் கடைசி மூச்சு உள்ள வரையில் தான் நிரபராதி என்பதை நிரூபிக்க உரிமையிருக்கிறது... ஒரு கொலையாளி தூக்கு தண்டனையிலிருந்து தப்ப—சட்டம் இடம் கொடுத்தாலும் — ஒரு போதும் ஒரு நிரபராதியைத் தண்டிக்க இடம் கொடுக்காது... கடைசி வரையில் போராட ராஜாவுக்கு அனுமதி உண்டு...''

கூட்டத்தில் மறுபடியும் சலசலப்பு.

தாரா கூண்டிலேறுகிறாள்.

''இங்கு நான் சொல்வதெல்லாம் சத்தியம்... சத்தியத்தைத் தவிர வேறு ஒன்றும் இல்லை......''

அழுதும் உணர்ச்சி வேகத்தில் சில நேரங்களில் பேச்சு வராமல் திகைத்தும் இப்படித் தன் நிலைமையைத் தனக்கு மிகப் பரிச்சயமான ரமாமணி முதலிய அலுவலக நண்பர்கள் எதிரில் பறைசாற்ற வேண்டியிருக்கிறதே என்று மனம் குன்றியும்... எப்படியும் ராஜாவைக் காப்பாற்றியே தீருவது என்று கங்கணம் கட்டிக் கொண்டும்... எதிர்த் தரப்பு வக்கீலின் உறுத்தலான பச்சையான கேள்விகளுக்கு வேங்கையெனச் சீறிப் பாய்ந்தும்...

''ஆமா... என்னோட சுக்குரல் கேட்டுப் பக்கத்து ரூம் வெண்டிலேட்டர் வழியாக ராஜா குதிச்சார். அவர் மாத்திரம் அப்ப வராம இருந்திருந்தா — என் மானம் போயிருக்கும்...''

''இத்தனை நேரம் சாட்சி சொன்ன உங்க சக ஊழியர்கள் யாருமே — கொலையுண்ட மனிதருக்குப் பெண் பித்து உண்டு என்றோ—

தங்களிடம் முறை தவறி நடந்து கொண்டிருக்கிறார் என்றே சொல்லவே இல்லையே... நீங்கள் மாத்திரம் தான் இப்பொழுது புதிதாக...''

''நானும் இத்தனை நாள் வெளியில் இதைச் சொல்லாததுக்குக் காரணம் இருக்குன்னு சொன்னனே இல்லே... எந்தப்பொண்ணு சார் தன் கிட்ட ஒருவன் தப்பா நடந்துக்கிட்டான்னு — அதுவும் எம். டி.யோட மகன் தப்பா நடந்துக்கிட்டான்னு தைரியமா வெளியிலச் சொல்லுவா? நம்ம சமூகம் இன்னும் அந்த அளவுக்கு முன்னேறலே... ஒருத்தன் முறைதவறி ஒருத்திகிட்ட நடந்துகிட்டான்னு அந்த ஒருத்தி என்ன மாதிரி 'கேரக்டரோ'ன்னுதான் உலகம் பேசும். தாலி கட்டின புருஷன்களுக்கு பெண்டாட்டியோட சம்பளமும் வேணும், அவ பத்தினியாவும் இருக்கணும். இந்த விஷயம் அவனுக்குத் தெரிஞ்சா முதல்லே கூசாம 'வெளியில நடடி நாயே'ன்னுதான் சொல்லுவான். என் புருஷனும் அதைத்தான் சொல்லியிருப்பான், உயிரோட இருந்திருந்தா... இன்னிக்கு அவர் செத்துப்போய்ப் பதிமூணு நாளாறது... ஒருத்தர் செத்தா — பதிமூணும் நாளு — அவர் நினைப்பதால தருமமோ — இல்லே வேற ஏதாவது நல்ல காரியமோ செய்யணும்னு சொல்வாங்க... நான் இங்கே வந்து நிக்கறது தானம் கொடுக்க இல்லே... தானம் கேட்க... ராஜாவை எப்படியாவது விடுதலை பண்ணிடுங்க சார்... அவர் எனக்காக அந்தக் கொலையைச் செஞ்சார். போலீஸ்லே மாட்டினா உண்மையைச் சொல்ல நேரிடும். என்னைக் காட்டிக் கொடுக்க வேண்டியிருக்கும்னு நான் அழுததாலேயே இத்தனை வருஷமும் தலைமறைவாத் திரிஞ்சார்...''

அவள் சொல்லச் சொல்ல உமா எழுந்து நின்று இரு கைகளையும் அவளை நோக்கிக் குவித்து வணங்குகிறாள்...

பரந்தாமனின் முகத்திலும் கொஞ்சம் கொஞ்சமாய்ப் பழைய களை...

'என் மகன் முன்கோபக்காரன்தான். ஆனா பழி வாங்கற உணர்ச்சியில இந்தக் கொலையச் செய்யலே...

'ஒருத்தியப் பெரிய அபவாதத்துலே யிருந்து காப்பாத்தியிருக்கான்... ஓ... காட்... எ க்ரேட் ஸன் ஐ ஹேவ்...!'

அவரால் அதற்கு மேலும் அங்கு உட்கார முடியவில்லை. உடம்பு முழுக்க உணர்ச்சி வேகத்தில் பதறுகிறது...

'சட்'டென எழுந்து வராந்தாவிற்கு வருகிறார்...

இவர் வெளியே போவதைக் கண்டதும் மீனாட்சியும் பரபரவென எழுந்து வெளியே நடக்கிறாள்...

எத்திராஜூம் பக்கத்திலிருந்த வாசல்வழியாக...

''மீனு... உன் முருகன் நம்ம மகனை நிச்சயம் காப்பாத்திடுவான்...''

''நிஜமாவா...?''

''ஆமா... அப்படியே தண்டனை கிடைச்சாலும் குறைந்த பட்ச தண்டனைதான் கிடைக்கும்... என்ன இதே போல இன்னும் நாலஞ்சு வருஷம்... அந்தத் தாராவுக்குக் கொலையாளியை மறைச்சதுக்காக அபராதம்—''

அவர் சொல்லி முடிக்கும் முன் மீனு — தன் பலம் கொண்ட மட்டும் பரந்தாமனை இழுத்து ஒருபுறமாய்த் தள்ள —

அதே சமயத்தில் எழுந்த துப்பாக்கி வெடிக்கும் ஓசை கோர்ட்டையே ஒரு கலக்கு கலக்க...

நல்லவேளை... மீனாட்சிக்கோ பரந்தாமனுக்கோ எந்த ஒரு சேதமும் விளைவிக்காமல் குண்டு சுவரில் பட்டு சுண்ணாம்புக் காரைப் பொலபொலவென உதிர்க்க—

''அதோ ஓடறான்... பிடிங்க...!''

சத்தம் கேட்டு ஓடிவந்த கும்பல் எத்திராஜ் ஓடும் திசையைப் பார்த்து கத்த...


திகைத்து நின்ற பரந்தாமன் ஒரு நிமிடத்தில் தன்னைச் சுதாரித்துக் கொண்டு எத்திராஜ் ஓடிய பக்கம் ஓடுகிறார்...

முன்னை விடவும் பத்து வயது குறைந்தவர் போல — அவரது ஓட்டத்தில் இருந்த மிடுக்கும் சுறுசுறுப்பும் அத்தனை பேரையும் அசரச் செய்கிறது...

இனிமேல் இவர் பழைய பரந்தாமனாக மாறி விடுவார்.. நெஞ்சில் இருந்த அச்சம் நீங்கி விட்டதே.

முற்றும்

அடுத்த வாரம்:



ஹிட்லேகர் விவகாரம்

திடுக்கிடச்செய்யும் தகவல்கள்

சைலே...ன்ஸ்

இப்போதைய சினிமா ஃபேஷன்

சுரேஷ்:

சுரேஷ் யாரைப் பார்த்தாலும் சொல்கிற வாசகம்: ''எனக்குப் பெண் ரசிகர்கள் தான் அதிகம்''

''சமீபத்தில் ஒரு சினிமா வார இதழில் பெண் வாசகி ஒருவர் அழகான ஆண்களின் படங்களை அட்டைப் படமாக வெளியிடச் சொல்லி ஒரு கடிதம் எழுதி இருந்தார். பத்திரிகையில் அந்தக் கடிதமும் பிரசுரமாகி இருந்தது. அதில் அந்த வாசகி என் பெயரைத்தான் 'சிபாரிசு' செய்திருந்தார்'' என்றார்.

சுரேஷிற்கு செகரட்டரி அவர் அப்பா தான். ''உடலில் இப்போது சற்று சதை பிடித்த பிறகுதான் என் தோற்றம் இன்னும் ஆண்மையாகத் தென்படுகிறது. இதையே கண்டின்யூ செய்யப் போகிறேன். இனி, வேறு பெரிய நடிகர்களுடன் இணைந்து துண்டு துக்காணி வேடங்களில் நடிப்பதாய் இல்லை'' என்றார்.

ராமநாராயணனின் ஆஸ்தான நடிகர்களில் ஒருவர் சுரேஷ். ராம. நா. வை 'சித்தப்பா' என்றுதான் அழைப்பாராம்.

பிந்துகோஷ்:

''நான் ஒரு குழந்தை நட்சத்திரம்'' என்றார் பிந்துகோஷ். அதாவது குழந்தைகளுக்கான நட்சத்திரம். ''எனது ரசிகர்களில் பெருவாரியானவர்கள் குழந்தைகள் தான். இரண்டு நாட்களுக்கு முன் பாண்டிபஜாரில் என் பையனுக்கு சைக்கிள் வாங்கப் போனேன். கடையில் சில பெண்களும் அவர்களோடு வந்த சின்னஞ்சிறுவர்களுமாக நிறைய கூட்டம். பெரியவர்களுக்கு என்னை அடையாளம் தெரியவில்லை. ஆனால் குழந்தைகள் என்னைக் கண்டு கொண்டுவிட்டன. ஆனால் என்னோடு எப்படிப் பேசுவது என்று தெரியாமல் திருதிருவென்று விழிப்பதும், சிரிப்பதுமாக இருந்தன. பிறகு தான் குழந்தைகளின் பெற்றோருக்கு விஷயம் புரிந்தது. அப்புறம் சற்றுநேரம் எல்லோருடனும் உரையாடிவிட்டு வந்தேன்'' என்றார்.

பொதுவாக கங்கை அமரன் டைரக்ஷனில் இவர் நடிக்கிறார் என்றால், இவருக்காக ஒரு பாட்டைப் படத்தில் இடம்பெறச்செய்து விடுவாராம் கங்கை அமரன்.

வெள்ளைப்புறா ஒன்று படத்தில், இவர் நடித்து நடனமாடிய 'பொன்னுன்னு பொன்னு எம்மாம்பெரிய பொன்னு' பாடல் முதலில் படத்தில் கிடையாதாம். கடைசி நிமிடத்தில் தான் அந்தப் பாடலை கங்கை அமரன் எழுதி இணைத்தாராம். ''படத்தில் இடம் பெற்ற மற்ற பாடல்களை விட இதுதான் சூப்பர் ஹிட்'' என்றார்.

''இரண்டு நாட்களுக்கு முன் இண்டிவனத்தில் ஒரு ஜவுளிக்கடை திறப்பு விழாவிற்கு நான், ஜாஸ் மோகன், குண்டு கல்யாணம் எல்லோருமாய்ப் போயிருந்தோம்.

விழா முடிந்து நள்ளிரவு காரில் சென்னைக்குத் திரும்பிக் கொண்டிருந்த நேரம்.







மதுராந்தகம் அருகே எதிரே ஒரு லாரி அசுர வேகத்தில் வந்து கொண்டிருந்தது. எங்கள் காரும் அந்த லாரியும் பத்தடி இடைவெளியில் நேருக்கு நேர் வந்துவிட்ட அந்த க்ஷணம், 'மூகாம்பிகே'... என்று கத்திக் கொண்டே கண்ணை மூடிவிட்டேன்.

கண் திறந்து பார்த்த போது கார் ஒரு பள்ளத்தில் சாய்ந்தவாறு நின்று கொண்டிருந்தது. காரில் இருந்தவர்களுக்கெல்லாம் பயத்தில் கை,கால்கள் நடுங்கிக் கொண்டிருந்தன. ஏதோ டிரைவரின் சாமர்த்தியத்திலும், கடவுளின் கிருபையிலும் தான் தப்பித்தோம். ஒரு பத்து நிமிஷம் எல்லோருமாய் 'ரெஸ்ட்' எடுத்துவிட்டு, பிறகு தான் காரைக் கிளப்பினோம்'' என்றார் பிந்துகோஷ்.

காரில் இருந்த ஹாஸ் மோகன் தான் எல்லோருக்கும் தைரியம் சொன்னாராம்: 'இப்படிக் கவலைப் படாதீங்கம்மா. நாம அதுக்குள்ள சாக மாட்டோம். இன்னும் நாம பண்ண வேண்டிய பாவம் எவ்வளவோ இருக்கே!'

அனுராதா:

ரெட்ரோஸ் பில்டிங். இளவேனிற் காலம் படத்திற்காகக் 'குலுங்கி'க்கொண்டிருந்தார், அனுராதா.

நான்கு இந்திப் படங்களில் 'ஆடகி'யாக ஒப்பந்தமாகி இருக்கிறாராம். ''அப்படித் தான் ஒரு இந்திப் படத்திற்காக பம்பாய் சென்று நடித்து விட்டுத் திரும்பும்போது, பம்பாய் விமான நிலையத்தில் நானும் கமலஹாசனும் நேருக்கு நேர் சந்தித்துக் கொண்டோம். நானும் இந்திக்கு வந்துவிட்டேன் என்று சொன்னதும், ரொம்ப ஆச்சர்யப் பட்டுப் போய்ப் பாராட்டினார்'' என்றார்.

படப்பிடிப்புக்களில் நடிகைகள் ஏதாவது செக்ஸியாக ஜோக் அடிப்பது தான் இப் போது சினிமா ஃபேஷன். அப்படிப் பேசும் நடிகைகளின் லிஸ்ட் ஒன்றை நீங்கள் வைத்திருந்தால், அதில் அனுராதாவின் பெயரையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.

ஒரு தெலுங்குப் படத்தில் சிலுக்கும் இவரும் சேர்ந்து ஆடினார்களாம். சிலுக்கு எப்படி ஆடினார் என்பதை அப்படியே — கேலியாக — ஆடிக் காண்பித்து, சுற்றி இருந்தவர்களைச் சிரிக்க வைத்துக்கொண்டிருந்தார். அனுராதாவிற்குக் கொஞ்சமேனும் வர்க்க உணர்வு வேண்டாமோ..., சொல்லப் போனால் வீண் பொல்லாப்பு! நமக்கு வேண்டாம் சாமி!

—சம்பத்ஜி

அன்னையே! என் அன்னையே!

இரா. சோமசுந்தரம்

ஆழக்கடலில் மூழ்கி மரணம்
அணைக்கச் சாவேன் என்றாலும்
அன்னையே என் அன்னையே
கடலின் அடியில் என்னைத் தீண்டும்
கண்ணீர் உனதே நானறிவேன்
அன்னையே என் அன்னையே...
—ருத்யார்ட் கிப்ளிங்.

• • • •

இலைகளுக்கு ஏன் அப்படி வேர்க்க வேண்டும் என்று நினைத்தான். தன் சின்னஞ்சிறிய பத்து வயது நிறைவெய்திய விரல்களைக் கொண்டு மரத்தின் அடி வேரைத் தொட்டான். ஜில்லிட்டது. கைகளில் அதன் ஈரம். ஓ... அம்மா இப்படி வேர்த்துக் கொட்டும்படி அது என்ன செய்தது? இரவெல்லாம் விளையாடியதா என்ன? காற்றில் ஆடி அசைந்து இதற்கு இப்படி வேர்த்து விட்டதா?

ஒரு இலை வந்து விழுகிறது. அதன்மேல் பனித்துளி. இதேபோல் எல்லா இலைகளிலும் பனித்துளி. புற்களின் மேல் பனித்துளி.


அவன் உட்கார்ந்து வேரின் மேல் சிறுநீர் கழித்தான். யாராகிலும் பார்த்து விடுவார்களோ என்ற பயத்தில் சட்டென்று எழுந்து கொண்டான். சில சொட்டுக்கள் கால் சட்டையில் விழுந்து பரவுகிறது. கண்களில் இருந்த அழுக்கை மரத்தின்மேல் தடவிவிட்டு அம்மாவிடம் ஓடிவந்தான்.

அவன் அம்மா தூங்குகிறாள்.

இன்னும் பொழுது முற்றாக விடிந்துவிடவில்லை. அது இருளின் கடைசி பிடியில் சிக்குண்டிருந்தது. சீக்கிரத்தில் வெளிவரும்.

அம்மா புடவையைப் போர்வையாகக் கொண்டு உறங்குகிறாள். இந்நேரம் வரையில் இவனைக்கூட அந்தப் புடவைதான் மூடியிருந்தது. தன்னோடு சேர்த்து அணைத்தாற் போலத்தான் அம்மா படுக்க வைப்பாள். அவளது சிறு விரலாகிலும் அவன்மேல் தொட்டுக் கொண்டு இருக்காமல் சும்மா விலகி இருக்காது. உறக்கத்தில் கூட அம்மாவுக்கு அவன் நினைவு பெரிது.

போதிய வெளிச்சம் வந்திருந்தும் இன்னமும் மின்விளக்கு அணைக்கப்படாமல் எரிகிறது. இவனுக்கு அதன் ஸ்விட்ச் எட்டாத உயரம். தோட்டத்தை ஒட்டினாற் போன்ற தாழ்வாரம். பக்கத்து அறையில் படுத்திருந்தால் குளிர் அவ்வளவாக வாட்டியிருக்காது. அந்த அறையில் நம்மை ஏன் படுக்கச் சொல்லவில்லை என யோசித்தான். அதன் ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தான்.



அறை காலியாக இருந்தது. ஏதோ மூட்டைகள் நான்கு இருக்கிறது. கரி மூட்டையாக இருக்கும். விறகு கொஞ்சம் இருக்கிறது.

கவரும் கடைக்காலும் இணையும் இடத்தில் நீண்டு கிடக்கும் கோடான பரப்பு—அதில் அவனது பிஞ்சுக் கால்கள் நிற்கமுடிகிறது. கவரைப் பிடித்துக் கொண்டே அதன் கடைசி வரையிலும் போய் வந்தான்.

அம்மாவிடம் வந்த போது அம்மா அதே நிலையில் இருந்தாள்.

தோட்டத்து இடது பக்க மூலையில் கிணறு. கயிறுடன் கிடக்கும் செம்புத் தோண்டி. அது நசுங்கிக் கிடந்தது. பக்கத்திலேயே சிமெண்ட் தொட்டி. அங்கெல்லாம் போகாதே என்று அம்மா எச்சரித்திருந்தாள். பாசி படிந்து கிடந்ததால் லேசாக வழுக்கியது. அதன்மீது வேண்டுமென்றே நடந்து பின் யதேச்சையாக உயரே பார்த்த போது மரத்தில் மாங்காய் தொங்குவது தெரிந்தது. இப்போது தான் அவனுக்கு இந்த மரம் பள்ளி விளையாட்டு மைதானத்திலிருந்து பார்க்கின்ற அதே மரம் என்பது தெளிவானது.

மரத்தினிடம் போனான். மீண்டும் அதன் வேர்களைக் கால்களால் மிதித்து விட்டான். முன்பு இல்லாத வாசனை இப்போது இருக்கிறது. மாந்தளிர் வாசனை நாசியை நிறைக்கிறது. மாங்காய் நிறைய இருக்குமோ? தலைக்குமேலாகப் பார்த்தான். அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிற்சில காய்கள் சில பிஞ்சுகள். தான் எந்த இடத்தில் சிறுநீர் கழித்தோம் என்பது அவனுக்கு மறந்து விட்டது. அங்கிருந்தபடி முன் எச்சரிக்கையோடு அம்மாவைப் பார்த்தான். அவள் திரும்பிப் படுத்திருந்தாள். ஆனால் எழுந்திருக்கவில்லை. மேலே ஏறிவிட முடியுமா? கிளை உயரத்தில் பிரிகிறது. சற்று சிரமத்துடன் ஏறிவிட முடியும்.

''டேய் என்னடா பண்றே.?''

மாமி நிற்கிறாள்.

பேசாமல் வந்து ஓரமாக உட்கார்ந்தான். அவனையே பார்த்த மாமி பிறகு உள்ளே போய் விட்டாள்.

ஆதிசங்கரர்

சம்ஸ்கிருதத்தில் 'சங்கரர்' திரைப்படமாக வந்து, தங்கப் பதக்கம் தட்டிக் கொண்டு போன செய்தி வந்திருக்கும் சமயத்தில், 'ஆதி சங்கரர்' தமிழில் நாடக மேடையில் வந்திருக்கிறார். உபயம்: ஸ்ரீசக்ரா ஸ்டேஜ்.

சங்கரர் சந்நியாசம் பெறக் காரணமான, முதலை காலைக் கவ்வும் நிகழ்ச்சி; ஏழை மாதங்கினி வீட்டில் பவதி பிட்சாம் தேஹி என்று சங்கரர் கேட்டு, மாதங்கினி ஒரே ஒரு நெல்லிக்கனி மட்டுமே தர, ஸ்வர்ண நெல்லிக்கனிகள் சொரியும் காட்சி; குருவின் ஆணையேற்று நீரின் மேல் நடந்து வரும் சீடரின் பாதத்தைத் தாமரைகள் தாங்கும் அற்புதம்; வாதத்தில் மண்டனமிச்ரரைத் தோற்கடித்தாலும் அவர் மனைவி சரசவாணியிடம் இல்லறம் சம்பந்தமான வினாக்களுக்கு விடையளிக்கத் திணறிய சங்கரர், இறந்து போன மன்னரின் உடலில் கூடுவிட்டுக் கூடு பாய்ந்து இல்லறம் பற்றியும் அறிந்து வந்து பதில் சொல்லும் நிகழ்ச்சி; மரணமுற்ற தாயை எரியூட்ட ஊரார் உதவாத நிலையில் தம் சக்தியால் தகிக்கும் அதிசயம்... முக்கியமான அம்சங்கள் எதையும் விடாமல், நாடகத்தின் சுவையைக் கோவையாகக் கொண்டு சென்றிருக்கிறார் நாடகாசிரியர் ஜே. சுகுமார். (இன்னொரு ஜே போடலாம் அதற்கு!)

பால சங்கரராக வரும் மாஸ்டர் சுரேஷ், சங்கரராக வரும் ஸ்ரீதர் இருவருமே நடிப்பில் கருத்தும், கவனமும் கண்ணியமும் கொண்டு பாத்திரங்களைக் கையாண்டிருப்பது நாடகத்தின் வெற்றிக்கு ஒரு காரணம். சங்கரரின் அன்னை ஆர்யாம்பாளாக ஜெமினி ராஜேசுவரி, தந்தை சிவகுரு — வியாசர்— பைரவன் ஆகிய மூன்று பாத்திரங்களிலும் தோன்றும் ஆர். கே. ராமன் இருவருமே கச்சிதமாகச் செய்திருக்கிறார்கள். அதற்கு வசதியாக உருக்கமும் நெகிழ்ச்சியும் வசனங்களில் நிறையவே கொடுத்திருக்கிறார் சுகுமார்.

மேடையில் மின்சார — தந்திரக்காட்சிகளைத் திறம்படச் செய்திருக்கிறார்கள்.

பாடல்கள் வேண்டாம் என்று தோன்றுகிறது. அவை இல்லாமலே நாடகம் சிறப்பாய் இருக்கும்போது, பாடல்களைத் திணித்துத் தொய்வடையச் செய்வானேன்?

-சாருகேசி



வீட்டின் பின்புறம் பள்ளி விளையாட்டு மைதானம். விளையாடும் போது மாமரத்தில் காய்கள் இருப்பது தெரியும். எட்ட நின்று கவனித்தால் தெரிகிறது. கிட்டே போய் நின்றால் எல்லாம் பச்சையாக இருக்கிறது. காய்களைக் காண்பதில்லை.

''அம்மா அம்மா'' என்று கால்களைப் பிடித்து உலுக்கி எழுப்பினான்.

அம்மா விருட்டென்று எழுந்துகொண்டாள். பொழுது விடிந்திருப்பதைக்கண்டு பதற்றத்துடன் எழுந்து வேகமாகத் தாழ்வாரத்தைக் கடந்து உள்ளே போய் நின்று ''போய் வரேன்'' என்றாள்.

''முழிச்சண்டியா நானே எழுப்பணும்னு இருந்தேன்.''

மாமி இரண்டு டம்ளர்களில் காப்பி கொண்டு வந்திருந்தாள். அவள் பேசிக்கொண்டே செய்ய வேண்டிய காரியங்களை விவரித்தாள்.

''உன்னைவிட்டா நேக்கு ஆள் கிடையாது. அவசியம் வந்துடு. நான் சொல்லியனுப்பறேன். இத நெனவுல வச்சண்டு மத்த காரியங்களை கொஞ்சம் ஒதுக்கிப்போடு. என்னடியம்மா பண்ணுவியா... குளிர்லே வெறைக் கப்போட்டாளேன்னு கோவிச்சண்டுடாதே. ரூமே தெறந்து விடலாம்னு நேக்கு பயம். ஒழிச்சுபோட ஆள் இல்லாம அதது அப்படியே கிடக்கு. பூச்சி தேளு என்ன இருக்கும்னு தெரியாது. அதான். சாப்புடு.''

அம்மா பேச்சுக்கிடையே காப்பி குடிப்பது நன்றாக இருக்காது என்று டம்ளரை கையில் வைத்தபடி நின்றாள். இவன் குடித்து விட்டு வெறும் டம்ளரை நீட்டினான்.

''அங்கேயே வச்சுடுடா போதும். பிள்ளையாண்டான் என்ன பண்றான்?''

''படிக்கறான்.''

''மரத்துல நெறைய காய்க்குதா?'' அவன் கேட்டான்.

''வருஷம் பூராத் தேடினாலும் தட்டுக் காய் சேர்றதில்ல.''

அவன் பொய் சொல்லுகிறான்.

''விளையாடும்போது பார்த்தா நிறையத் தெரியுது.''

''எங்காச்சும் ஒண்ணு ரெண்டு இருக்கும். சரிடியம்மா சொன்னதெல்லாம் நெனவு வச்சண்டு வந்து போ.''

அம்மா சரி என்று தலையசைத்தாள். ஆனால் மேலே நகரவில்லை. அவள் வேறு ஏதோ ஒன்றை எதிர்பார்க்கிறாள். அவள் கூலியை எதிர்பார்க்கவில்லை. கூலியென்றால் நேரடியாகக் கேட்டு விடலாம். ஆனால் அவள் எதையோ எதிர்பார்க்கிறாள்.

மாமி சட்டென்று புரிந்து கொண்டவள் போல ''இரு இதோ வர்றேன்'' என்று உள்ளே போனாள்.

அம்மாவின் முகத்தில் மகிழ்ச்சி. மகனைத் தன்னோடு சேர்த்து நிறுத்திக் கொண்டாள்.

அவன் மீண்டும் மாமரத்தைப்பார்க்கிறான். இப்போது சின்ன காய் கைக்கு எட்டிவிடும் தூரத்தில் மூலையில் தொங்குகிறது. இவ்வளவு நேரம் தெரியாமல் போனதே என்று நினைத்தான்.

''இந்தா.''

மாமி பொட்டலம் கட்டிக் கொடுத்திருந்தாள். காகிதத்தில் எண்ணெய் பரவிக் கையில் படிகிறது. நேற்று அம்மா ராத்திரி முழுவதும் விழித்திருந்து செய்த பட்சணங்கள். மாமி விதத்திற்கு இரண்டு என்ற கணக்கில் கட்டிக் கொடுத்திருந்தாள்.

அவனுக்குப் புரிகிறது.

அம்மா இதற்காகத்தான் தயங்கி நின்றாள். இவனுக்காக. இதிலிருக்கும் இனிப்புகளில் ஒன்றையேனும் அவள் சாப்பிடப்போவதில்லை. எல்லாம் இவனுக்கே. ஒருநாளைக்கு ஒன்று என்ற திட்டத்தில் அவனுக்குக் கொடுப்பாள். இவன் தின்றுவிட்டு மீண்டும் அழுது அடம் பிடித்து இன்னுமொன்று வாங்கிக் கொள்வான்.

அம்மாவின் முகத்தில் மகிழ்ச்சி.

அவன் அம்மாவின் மெலிந்த பாதங்களைப் பார்த்தபடி நடந்தான். அந்தப் பாதங்களில் எந்த அழகும் வசீகரமும் இல்லையென்றாலும் அப்படியே நடந்து கொண்டே பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும்போல் அந்தச் சின்ன மனத்துக்குள் தோன்றியது.

கூடையில் விழாத பந்து

சுபஸ்ரீ

ஜலஜா, பட்டப் பரீட்சை எழுதி முடித்தவுடனேயே பம்பாய் மேற்குப் பிராந்திய ரயில்வே அவளுக்கு வேலை வழங்கி விட்டது. கூடைப்பந்து விளையாட்டில் அவள் ஸ்டேட் லெவலில் விளையாடிப்புகழ் பெற்றிருந்தாள். ரயில்வே நிர்வாகம் அவளைத் தேடிப் பிடித்து இரண்டு நிலை அதிக சம்பள உயர்வும் தந்து அவளுக்கு அக்கௌண்ட்ஸ் இலாகாவில் வேலை போட்டுத் தந்தது. இல்லாவிட்டால் சில தேசிய வங்கிகள் அவளுக்கு உத்தியோகம் தரப் போட்டி போட்டுக் கொண்டிருந்தன. விரைவில் அவள் மேற்குப் பிராந்திய ரயில்வேயின் பெண்கள் கூடைப் பந்து அணியின் காப்டன் ஆகி விட்டாள். உத்தியோகத்தில் சில சலுகைகளும் இருந்தன. குறைவான வேலையுள்ள மேஜை; மூன்று மணிக்குப் பயிற்சிக்கு விடுமுறை. டோர்னமென்டில் பங்கு கொள்ளும் நாட்களில் பிரயாண நாள் உட்பட ஸ்பெஷல் லீவு; படி வகையறா. ஜலஜா ஆட்டத்தில் புகழ்க் கொடி நாட்டி இருந்தாள்.

இத்தனைக்கும் அவள் வீட்டில் மருந்துக்குக் கூட ஒருவராவது விளையாட்டு மைதானப் பக்கம் எட்டிப் பார்த்ததில்லை. அவள் அப்பா 'ஹிந்து'வில் விளையாட்டுப் பக்கம் திருப்பினார் என்றால் ஒரு ஓரத்தில் பிரசுரமாகும் சாவுச் செய்திகளைப் படிக்கத்தான். ஜலஜா தானாகச் சிரத்தை எடுத்துக் கொண்டு இந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறாள்.

பெண் வளர்ந்து விட்டாளே என்று அம்மாவுக்குக் கவலை. 'ஒரு வரன் பாருங்கள். ஆச்சு நீங்களும் ரிடையர் ஆக நாளாச்சு' என்று குடைந்து கொண்டிருந்தாள். 'விளையாட்டில் வீராங்கனையாக இருக்கிறாள். ஒரு தேசிய விருது வரும் வரை ஆடட்டுமே. அப்புறம் இருக்கவே இருக்கிறது கல்யாணம், குழந்தை, ரப்பர் ஷீட், எல்லாம். மனம் ஆறுதல் அவள் வீட்டுக்காரர் இதற்கெல்லாம் முற்றுப் புள்ளி வைத்துவிடுவான்' என்று சமாதானம் சொல்லுவார் ஈசுவரன். 'கூடையும் பந்தும்தான் உங்களுக்கு வாழ்க்கை 'கோல்'. இன்னும் உடம்பு முற்றிப்போனால் எவன் அவளைக் கல்யாணம் செய்து கொள்ளுவான்?' 'போதும்... போதும் அசடு மாதிரி பேசாதே! நம்ம பொண்ணு விளையாட்டில் வீராங்கனை; வீட்டுக்கும் ஏற்ற மாதிரி' என்று ஈஸ்வரன் சமாதானப்படுத்துவார்.

அப்படியும், இப்படியுமாக பம்பாயில் ஒரு வரனைப் பிடித்து, பெண் பார்க்கும் படலத்துக்கு ஏற்பாடு செய்தார். பெண் பார்த்து முடிந்த கையுடன் தமது பெண்ணின் விளையாட்டுச் சாதனைகளை அடுக்கிக் கொண்டே போனார். வெற்றிக் கோப்பைகளைக் காண்பித்தார். சும்மா இருக்காமல் விளையாட்டுப் போட்டோ ஆல்பத்தையும் பிள்ளை வீட்டாருக்குப் பார்வைக்கு வைத்து விட்டார்! விளைவு 'ஸெல்ப்' கோல் ஆகிவிட்டது!

அவற்றைப் பார்த்த பிறகு பிள்ளை வீட்டார் முகம் காற்றுக் குறைந்த பந்துபோல் இறங்கிவிட்டது. ஏதோ சேலை உடுத்திய மலைப்பெண்ணை ஓர் அளவிற்கு அங்கீகரிக்கும் நிலையில் இருந்த அவர்கள் ஸ்போர்ட்ஸ் உடையில் இருந்த ஜலஜாவைப் பார்த்து விட்டு உதட்டைப் பிதுக்கினர். கூடைக்குள் விழாத பந்து போல் தப்பி விட்டனர். பிறகு சொல்கிறோம் என்று போனவர்கள் தான். 'எங்களுக்கு விளையாட்டுப் புலி எல்லாம் வேண்டாம். வீட்டுப் பசு தான் வேண்டும்' என்று ஜாடைமாடையாகச் சொல்லி அனுப்பி விட்டார்கள். ஈசுவரன் வீட்டிலும், ''போதுமே, பையன் வெறு சோனி. நம்ம ஜலஜாவிற்கு ஈடே போறாது'' என்று மாற்றுக் கேலி செய்து திருப்தி அடைந்தனர்.

அதற்குப் பிறகு இன்னும் இரண்டொரு பையன்கள் வந்தனர். வீராங்கனை என்றதும் தோல்வியுற்ற அணி போல் வெளியேறி விட்டனர்.

ஜலஜாவிற்குக் கூடச் சிரிப்பாக இருந்தது. கேவலம் தனது ஸ்போர்ட்ஸ் சாதனைகள் தனக்கு இடைஞ்சலாக வரும் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. சங்கீத விதூஷிகள், நாவல் ஆசிரியைகள், நடன சூடாமணிகள், டாக்டர்கள், ஐ. ஏ. எஸ் ரத்தினங்கள் எல்லாம் கல்யாணச் சந்தையில் விலை போய்க் கொண்டிருக்கையில் ஸ்போர்ட்ஸில் வெற்றி வாகை சூடும் பெண்களுக்கு மட்டும் என்ன பெரிய குறை?

ரன்னர் கிடையாது!

டென்மார்க்கில் ஒருமுறை ஒரு லீக் கிரிக்கெட் மாட்ச் நடந்தது. பாட்டிங் செய்ய வந்த பெண்மணி பலமாத கர்ப்பிணி. அம்பயரிடம் தனக்குப் பதிலாக ஓடுவதற்கு 'ரன்னர்' வைத்து கொள்ள அனுமதி கேட்டார். அம்பயர் அனுமதி தரவில்லை. அதற்கு அவர் சொன்ன காரணம் என்ன தெரியுமா? ''அந்தப் பெண்மணி ரன்னர் கேட்பதற்குச் சொல்லும் காரணம் மாட்ச் நடக்கும்போது நடந்தது இல்லை!'' என்பதுதான்.

நன்றி: ஸ்போர்ட்ஸ் ஸ்டார்.
தகவல்: ஜானவி.



கடைசியாக, செகந்திராபாத்தில் வேலை பார்க்கும் விஸ்வநாதன் என்ற பையனின் தாய், தந்தையர் ஜலஜாவைப் பார்க்க வந்தனர். அவர்களுக்குப் பெண் பிடித்திருந்தது. ''எங்கள் பையன் வாட்டசாட்டமாக ஆறடி இருப்பான். நாங்களும் அவனுக்கு இணையான பெண்ணாகத்தான் தேடிக் கொண்டு இருக்கிறோம். ஜலஜா பொருத்தமாக இருப்பாள்!'' ஜலஜா அப்பாவைப் பார்த்துக் கண் சிமிட்டினாள். அப்பாவும் டி. வி. யில் ரீப்ளே நிகழ்ச்சி போல் விளையாட்டு விஷயத்தை ஸ்லோ மோஷனில் சொன்னார். 'அதனால் என்ன, நான் கூட அந்த நாட்களில் விளையாட்டில் கெட்டி. பல்லாங்குழியானாலும் பாண்டியானாலும் இந்த சேஷியை ஜெயிக்க ஒருவராலும் முடியாது' என்று தமது பொய்ப்பல் கீழே விழுந்து விடாத ஜாக்கிரதையுடன் பெருமை பேசிக் கொண்டாள்.

'அந்தக் காலத்தில் பஞ்சக் கச்சம் கட்டிக் கொண்டு தினம் நாலு ரவுண்டு டென்னிஸ் ஆடுவேன்' என்று பிள்ளையைப் பெற்றவர் பெருமை பேசினார். ''பையன் பெண்ணைப் பார்த்துச் சரி என்று சொல்லிவிட்டால் பாக்கி விஷயங்கள் பொருட்டல்ல'' என்று கூறிவிட்டுப் போனது திருப்தியாக இருந்தது.

பெனல்டி விஷயத்தில் அம்பயர் முடிவு தங்கள் பக்கம் என்றவுடன் சந்தோஷிக்கும் அணி போல ஒரு மகிழ்ச்சி.

இதற்கிடையில் அகில இந்திய ரயில்வே கூடைப் பந்து விளையாட்டுப் பந்தயம் செகந்திராபாத்தில் நடைபெற இருந்தது. அதில் கலந்து கொள்ள மேற்குப் பிராந்திய ரயில்வே அணியும் சென்றது. விசுவநாதன் இன்பார்மலாக அங்கேயே பெண்ணைப் பார்க்கலாம் என்றும் ஏற்பாடாகியது.

டிஸம்பர் மாதத்துப் பருவநிலை சிலுசிலு வென்று ஒரு ரம்மியமான குளிரைத் தந்து கொண்டிருந்தது. டி ஷர்ட்டில் கம்பீரமாக நடந்து வந்த விசு செகந்திராபாத் ஸ்டேஷன் வி. ஐ. பி. ஸைடிங்கில் பல ரயில்வே அணிகள் தங்கி இருந்த முதல் வகுப்புப் பெட்டிகளில் வெஸ்டர்ன் ரயில்வே குழுவைத் தேடிக் கொண்டிருந்தான். அழுக்குத் துணி பேனர் அழைப்பு விடுத்தது. கோச்சின் கதவைத் தட்டியதும் யாரோ திறந்தார்கள். பாதி ஸமோஸாவை உள்ளே தள்ளிக் கொண்டிருந்த ஒரு பெண்மணி 'ஜலஜா ஸம்படி ஃபார் யூ' எனக் கூக்குரலிட்டாள். பிறகு 'ஏ' பெட்டியில் உட்கார அழைத்தாள். படுக்கைகள், ஸ்வெட்டர்கள், பழம் பத்திரிகைகள் ஒதுக்கப்பட்டன. உயரமாக ஒருவன் வந்தான். தான்தான் அணியின் கோச் குல்கர்ணி என அறிமுகப் படுத்திக் கொண்டான். ஆஜானுபாகுவான உருவம். விசுவநாதன் தன்னை ஜலஜாவிற்கு உறவு என்று அறிமுகப்படுத்திக் கொண்டான். 'ஜலஜா ஆவோ யார்' என்று குரல் கொடுத்தான். ஆங்காங்கு சிரிப்பும், கும்மாளமும் கோச்சை ஹிந்தியும் மராத்தியுமாக எதிரொலித்தன. ஓரிரு பெண்கள் தேகப் பயிற்சி செய்து கொண்டிருந்ததை விசு கவனிக்கத் தவறவில்லை. தனது செழு



மையான உடலை ஒரு ஸ்வெட்டருக்குள் திணித்தபடி ஜலஜா ஓடி வந்தாள். 'ஹலோ' என்று வரவேற்றபடி உட்கார்ந்தாள். தன் பெயர் விசுவநாதன் என்றதும் அவளுக்கு விளங்கி விட்டது. தனது டையைச் சரிப் படுத்திக் கொண்டு பாண்ட் நுனியை நீட்டி விட்டுக் கொண்டாள். 'இந்த நிலையில் உங்களை எதிர்பார்க்கவில்லை.' நாதம் வீணை யாக இல்லாவிட்டாலும், நாணம் கலந்து ஒலித்தது. வீராங்கனையாக இருந்தாலும் பெண்மை பந்திலுள் காற்றுப்போல மறைந்து இருந்தது.

'பிரேக்பாஸ்ட் சாப்பிடுகிறீர்களா...

''நோ... தாங்க்ஸ்...''

''கன்னிலால் நோ... காபி... ஏக் ப்ரேக் பாஸ்ட் லாவ்...''

தனது ஸாக்ஸ் உறையிட்ட கால்களைக் கான்வாஸ் பூட்ஸினுள் திணித்துக் கொண் டாள் ஜலஜா. அவனைப் புன்னகையுடன் பார்த்துக்கொண்டே வேலை முடிச்சிட்டாள்.

விசு காப்பியை உறிஞ்சியபடியே அவளை ரசித்தான். நல்ல உடற்கட்டு. விளையாட் டிலே புகழ்.

''ஒரு ஸாண்டுவிச் ஆம்லட் சாப்பிடுங் களேன்...''

''நான் சுத்த சைவம்...'' என்றான்.

''பாவி குல்கர்னி 2 மணி நேரம் வேலை வாங்கி விடுவான் கிரவுண்டில். இதைத் தின்று விட்டால் ஸ்டெமினா இருக்காது...'' என்று சொல்லியபடி அதைக் கடித்துக் கொண்டே 'சா'யை உறிஞ்சினாள். விசு அந்தக் காட்சியை ஜீரணிக்கச் சற்று கஷ்டப் பட்டான்.

''இன்று இரவு நாம் இருவரும் சேர்ந்து ஒரு ஹோட்டலிலே சாப்பிடுவோமே.?''

''இன்று வேண்டாம். மாட்ச் முடிந்த பிறகு 'ஹா' என்று படுக்கத்தான் தோன் றும். நாளை விடுதலைதான். காலை வைத்துக் கொள்வோமே?''

''ஓ. கே...''

''ஹரே ஜலஜா காடி ஆகயா...''

''சரி சந்திப்போம்...'' ஜலஜா கையை நீட்டினாள். கையை நீட்டிய பிறகுதான் அப்படிச் சகஜமாகச் செய்திருக்கக் கூடாதோ என்று தோன்றியது. அதற்குப் பிறகு கையைப் பின் வாங்குவது நாகரீகம் அல்ல என்று விட்டுவிட்டாள். விசு தயக்கத்துடன் அவள் கையைக் குலுக்கியபடி விடை பெற்றான்.

விசு ஒய். எம். ஸி. ஏ. இடலை நெருங் கிய போது ஒரு கூடைப் பந்தாட்ட விளை யாட்டிற்கு இவ்வளவு கூட்டத்தையும் ரஸிகர்களையும் எதிர்பார்க்கவில்லைதான். அழைப்புத் தாளைக் காண்பித்தவுடன் ஸ்பெஷல் இடத்திற்கு ஒரு தொண்டன் அழைத்துச் சென்றான். மின் விளக்கின் ஜகஜ்ஜோதியான ஒளியில் விளையாட்டு கோர்ட்டின் கான்கிரீட் தளம் மினுமினுத்துக் கொண்டிருந்தது.

மேற்கு பிராந்திய ரயில்வே கிழக்குப பிராந்திய ரயில்வேயைச் சந்திக்கும் இறுதி ஆட்டத்திற்கு விசில் ஊதப்பட்டது. கூடைப் பந்தைத் தரையில் தட்டிக் கொண்டு ஜலஜா முன்வரத் தொடர்ந்து மேற்கு அணி வரிசையாகக் கோர்ட்டுக்குள் நுழைந்த விதம் அழகாக இருந்தது. அதுபோன்று எதிர்க்கட்சியும் வரவு தந்தது. எல்லாம் வாலைக் குமரிகள், ஸ்வெட்டர், சிறுடை, கண்ணிற்கு இனிய விருந்தாக இருந்தது. பிரத்தியேக ஸ்டாப் கடிகாரத்துடன் ஸ்கோர் அதிகாரிகள் அமர்ந்து இருந்தவர்.

ஜலஜா அரை பாண்ட்டும் ஸ்வெட்டரு மாக சிறுடையில் நெடிதுயர்ந்து தனித்துக் காணப்பட்டாள்.

அவள் கவர்ச்சியாக இருந்தாள். இந்தக் கூட்டத்திடையே அவள் அப்படி வருவது விசுவிற்கு ஒரு மாதிரியாக இருந்தது. ஆட்டம் ஆரம்பித்த உடனேயே ஜலஜா கையில் பந்து விளையாடிற்று. குழைந்தது. மந்திர வசியப் பட்டதைப் போல் சொன்ன படி எல்லாம் கேட்டது. அவளது பார்ட்னர் டிசௌஸா பந்தை ஜலஜாவிடம் பறக்க விட்டு எறிவது தான் தாமதம்... அதை லாகவமாசப் பற்றி நாலு ஸ்டெப் பூமியில் அடித்துக் கொண்டே சென்று எங்கிருந்து அவள் எறிந்தாலும் சரிதான். 'இதோ நான் கூடைக்குள் போகிறேன்' என்று பந்து வலையைச் சரணடைந்தது. கூடை யைச் சுற்றி எதிர்க்கட்சி – உமாராவ் தனது உயரத்தைப் பயன்படுத்தி எகிறிப் பறந்து தடுக்க முற்பட்டாலும் பந்து மசியவில்லை. மேற்கு அணி ஸ்கோர், டிஜிட்டல் கடிகாரம் மணி போல் ஏறிக் கொண்டே இருந்தது.

எழுபதாவது நிமிஷ ஆட்டத்தில் அது நிகழ்ந்து விட்டது. எமிலியா எல்போ செய்து ஜலஜா சுருண்டு விழுந்தாள். வெள்ளைக் கோட்டுக்கு அப்பால் அவள் தூக்கிச் செல்லப்பட்டாள். பனிச்சென்று எழுந்து வந்த கோச் குல்கர்னி அவளது வலது தொடைச் சதைகளை உருட்டி மஸாஜ் செய்யத் தொடங்கினான். மீண்டும் முழங்கால் வரை இழுத்து விட்டு 'இப்போது எப்படி' என்று கேட்டான். அதற்குள் முதல் உதவி டாக்டர் வந்து பரிசோதித் தார்.

விசு கவனித்துக் கொண்டிருந்தான். 'டாக்டர் தான் இருக்கிறாரே இந்தக் கோச் பயல் எதற்கு இப்படி அவளிடம் நெருங்கு கிறான்'

இந்த விளையாட்டு உலகத்திற்கு ஒரு விவஸ்தை இல்லை போலும். எமிலியாவிற்கு மூன்றாவது எச்சரிக்கை கொடுத்து வெளியே அகற்றப்பட்டாள். ஜலஜா மெதுவாக எழுந்து ஒரு சில அடிகள் நொண்டிப்பிறகு காலை உதறிக் கொண்டே மீண்டும் இடலுக் குள் நுழைந்து விட்டாள். கூட்டம் 'ஜலஜா ஜிந்தாபாத் ஆவோ... ஆவோ ஜலஜா!'

என்று ஆரவாரித்து வரவேற்றது. ஆட்டம் இன்னும் அதிக விறுவிறுப்புடன் நடக்கத் தொடங்கியது. மேற்கு அணியின் 'ஸ்கோர்' விநாடிக்கு விநாடி கூடியது. கடைசியாக நீண்ட விசில் ஊதப்பட்ட போது மேற்கு அணி விளையாட்டு மகளிர் ஜலஜாவை 'அலேக்'காகத் தூக்கிக்கொண்டு ஜயகோஷம் செய்தனர். அணியின் கோச் ஜலஜாவைக் கைகுலுக்கி முத்தமிட்டான், மகிழ்ச்சியான வெறியில்.

விகவின் முணுமுணுப்பு 'ஜலஜா ஜிந்தாபாத்' என்ற வானளாவிய கோஷத்தில் மறைந்தது. பரிசுக் கோப்பை வழங்கப்படும் வரை கூட்டத்திற்குப் பொறுமை இல்லை. 'ஜலஜாம்மாயி ஏமி ஆட்ட ஆடிந்தி... அங்கமாதைற' என்று பாராட்டுக்களுடன் வெளியேறினர், பலர். புகைப்படங்கள் முடிந்து அணி புறப்பட்ட போது ஜலஜா விகவை எதிர்பார்த்தாள். ஆனால் அவனைக் காணவில்லை. அவன் பாராட்டும் அவளுக்குக் கிடைக்கவில்லை.

மறுநாள் காலை மேற்குப் பிராந்திய ரயில்வே அணியினர் ரயில்பெட்டி உற்சாகத்தில் திளைத்திருந்தது.

ஜலஜா மிகுந்த சிரத்தையுடன் தன்னை ஒப்பனை செய்து கொண்டாள். இரட்டைப் பின்னலுக்குப் பதிலாகத் தளர்ந்த பின்னல், ஒயிலான புடவை, பளிச்சென்று பொறுக்கி எடுத்த அணிகள்.

விகு, அரைமணியில் வந்து விடுவான். அவனுடன் நகரைச் சுற்றிப் பார்த்துவிட்டு ஓர் உயர் ஓட்டலில் உணவருந்தித் திரும்பும் திட்டத்திற்குத் தன்னைத் தயார்ப்படுத்தி எதிர்பார்த்திருந்தாள். நேற்றைய வெற்றி வாகையை விட இன்றைய எதிர்பார்ப்பு அவளுக்கு இனந்தெரியாத மகிழ்ச்சியை அளித்தது.

பெட்டியின் கதவு தட்டப்பட்டது. முன் நெற்றியைச் சரி செய்து கொண்டு அவசரமாக ஓடித் திறந்தாள். காக்கி உடைப் பையன் ஒரு கவர் நீட்டினான்.

'எதிர்பாராத காரணங்களால் அவசரமாக வெளியூர் செல்கிறேன். நமது திட்டம் ரத்தாவதற்கு மன்னிக்கவும்' ஒரு பாராட்டுக் கூட இல்லாத வெறும் செய்தி அஞ்சல்.

எதையும் ஸ்போர்டிவ் ஆக எடுத்துக் கொள்ளும் வழக்கம் உடையவள் ஜலஜா. புரிந்து கொண்டாள்.

'கோழை...' அவள் வாய் முணுமுணுத்தது. ''பெண்ணைத் தனக்குரிய சதையாக மட்டும் பார்க்கும் அற்பங்கள்!'' கடிதம் தூள் தூளாக உருமாறித் தண்டவாளங்களுக்கு இடையில் துவண்டு விழுந்தது.

'என்ன... ஒரு பையன்...' அம்மா மறுபடி ஆரம்பிக்கப் போகும் நிகழ்ச்சி அவள் இதழ்களுக்கிடையே ஒரு ஏளனச் சிரிப்பை வரவழைத்தது.

திடீர் செலவு

போட்டி 16:



திடீர் செலவுகளை எப்படி சமாளிப்பது? உங்களுக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய ரசமான அனுபவத்தை சுருக்கமாகக் கீழே எழுதி அனுப்பவும். பிரசுரமானால் உங்களுக்குப் பரிசு என்பதுடன் மற்றவர்களுக்கு 'டிப்' கொடுத்ததாகும். உறை மீது ''திடீர் செலவு'' என்று குறிப்பிடவும். இந்த அரைப்பக்கத்தை முழுவதுமாகக் கத்தரித்து அனுப்பவும். குலுக்கல்முறையில் பட்டுப் புடவை பெறும் ஒருவர் ஆண்மகனானால் பிரியமானவருக்குக் கொடுத்து மகிழலாமே!

முடிவு தேதி: 3.9.84

37 பட்டுப் புடவைகள் காத்திருக்கின்றன. அவற்றுள் ஒன்றைப்பெற வாரம் தவறாமல் போட்டிகளில் பங்கு பெறுங்கள்.

என் பெயர்: ....

விலாசம் : ....

....

பட்டுப் புடவை பரிசுத் திட்டம்


"நீயேன் அந்த ஸ்கூலிலிருந்து இந்த ஸ்கூலுக்கு மாத்திட்டு வந்தே?"
அங்கே யூனிபாரம் போடச் சொல்லி கழுத்தறுக் கறுங்கடி. இந்த ஸ்கூலிலே மனசுக்கு பிடிச்சமாதிரி ராகமாலிகா சேலெ கட்டிட்டு வரலாம்."
அரசினர் பெண்கள் உயர்நிலைப் பள்ளி

குளோஸ் அப்

அமிதாப் அரசியலுக்கு வருவாரா?

82-ம் வருட இறுதியில் அமிதாப் வாழ்வுக்கும் சாவுக்கும் இடையில் போராடிக் கொண்டிருந்தபோது லட்சோபலட்சம் மக்கள் அவருக்காகப் பிரார்த்தனை செய்தனர். பிழைத்தெழுந்த அவர் சுபாவத்தில் ஒரு மகத்தான மாறுதல். சாவைச் சந்தித்துத் திரும்பியிருந்த அவரிடம் அடக்கம் மிகுந்திருந்தது. மக்களின் அன்பு மழை நெகிழ்ச்சியை உண்டாக்கியிருந்தது. இதுவே 'பத்திரிகையாளரைச் சந்திப்பதில்லை' என்ற அவரது சுயக்கட்டுப்பாடு தளர வழி வகுத்திருக்கலாம்.

ஒரு ஹிந்தி பட ஷூட்டிங்குக்காக அவர் சென்னை வந்திருந்த போது அவரைச் சந்தித்தேன். ஏ. வி. எம். ஸ்டுடியோவில் மதியம் 12 மணிக்கு வரச் சொல்லியிருந்தார். ஆனால் அங்கே ஒரு சின்ன குழப்பம். அமிதாபுக்கு 'மூட்' சரியில்லை. அவரது மனைவியின் உறவினர் யாரோ ஒருவர் இறந்து விட்ட செய்தி வந்ததன் விளைவே இது என்று விசாரித்து அறிந்து கொண்டேன்.

பன்னிரண்டே காலுக்கு அமிதாப் 'செட்டை' விட்டு வெளியில் வந்தார். அவரைப் பார்த்ததும் என்னால் சிரிப்பை அடக்கவே முடியவில்லை. குபீரென்று சிரித்து விட்டேன்! காரணம் தேசியக் கொடியைக் கத்தரித்துத் தைத்தது போல் அவர் உடை அணிந்திருந்தார். இள மஞ்சளில் கதர்,



✕ அனிதா பிரதாப் குழந்தை ஸபீனுடன்

காவிக் கலரில் குர்த்தா, பச்சை நிற வெஸ்ட் கோட். போதாக் குறைக்கு முகமெல்லாம் மேக்அப் அப்பி, லிப்ஸ்டிக் அணிந்து, கன்னத்தில் ரூஜ் தடவிக் கொண்டிருந்தார். செயற்கைக் கண் இமைகள் வேறு! இந்தக் கோலத்தில் அவரை வண்ணத்திரைப்படத்தில் காண அற்புதமாய் இருக்கலாம். ஆனால் லட்சோப லட்சம் இதயங்களை ஆக்கிரமித்துள்ள அந்த அழகிய ஆண்மகன் இப்போது நேரில் பார்க்கும்போது படு வேடிக்கையாகத் தோன்றினார்.

ஆனால் அமிதாப் தம் உடை பற்றியோ என் சிரிப்பு பற்றியோ சிறிதும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. நேரே என்னிடம் வந்து ''இன்னும் 15 நிமிஷம் நீங்கள் காத்திருக்க வேண்டும். பகலுணவுக்கு முன் இன்னும் ஒரு ஷாட் பாக்கி இருக்கிறது. லஞ்ச் டயத்தில் பேட்டியை முடித்துக் கொள்ளலாம்'' என்றார்.



நான் தலையாட்டவும் ''நீங்களும் செட்டுக்கு வந்து ஷூட்டிங் பாருங்களேன்'' என்று அழைத்தார். அமிதாப் நடிப்பதைக் கண்ட போது எனக்கு ஏற்பட்ட எண்ணம், நடிப்பை ஒரு கலையாக மட்டுமின்றி தொழிலாகவும் கருதி மிகச் செம்மையாகச் செயல்படுகிறார் என்பதுதான். எல்லோரிடமும் பணிவுடன் பேசி நடந்து கொண்டாலும் கொஞ்சம் மரியாதைக்குரிய தொலைவிலேயே நிற்கச் செய்கிறார். பெரிய நட்சத்திரம் என்ற தோரணையில் ஆர்ப்பாட்டம் செய்வதில்லை. அடாவடித் தனமாகவும் நடந்து கொள்வதில்லை.

அருணா இராணியுடன் அமிதாப் நடனமாடிக் கொண்டிருந்தார். அதில் ஒரு குறிப்பிட்ட 'மூவ்மெண்ட்' படமாகிக்கொண்டிருந்தது. ஏனோ அந்த 'ஷாட்' சரியாக வரவில்லை. சுமார் 25 தடவை அதையே எடுத்திருப்பார்கள். அமிதாப் நடனமாடிய

படியே பிரகாசமாகப் புன்னகைக்க வேண்டும். கதைப்படி அந்தப் புன்சிரிப்பில் ஒரு வேடிக்கையான உட்பொருள் இருக்கலாம். சற்றும் தேவையில்லாத போது கண்ணாடி எதிரே நின்று செயற்கையாகப் புன்னகைத்துப் பாருங்கள். முகத்தில் அசடு வழியும்! அது எவ்வளவு கஷ்டமான காரியம் என்றும் புரியும். ஆனால் அமிதாப் ஒவ்வொரு முறையும் பிரகாசமாகப் புன்னகைத்தார். அதில் சிறிதும் அலுப்பு சலிப்போ செயற்கைத் தன்மையோ இல்லை. நடிப்பு என்பது எவ்வளவு கஷ்டமான விஷயம் என்று புரிந்து கொண்டேன்.

சுமார் ஒரு மணிக்கு அமிதாப் பேட்டி அளித்தார். அது ஒரு மணி நேரம் நீடித்தது. அவர் சாப்பிடப் போக வேண்டுமே என்பதால் நான் அவசரப்பட்டேனே யொழிய அமிதாப் நன்கு யோசித்து அமைதியாகப் பதில் கூறி வந்தார். என்னைத் துரிதப்படுத்தவும் இல்லை.

அவர் நல்ல நடிகர் மட்டுமல்ல; பண்பாளர். சிறிய தவறு கூட நுழையாத விதமாக ஆங்கிலம் பேசுகிறார், கணீரென்ற குரலில். ஆயினும் அவர் கண்களில் மகிழ்ச்சியை நான் காணவில்லை. ஏதோ ஒரு போராட்டம் அவர் மனத்தைக் குடைந்து கொண்டிருப்பது புரிந்தது. 'ஜெயாவா? ரேகாவா?' என்ற போராட்டமாயிருந்திருக்கலாம். நான் அதுபற்றிக் கேட்கவில்லை. அது அவர் சொந்த விஷயம்...

அவருடைய இப்போதைய உடல்நிலை குறித்தும் அவர் நடத்திய ஜீவமரணப் போராட்டம் லட்சக்கணக்கான மக்களைப் பாதித்தது பற்றியும் கேட்டேன். பம்பாய்ப் பட உலகுடன் தென்னிந்தியப் பட உலகை ஒப்பிடச் செய்தேன். பச்சன் தென்னிந்தியப் பட உலகைப் புகழ்ந்து தள்ளினார். நேரம் தவறாமை, சுறுசுறுப்பு, தொழிலை மதித்தல், இத்யாதி விஷயங்களில் சென்னையிடமிருந்து பம்பாய் சில பாடங்களைக் கற்க முடியும் என்றார்.

''அரசியல் பிரவேசம் செய்வீர்களா?'' என்றபோது, ''இந்திராவுக்கும் ராஜீவுக்கும் நான் நெருக்கமானவனும் இருப்பதால் பலர் அப்படி எண்ணுகிறார்கள்; நான் நிச்சயம் அரசியலுக்கு வர மாட்டேன்'' என்றார்.

உடனே நான், ''வன்மையான மறுப்பு தான் குறிப்பிட்ட காரியத்தில் ஒருவர் தீவிரமாக ஈடுபடப் போகிறார் என்பதற்கு முதல் அறிகுறி'' என்று சொல்லி, ராஜீவ் காந்தியை உதாரணம் காட்டினேன்.

பச்சன் பலமாகச் சிரித்தார். ''நான் அப்படி இல்லை, நிச்சயம் இல்லை'' என்றார். அந்தச் சிரிப்பும் மறுப்பும் கலப்படமற்ற சத்தியமாகவே ஒலித்தன.

அனிதா பிரதாப் சொல்ல:

எஸ். சந்திரமௌலி

அனிதா பிரதாப் போட்டோ: **சேகர்**

அடுத்தவாரம்: **கலைஞர்**



அருள்வாக்கு

இலவசமாக வேத சாஸ்திரம் கற்றுக் கொடுக்கிறோம் என்று ஆரம்பித்தால் கூட அதற்கு ரெஸ்பான்ஸ் (வரவேற்பு) இல்லை. வேத சாஸ்திரம் மட்டுமில்லை. திருக்குறள், தேவார — திவ்ய பிரபந்தம் அல்லது நம் தேசத்தில் நீண்ட காலமாக இருந்து, இப்போது நசித்துவரும் ஸித்தர் சாஸ்திரம் முதலானவற்றில் கூட இலவச வகுப்பு நடத்தச் சில பெரியோர்கள் எடுத்த நல்ல முயற்சிகள் பலன் தரவில்லை. இந்தப் படிப்பிலே போனால் உத்யோகத்துக்கு உதவி செய்கிற ஸ்கூல் படிப்புக்குப் பாதகமாகிறது என்று ஜனங்கள் இவற்றை ஆதரிக்காமலே விட்டு விடுகிறார்கள். அதனால் எனக்கு என்ன தோன்றுகிறது என்றால் ஸ்கூல் பாடத்தை விடாமல் அதோடேயே வேதாப்யாஸத்துக்கு உரியவர்களுக்கு வேதத்தையும் மற்றவர்களுக்கு இதர புராதன சாஸ்திரங்கள், கலைகள் இவற்றையும் சேர்த்துக் கற்றுக் கொடுப்பதற்காக ப்ரைவேட் ஸ்கூல்கள் ஆரம்பிக்கலாம். இன்னும் அரைமணி ஒருமணி ஸ்கூல் டயத்தை நீட்டி, லீவு நாட்களையும் கொஞ்சம் குறைத்துக் கொண்டால் இந்த மாதிரி ரெகுலர் ஸிலபஸோடு கூடவே சாஸ்திரங்கள் தேசியக்கலைகள் இவற்றையும் சொல்லிக் கொடுக்க முடியும். இப்படிப் பசங்களைத் தயார் பண்ணிக் காலவிரயமில்லாமலே 'மெட்ரிக்' பரீக்ஷைக்கு அனுப்புவதாக ஏற்பாடு செய்தால் அநேகப் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை இப்படிப்பட்ட ஸ்கூல்களில் சேர்க்க முன் வருவார்கள்.

'டிகிரி, டிப்ளமோவுக்கு ஹானியில்லாமலே' நம்முடைய புராதன சாஸ்திரங்கள், பக்தி நூல்கள், நீதிநூல்கள், கலைகள் ஆகியவை அழிந்து போகாமல் சொல்லிக் கொடுக்கிறோம்'' என்று பொது ஜனங்களுக்கு எடுத்துச் சொன்னால் அவர்கள் நிச்சயம் தங்கள் பிள்ளைகளை இப்பள்ளிக் கூடங்களில் சேர்ப்பார்கள். நம்முடைய தொன்றுதொட்ட மகத்தான நாகரிகத்துக்கு வாரிசாக வருங்காலப் பிரஜைகளை உருவாக்குகிற பேருபகாரம் இது.

-ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்



○ குன்றமலைக்குமரி

அநபாய சோழன் என்ற இரண்டாம் குலோத்துங்கன் ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான சீவக சிந்தாமணியை ஆர்வத்துடன் படித்து வந்ததும், அவருடைய மந்திரியாக இருந்த சேக்கிழார் சைவத்தின் சிறப்புக்களை எடுத்துக் கூறியதும் பின்னர் அநபாய சோழ மன்னர் திருத்தொண்டர் புராணம் பாடும்படி கேட்டுக் கொண்டதும், 'தில்லை நடராஜப் பெருமான்' உலகெலாம்' என்று அடி எடுத்துக் கொடுத்ததும் அனைவரும் அறிந்த வரலாறு.

பெரிய புராணத்தைப் பாடி முடித்ததும், கவிஞரையும் நூலையும் யானை மீது ஏற்றித் தாமே கவரி வீசிக் கௌரவித்தார் குலோத்துங்க மன்னர்.

இப்படிப்பட்ட பெருந்தகையான சேக்கிழார் உள்ளன்போடு வழிபட்ட கோயில் திருக்குடந்தை அருகில் உள்ள திருநாகேச்சரம். எத்தனை பெருமை வாய்ந்த கோவில். சிவபாதசேகரன் என்று சோழ நாட்டு வரலாற்றில் புகழ்பெற்ற ஸ்ரீ கண்டராதித்த மன்னரால் கட்டப்பட்ட கோவில் என்று கூறுகிறார்கள். அதற்கு முன்பும் செங்கல் திருப்பணியாக இருந்திருக்கலாம். ராஜேந்திர சோழ தேவர் காலத்துக் கல்வெட்டுக்கள் நிறைந்த கோவில். 17-ஆம் நூற்றாண்டிலும் அச்சுதப்ப நாயக்கன் மந்திரியாக விளங்கிய கோவிந்த தீக்ஷிதர் திருப்பணி செய்திருக்கிறார்.

சுந்தரமூர்த்தி நாயனார் பதிகங்களில் இந்த நாட்டின் வளத்தைப் படிக்கும்போது அழகு கொஞ்சுகிறது. செங்கயல் பாய் கழனித் திருநாகேச்சரம், தெங்கலை பூம் பொழில்சூழ் திருநாகேச்சரம் என்றெல்லாம் புகழ்ந்து பாடுகிறார்.

விரிதரு மல்லிகையும் மலர்ச் சண்பக
மும்மலர்ந்து
இரிதரு வண்டுபண்செய் திரு நாகேச்
சரத்தானே.

என்று அடிகள் மதிமயங்கச் செய்கின்றன.

இங்கு வழிபடும் பேறு பெற்றோரைக் கணக்கிட முடியாது. மிக முக்கியமான மூவரைப் பற்றி நாவுக்கரசர் பெருமான் கூறுகிறார்.

சந்தி ரனொடு சூரியர் தாமுடன்
வந்து சீர்வழி பாடுகள் செய்தபின்
ஐந்த லேயர வின்பணி கொண்டருள்
மைந்தர் போல்மணி நாகேச் சரவரே

சூரிய பகவான் தனது கதிர் கரங்கள் முடங்கிப் போகவே திருநாகேச்சரம் வந்து புஷ்கரிணியில் நீராடி ஈசனை வணங்கியதால் சாபந் தீர்ந்து மறுபடியும் கதிர்களை வீசி ஒளிரும் சக்தி பெற்றார்.

சந்திரன் உமையவளைப் பூஜித்து மகிழும் நாள் கார்த்திகை மாதப் பௌர்ணமி. மேகமில்லாமல் நிலவு எரிந்தால் சந்திரன் தன் அமுதமயமான கிரணங்களைத் தேவிமீது பொழிவதை அன்று காணலாம். இரவு 9.30 மணிக்குப் பக்தர்கள் கூடத் தரிசிக்கிறார்கள்.

நாகராஜனான ஆதிசேடன் இந்தத் தலத்தில் சந்திரசேகரரை வழிபட்டதால் இறைவன் நாகநாதர் என்ற பெயரைப் பெற்றார். நாக மன்னர்களான தக்கன், கார்க்கோடகன் முதலியோரும் வழிபட்டார்களாம்.

அம்பாள் சண்பக மரத்தடியில் அமர்ந்து தவம் செய்து ஈசனுடன் பாகம்பிரியா நாயகியாக ஐக்கியமானாள். ஈசன் அர்த்தநாரீசுவரராகத் திகழ்கிறார். செண்பக மரம் தல விருட்சம்.

கோபுர வாசலைக் கடந்து உள்ளே சென்றதும் கோட்டையைப் போன்ற மதிலைப் பார்க்கவே பிரமிப்பாக இருக்கிறது. முதல் ப்ராகாரத்தில் சூரிய புஷ்கரிணி. குளத்தைச் சுற்றி ஜப மண்டபங்கள் இடிந்து போயிருப்பதைப் பார்க்க வருத்தமாக இருக்கிறது.

நாகநாதரும் நாகேசுவரரும்

ஆனந்தி

விநாயகர் சந்நிதிகளில் குட்டிக்கொண்டு இரண்டாவது பிராகாரத்தை அடைகிறோம். மாலைவேளை. ஒரே கூட்டமாக இருக்கிறது. பிராகாரத்தில் நிறைய பேர் கூடையும்கையுமாகக் காணப்படுகிறார்கள். கோடியில் ஒரே கூட்டம். கணகணவென்று மந்திர சப்தமும், மணி ஓசையுமாக இருக்கிறது. அதுதான் நாகராஜா சந்நிதி என்றும், ராகுகால பூஜை செய்வது விசேஷமென்றும் ஞாயிற்றுக்கிழமையாதலால் பக்தர்கள் கூடியிருக்கிறார்கள் என்றும் அறிகிறோம்.

அபிஷேகம் செய்கிறார்கள். மேலேயிருந்து வெண்ணிறமாகப் பொழியும் பால் கீழே இறங்கும்போது நாகராஜா மீது தவழ்ந்து வருகிறது. அடாடா! நீலநிறமாகத் தெரிகிறதே பால்! இது நமது கண்கள் செய்யும் ஜாலமா? நம்பிக்கையின் விளைவா? அல்லது நாகராஜா நிகழ்த்தும் அற்புதமா?

தீபாராதனையைக் கண்டு களிக்கிறோம். நூற்றுக்கணக்கான மக்கள் கரங்கூப்பித் தொழுகிற காட்சியே ஒரு அழகுதான்.



✖ ஸ்ரீ இராகு பகவான்



✖ ஸ்ரீ சேக்கிழார்

பிராகார மண்டபத்தில் பல அன்பர்கள் விளக்குகள் எரிய, ஊதுவத்தி மணக்கப் பூஜை செய்கிறார்கள். ராகு, கேது தோஷமுள்ளவர்கள், சர்ப்பதோஷமுள்ளவர்கள், ராகு தசை, ராகுபுக்தி தோஷங்களால் பாதிக்கப்பட்டவர்கள் விரதமிருந்து பாலாபிஷேகம் பண்ணித் தானம் கொடுக்கிறார்கள்.

சுசீலர் என்ற முனிவரின் குழந்தையைத் தீண்டியதால் ராகுபகவானைச் சபித்து விட்டார் முனிவர். அதனால் ராகு பூலோகத்துக்கு வந்து சிவராத்திரி புண்யகாலத்தில் முதலில் திருக்குடந்தை நகரிலேயே உள்ள நாகேச்வரரை வணங்கி விட்டு, பிறகு பாம்பூர் நாடு என்றும் திருநறையூர் நாடு என்றும் வழங்கப்பட்டு வந்த நாகேச்சுரத்தில் நாகநாத சுவாமியை அடிதொழுது, பிறகு திருப்பாம்புரம் ஈசனை வழிபாடு செய்து, அடுத்ததாக நாகப்பட்டினத்தில் காயாரோகணேசரைப் பூஜித்துத் திரும்பவும் இங்கு வந்து ஈசனைத் துதித்துச் சாப விமோசனம் பெற்றாராம். அதனால் இந்த நாகராஜனை ராகு பகவானாகவே கருதி வழிபட்டு வருகிறார்கள். ஓரிரவில் இத்தனை தலங்களையும் தரிசித்த காரணத்துக்காகவே இவரைப் பூஜிக்கலாம்!

உள் பிராகாரத்தில் சேக்கிழார் சுவாமிகள் தன் தாயாருடனும் தம்பியுடனும் ஈசனை வழிபடுகிறார். வழக்கமான மற்ற மூர்த்திகளையெல்லாம் தரிசித்து வரும்போது அறுபத்து மூவரையும் காண்கிறோம். இந்தக் கோவிலில் இவர்கள் குடி கொண்டிருப்பது எவ்வளவு பொருத்தம்!'

சேக்கிழார் சுவாமிகள் காதலாகிக் கசிந்துருகி நின்ற நாகநாத சுவாமியின் சந்நிதியில் ஓம் நமச்சிவாய என்று விபூதியைத் தரித்துக் கொண்டு தேவியின் கோவிலுக்குச் செல்கிறோம்.

குன்றமுலைக் குமரி என்று சுந்தரரால் பாடப்பட்ட தேவியின் இருமருங்கிலும் கலைமகளும், அலைமகளும் நின்று நமக்குத் தரிசனம் தருகிறார்கள். கல்வி, செல்வம், ஞானம் மூன்றையுமே வாரி வழங்கிவிடுவார்கள். புஷ்ப மாலைகளைச் சுமந்து கொண்டு நெற்றித் திலகம் பளிச்சிட, நித்திய சுமங்கலியாய்ப் பட்டாடையணிந்து பண்பு மிகுந்த கம்பீரத் தோற்றத்துடன் பொலிகிறாள் அன்னை.

சேக்கிழார் சுவாமிகள் தாம் பிறந்த குன்றத்தூரில் தம் மனம் கவர்ந்த திரு


நாகேச்சுரரை எழுந்தருளச் செய்து கோவில் கட்டினார். அருள்மொழித் தேவர் என்றும் பெயருடைய சேக்கிழார் வழிபட்ட கோவிலுக்குச் சென்று தரிசனம் செய்த பிறகு குன்றத்தூரில் அவர் கட்டிய கோவிலையும் பார்க்க வேண்டும் என்ற அவா உள்ளத்தில் குடி கொண்டது.

குன்றத்தூர் சென்னையை அடுத்து செம்பரம்பாக்கம் ஏரிக்குப் பக்கமாக இருக்கிறது. மாங்காடு காமாட்சி கோவிலிலிருந்து சுமார் 4 கிலோமீட்டர் தான்.

'சேக்கிழார் கட்டிய கோவில் எது?' என்று விசாரித்துக் கொண்டே செல்கிறோம். குன்றின் மீதுள்ள முருகப் பெருமான் ஆலயம் நெடிசென்று கண்களுக்குப் புலனாகிறது.

''சேக்கிழார் கோவிலா? இப்படிப் போங்க'' என்று ஒருவர் வலது புறம் காட்டினார். அப்படிப் போனதும் சின்னக் கோவில் ஒன்று தெரிந்தது. உள்ளே போனதும் சேக்கிழார் பெருமானே கருவறையில் இருக்கிறார்!

அங்கிருந்த பெரியவர் 'இது சேக்கிழாருடைய வீடு' என்றும் 'தினசரி பூஜைகள் நடக்கிறது' என்றும் கூறினார். பிராகாரத்தில் வலம் வரும்போது கோவிலைச் சுற்றி மரங்கள் சோலையாக இருப்பதைக் காண முடிந்தது. மெல்லிய காற்றும், பச்சை மரங்களில் வண்ண மலர்களும், வண்ண வண்ணமான பட்டுப் பூச்சிகளும், ஒரு மரத்தில் அமர்ந்திருந்த தேன் சிட்டுக்களுமாய் இயற்கையழகு தவழ்கிறது.



உத்தம சோழப் பல்லவ ராயன் என்று சோழ மன்னரால் பட்டமளித்துக் கௌரவிக்கப்பட்டவர்; ஈசன் குரலைக் கேட்டு மகிழ்ந்தவர்; சிவத்தொண்டர் பெருமைகளை உருகி உருகிப் பாடியவர்; தமிழ் மொழி செழிக்கச் செய்தவர்; சைவம் தழைக்கச் செய்தவர்; அநபாய சோழன் அளித்த பொன்னையெல்லாம் சிவ கைங்கரியத்துக்கே செலவிட்ட புண்ணியர்; தொண்டர்சீர் பரவுவார் என்ற காரணப் பெயர் பெற்றவர் — இவரை எத்தனை தடவை விழுந்து வணங்கினால் போதும்? சரீரம் இடம் கொடுத்தால் எத்தனை தடவைகள் வேண்டுமானாலும் நமஸ்கரிக்கலாம்.

மறுபடியும் சேக்கிழார் கட்டிய கோவிலான வடதிரு நாகேச்சுவரத்தைத் தேடி வந்த வழியே திரும்புகிறோம். புதிய கோபுரம் காட்சியளிக்கிறது. எதிரே சூரிய புஷ்கரிணி. குளம் நன்றாக இருக்கிறது.

உள்ளே சேக்கிழார் சந்நிதி இருக்கிறது. முதல்நாள் ஆடிப்பூர உற்சவம் முடிந்திருந்த படியால் இன்று கூட்டம் இல்லை. நல்ல அமைப்புள்ள சிறிய கோவில். நேரேசுவாமி சந்நிதியை அடைகிறோம். பித்தளைத் தகடு வைத்து அடித்த கருவறை நிலைவாசல் பளபளவென்று சுத்தமாக இருக்கிறது.

சுவாமிக்கு நாகாபரணம் சாத்தவில்லை. சற்று எட்டிப் பார்த்தால் பெரிய வெள்ளி நாகாபரணம் தனியே பளபளவென்று மின்னுகிறது. நாகனையும், நாதரையும் தனித் தனியே தரிசித்து விட்டோம்.

அங்குள்ள போக சக்தி அம்மனின் வடிவை இன்று முழுவதும் பார்த்துக் கொண்டிருக்கலாம். சிவப்புக்கரை போட்ட நீலப்புடவை உடுத்தி ஒயிலாக நிற்கிறாள். தீபாராதனை செய்து விபூதி வழங்கியதும் பிராகாரத்தை வலம் வருகிறோம்.

சுந்தரர் பரவையாருடன் தரிசனம் தருகிறார். அழகிய பரிவார தேவதைகளும், உற்சவ மூர்த்திகளும் நமது உள்ளத்தை ஈர்த்து மலரச் செய்கிறார்கள். நடராஜரையும், சிவகாமியையும் பிக்ஷாடனமூர்த்தியையும் கலை வடிவங்கள் என்பதற்காகவே வணங்கலாம். கிராம தேவதைகளான பொன்னியம்மனும் வேம்புலியம்மனும் கூட பிரகாசமாகத் துலங்குகிறார்கள்.

சித்ரா பௌர்ணமி உற்சவத்தில் பிக்ஷாடனர் 9—ஆம் நாள் புறப்பாடு. ரொம்ப அழகாக இருக்குமாம். ஆடி மாதத்தில் வேம்புலியம்மனுக்குத் தீமிதி உற்சவம் பத்து நாட்கள் நடக்குமாம். பொன்னியம்மனுக்கோ பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை செம்பரம்பாக்கம் ஏரியைச் சுற்றியுள்ள 18 கிராம மக்களும் சேர்ந்து விழா எடுப்பார்களாம். அது ரொம்பத் தடபுடலாக இருக்கும் என்று கூறினார் குருக்கள்.

இக்கோவிலில் நாகேசுவரரைப் பிரதிஷ்டை செய்த சேக்கிழாரின் பிறந்த நாளான வைகாசிப் பூசத்தில் மிக விமரிசையாக விழா நடத்துகிறார்கள்.

சிவதரிசனமும், சிவத்தொண்டர் தரிசனமும், தொண்டர்சீர் பரவுவார் தரிசனமும் ஒருங்கே பெற்ற மன நிறைவில் மூழ்கித் திரும்புகிறோம்.

நீங்கள் கேட்டவை தராசு

○ என். செல்வராஜ், கரூர்.

? உதவி ஜனாதிபதி பதவி ஒரு தமிழருக்குக் கிடைத்திருக்கிறதே, சந்தோஷப்படலாமா?

! பேஷாக சந்தோஷிக்கலாம். அவரைத் தமிழர் என்று வீரமணி வட்டாரம் ஒப்புக் கொண்டால் இன்னும் அதிகமாகவே மகிழலாம்.

○ எம். அசோகராஜா, அரவக்குறிச்சி.

? மொட்டை அடிப்பவர்கள் அப்பாவிகளா?

! இல்லை. அரசின் உற்பத்திக்கு உதவாத ஊதாரிச் செலவினங்கள் வினோவான பற்றுக் குறை பட்ஜெட், அதன் விளைவான நோட்டு அச்சடித்தல், விலைஉயர்வு இவற்றின் விளைவான பணவீக்கம் உடன் விளைவான விலைவாசி உயர்வு இவற்றால் மொட்டை அடிக்கப்படும் மத்தியதர வகுப்பினர் அப்பாவிகள்.







○ வே. கோபால், மாதேமங்கலம்.

? ஓய்வை எப்படி கழிக்கிறீர்கள், தராசு அவர்களே?

! கொடைக்கானல். கூட்டமில்லாத அஃப் சீஸன். டவுன்ஷிப் ரெஸ்ட் ஹவுஸில் சீப்பாக ஒரு ரூம் — குளிக்கவும் தூங்கவும் மட்டுமே. மற்ற நேரத்தில் ஹாய்யாக ஏரியைச் சுற்றி வரல். கால் கெஞ்சும் போது மர நிழலில் ஆசனங்களுள் ஒன்றில் அமர்ந்து நாவல் படித்தல். சண்முக விலாஸ் சாப்பாடு, டிபன்... ஹூம்... அதற்கெங்கே நேரம் கிடைக்கிறது...?

○ பி. கே. சங்கர், கல்கத்தா—26.

? டி. வி. யினால் குழந்தைகள் படிப்பு பாதிக்கப்படுகிறதா?

! படிப்பு மட்டுமா? குடும்பப் பற்று, பாசம், விளையாட்டு, கண் பார்வை, உடல்நலம், மனநலம், அழகுணர்ச்சி, உணவை ருசித்து உண்ணல், இலக்கிய ஈடுபாடு, கலை ஆர்வம் முதலிய எல்லாமே.

○ எம். சம்பத், வேலாயுதம்பாளையம்.

? சென்னை விமான நிலைய வெடிகுண்டு விபத்தின் உண்மையான பின்னணி என்ன?

! விமான நிலைய அதிகாரிகளின் அசிரத்தை ஒன்று. ஹைஜாக் செய்வது, குண்டு வைப்பது போன்ற செயல்களால் ஒரு பாவமும் அறியாத உயிர்களைப் பலி வாங்குவது வீரமோ விடுதலைக்கான மார்க்கமோ அல்ல என்பதை உணராத மூடத்தனம் இரண்டு. மற்றபடி விசாரணையைச் சீக்கிரம் முடித்தால் கன்று பின்னர் வதந்திகள் பரவுவதைத் தடுக்கலாம்.

○ ஆர். பூபாலன், கிருஷ்ணகிரி.

? நீங்கள் முன்னால் பிறந்த காதுகள் பக்கமா? பின்னால் வளர்ந்த கொம்புகள் பக்கமா?

! நான் அந்த இரு தரப்பிலும் சேராதவன் என்றாலும் ஈசாப் கதையை எண்ணிப் பாராமல் இருக்க முடியவில்லை. உங்களுக்கும் தெரிந்திருக்குமே... ஒரு கலைமான் தன் அழகிய, உறுதியான, முட்டி மோதி வேதனைப் படுத்தக் கூடிய கொம்புகளை நீரில் பிரதிபலிக்கப்பார்த்துக் கர்வம் அடைந்தது. ஒரு புலி துரத்திய போது மான் தப்பி ஓடவும் தாழ்வான மரக்கிளைகளில் கொம்பு சிக்கிக் கொள்ள...



விமான நிலையத்தில் குண்டு வெடித்ததன் பின்னணி என்ன?

○ எஸ். வி. ராஜசேகர், சென்னை-5.

? லாஸ் ஏஞ்சலஸ் ஒலிம்பிக் திறப்பு விழாவை விட ஏஷியாட் திறப்பு விழா நன்றாக இருந்தது போல் தோன்றுகிறதே?

! அதில் அதிசயமொன்றுமில்லை. முதல் நாள் எப்போதும் கலைநிகழ்ச்சிகளே அதிகம் இடம் பெறும். ஒலிம்பிக்கில் நாம் பார்த்தது நமக்கு அந்நியமான கலைநிகழ்ச்சிகள். பரதம் பார்த்துப் பழகியவர்களால் பாலேயை அவ்வளவாக ரசிக்க முடியாதுதான்.

○ வி. கோபிநாத், லெட்சுமாங்குடி.

? காமராஜரின் வாரிசு அனந்தரா? நெடுமாறனா?

! வாரிசு எனக் கருதப்பட்ட பெயரை ஒட்ட வைத்துக் கொண்டால் போதுமா என்ன? என்னென்னவோ எதிர்பார்க்கிறோம். அவ்வப்போது மனநிறைவு ஏற்பட்டாலும் அடுத்தடுத்து ஏமாற்றங்களும் தொடர்கின்றனவே.

○ பி. எல். பரமசிவம், மதுரை-1.

? அற்பத்தனம் எங்கே உற்பத்தி ஆகிறது?

! ஒரே கார்டில் சிலர் நுணுக்கி நுணுக்கி எழுதிப் பல கேள்விகள் கேட்கும்போது.

○ காழி. க. இளங்கோ, நந்தியநல்லூர்.

? பட்டென்று பதில் சொல்லுங்கள், தமிழகத்தின் அடுத்த மு. ம. யார்?

! பொ. பா.

○ சாதிக்பாட்சா, நீடூர் ★

? 27, 28, 29 மூன்று நாட்கள் நடந்த மருந்துக் கடை கடையடைப்பு பற்றி...?

! கசப்பு மருந்தைக் கூட விழுங்கி விடலாம், உடம்புக்கு நல்லதென்று. இது மனக்கசப்பை மட்டுமே உருவாக்கிய விஷயம். பரிதவித்தவர் பல்லாயிரம். கோரிக்கைகளை வலியுறுத்த எத்தனையோ மார்க்கங்கள் உண்டு. நியாயம், கோரிக்கையில் மட்டுமிருந்தால் போதாது. அதை வலியுறுத்த மேற்கொள்ளும் வழிமுறையிலும் இருக்கவேண்டும்.

○ நாகை. பொன்னி, கும்பகோணம்.

? பிறப்பின் ரகசியம் போன்ற மருத்துவப் படங்களைக் கூட ஆபாசக் கண்களுடன் பார்த்து ரசிப்பவரைப் பற்றி....?

! இந்தப் பலவீனத்தை நம்பித்தானே விஞ்ஞான ரீதியில் மட்டுமின்றி வியாபாரக் கண்ணோட்டத்துடனும் இத்தகைய படங்களை எடுக்கிறார்கள்.

○ ஆர். நிலோ, புகலூர்.

? அண்ணா பிறந்த நாளிலிருந்து மதுவிலக்கை மீண்டும் அமல்படுத்தப் போவதாக எம்.ஜி.ஆர். அறிவித்துள்ளாரே?

! எந்த ஆண்டில் வரும் பிறந்தநாள் என்று குறிப்பிடவில்லை என்பது ஒருபுறமிருக்க இப்படி மதுவிலக்குக்கும் மதுவிலக்கு ரத்துக்கும் இடையே ஊஞ்சலாடுவது மதுப் பழக்கத்துக்கு மக்களை அடிமைப்படுத்துவதை விடவும் கொடுமை.

○ கே. என். ராமகிருஷ்ணன், கரூர்.

? பதக்க வரிசையில் இந்தியா காணப்படாதது தொடர்கதைதானா?

! மெடலே வாங்காத சாதனைக்கு ஒரு தங்க மெடல் தரக் கூடாதோ..சே!

○ ஆர். கே. லிங்கேசன், மேலகிருஷ்ணன்புதூர்.

? பாரதிராஜா மீண்டும் நிலைத்து விட்டாரே...?

! நிலைத்தது பாரதி ராஜா அல்ல, ரேவதி தான்.

○ வி. ஆர். நாகராஜன், வளவனூர்.

? ஒரு பத்திரிகை நடத்துவதில் என்ன என்ன சிரமங்கள் உள்ளன?

! இதற்குப் பதில் எழுதுவதெனில் ஒரு இலவச இணைப்பே போடலாம். ஆனால் அதற்கும் காகிதத் தட்டுப்பாடு; கட்டுவராத அளவில் காகித விலை உயர்வு...

○ டி. எல். ரெட்டி, வேலிநபட்டி.

? மக்ஸஸேசாய் விருது பெற்ற ஆர். கே. லக்ஷ்மண் அவர்களின் ஸ்பெஷாலிடி என்ன?

! ஸ்ரீமான் பொதுஜனம். (பார்க்க, படம்.)

○ கோ. க. சுரேஷ், கோவை-9.

? இராஜேந்தர், ஜெயலலிதா, சோ—யாருக்குச் செல்வாக்கு அதிகம்?

! தற்போது (J) ஜே- போடுபவர்களே அதிகம்.

○ கே. எஸ். எஸ். மணியன், சென்னை-50.

? கொத்தவால் சாவடிக்குச் சென்று காய்கறி வாங்கிக் கொண்டு அப்படியே பூக்கடைக்குச் சென்று பூ வாங்கிய அனுபவம் உண்டா?

! ஐப்பசி மாதத்தில் ஒருநாள் மலையப்பெருமாள் தெருவிலிருந்து கொத்தவால்சாவடிக்கு நடக்கிறேன். நசநசவென்று தக்காளிப் பழங்களும் வெங்காயத் தோல்களும், வாழைப் பட்டைகளும் தெருவில் சேற்றோடு கலந்து 'சபக் சபக்' என்று நடக்கும்போது ஒரு சத்தம். பெரிய பெரிய கூடைகளைச் சுமந்து வருவோர் மீது முட்டாமல் மோதாமல் நடக்கையில் செருப்பு முதுகை ஸ்ப்ரே செய்து கொண்டே இருக்கிறது. காய்கறிகளை ஒரு மாதிரி வாங்கிப் போட்டுக் கொண்டு சுமக்க முடியாமல் சுமந்து, மழைத் தூறலிடையிலும் உடல் வியர்த்துக் கொட்ட, பூக்கடை நோக்கி ஒரு சின்ன சாக்கடைக் கால்வாயிலே நடந்து, மதுரை மல்லி என்ற பெயரில் பூந்தமல்லி பூவைத் தலையில் கட்டிவிட, காதிலே பூவுடன் வீடு திரும்ப எலக்டிரிக் டிரெயின் நெரிசலில் பெரிய பெரிய பைகளுடன் இடிபாடி, ஒரு வழியாக வீட்டை அடைந்தால்... ''என்ன பார்க்கவே எடை கம்மியா இருக்கே...'' பரணிலிருந்து தராசு இறக்கி நிறுத்தால் எல்லாம் கால் கிலோ, 200 கிராம் என்று குறைவு! 'அச்சூ!' தும்மல், தலைவலி, டாக்டர் பில், மருந்து பில். போதுமடா சாமி! 10 பைசா கால் ரூபாய் விலை கூடுதலானாலும் பக்கத்திலேயே உள்ள ரங்கநாதன் தெருவுக்கு ஈடாகுமோ?

★ ரூ. 10 பரிசு பெறுபவர்:

எம். எச். சாதிக் பாட்சா,
3-69, நாஜீ வீதி, நீடூர்-609 203.



யோகாசன மகிமை

"உன்னுடைய வருமானத்தில் பத்து சதவீதமாவது அறப்பணிகளில் செலவிடு..." என்பாராம் ஸ்வாமி சிவானந்தா. அந்த ஆணையை அப்படியே ஏற்று அன்பர் ஒருவர் நிறுவியுள்ளது அடையாறு காந்திநகரில் உள்ள சிவானந்த யோகாலயா. இங்கே யோகப் பயிற்சி இலவசம்.

யோகாசன முறைகளைத் தகுதி வாய்ந்த ஆசிரியர் ஒருவரின் உதவியுடன் கற்றுக் கொள்வதே நல்லது. யோகாசனக் கலையைப் பற்றிப் பலரும் விவரம் அறியச் செய்வதே இந்தக் கட்டுரைகளின் நோக்கம்.

காலையிலோ மாலையிலோ 15 முதல் 45 நிமிஷங்கள் வரை வயிறு காலியாக இருக்கும்போது யோகாசனப் பயிற்சியில் ஈடுபடலாம். பத்து வயதுக்கு மேற்பட்ட சிறுவர்-சிறுமியர் யோகப் பயிற்சி பெறலாம். பெண்கள் பேறு காலத்தில் போதும், மாதாந்திர ஓய்வுகளில் போதும் யோகாசனப் பயிற்சியைத் தவிர்த்து விடலாம்.

ஸ்நானம் செய்த பின்னரே யோகப் பயிற்சியில் ஈடுபட வேண்டும். மிக இறுக்கமான ஆடைகளும் கூடாது. மிகத்தளர்த்தியான ஆடையும் உதவாது. எந்த யோகாசன நிலையிலும் களைப்பேற்படுகிற அளவு வருத்திக் கொள்ள வேண்டியதில்லை.

வஜ்ராசனம்

யோகாசனங்கள் அமைதியான முறையில், நிதானமாகச் செய்யப்பட வேண்டியவை. எனவே வேறு எந்த உடற்பயிற்சியையும் யோகாவுடனோ, பிராணாயாமத்துடனோ சேர்த்துச் செய்ய வேண்டாம். குறைந்த பட்சம் இவற்றுக்கிடையே ஒரு மணிநேர இடைவெளி வேண்டும்.

காலையில் எழுந்தவுடனும் இரவு படுக்கப் போகும் முன்பும் ஒரு தம்ளர் நல்ல தண்ணீர் பருகுவது நல்லது. ஆசனம் செய்துமுடித்த பின்னர் பால் அல்லது பழச்சாறு பருகலாம்.

இவை பொதுவான சில குறிப்புக்கள் தான். மனக்கட்டுப்பாடும், தூய்மையுமே முக்கியம். முதலில் நம்முடைய உடலை வசப்படுத்தி விட்டால், மனத்தை அடக்கி ஆள்வது வெகு சுலபம்.

பத்மாஸனம் போல் தியானத்துக்கு மிகவும் ஏற்றது வஜ்ராசனம். கால்களை நன்றாக மடக்கி பத்மாஸன நிலையில் அமரச் சிரமப்படுகிறவர்கள் கூட வஜ்ராசனம் பழக்கிக் கொள்ளலாம்.

இஸ்லாமிய சகோதரர்கள் நமாஸ் தொழுகை நேரத்தில் அமர்ந்திருப்பது இந்த வஜ்ராஸன நிலையில் தான்.

தரை விரிப்பின் மீது கால்களை மடக்கி, மண்டியிட்டு அமர வேண்டும். பாத விரல்கள் முதல் முழங்கால் வரை தரையில் படிந்திருக்க வேண்டும். உள்ளங்கால்கள் மேல் நோக்கி மலர்ந்திருக்க வேண்டும். முழங்கால்களை விலக்கக் கூடாது. உடம்பு, கழுத்து, தலை மூன்றும் செங்குத்தாக நிமிர்ந்திருக்க வேண்டும். முழங்கால்கள் விலகியிராமல் சேர்ந்து இருக்கவேண்டும். இரு குதிகால்களுக்கும் இடையில் அமரவேண்டும்.

இதே நிலையில் அமர்ந்து சுவாசத்தை மட்டும் கவனித்தபடி கண்களை மூடிக் கொள்ளலாம். தியானம் செய்யலாம்.

ஆசனத்தை நிறைவு செய்யும் போது, குதிகால்களை விட்டு எழுந்து, மண்டியிட்ட நிலையை அடைந்து பிறகு எழுந்து கொள்ளலாம்.

இந்த ஆசனத்தால் உடம்பின் நரம்பு மண்டலம், தொடை, கால்கள், பாதம் எல்லாம் உறுதியாகும். வயிற்றில் உள்ள உணவு நன்கு செரிமானமாகும். பொதுவாக மலச்சிக்கலை அகற்றுவதில் வஜ்ராசனம் உதவும்.

தகவல் உதவி: சிவானந்த யோகாலயா
சென்னை-20

கட்டுரை: சுப்ரபாலன்

படத்தில் குமாரி ஆஷா

புகைப்படம்: தாமோதரன்



அலசல்

பாலாறு

ஆம்பூர், பேரணாம்பட்டு, வாணியம்பாடி ஆகிய பகுதிகளில் உள்ள ஏராளமான தோல் பதனிடும் தொழிற்சாலைகள், கழிவு நீரை, சுத்திகரித்து வெளியே அனுப்பாமல், மிக, மிக மோசமான அசுத்த நிலையிலேயே பாலாறு மற்றும் அதன் உப ஆறுகளிலும் மண் குட்டைகளிலும் விட்டுவிடுகின்றன. ஏறக்குறைய சுமார் 300 இரசாயனப் பொருட்கள் தோல் பதனிடுவதற்குப்பயன் படுத்தப்படுகின்றன. கழிவு நீரின் தன்மை எத்தகையதாய் இருக்கலாம் என்று யூகிக்க லாம். இதனால் நிலத்தடி நீரின் தூய்மையும் கெட்டு விட்டது. பாலாற்றைச் சார்ந்திருக் கின்ற விவசாயக் கிணறுகள், குடிதண்ணீர் அமைப்புக்கள் ஆகியவை நாசமாகி விட்டன.

பிரச்னையின் பரிமாணம்

குடிநீர் அமைப்புக்கள் கெட்டுப்போய் இருப்பதால் அதைப் பருகும் மக்கள் பல் வேறு நோய்களுக்கு உள்ளாகிறார்கள். ஆம்பூ ரின் குடிநீர் மக்கள் குடிப்பதற்கு லாயக் கற்றது என்று பல அரசு ஆய்வு நிறு வனங்கள் ஆய்ந்துரைத்துள்ளன. வேறுவழி யின்றி இந்தக் குடி தண்ணீரையே பயன் படுத்துவதால் ஆம்பூர் பகுதியின் மக்கள் இதனால் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். இதோடல்லாமல் சுற்றுப்புறக் கிராமங்களில் உள்ள சுமார் 30 கிராமங்களின் குடி தண்ணீர் அமைப்புகளும் பாதிக்கப்பட் டுள்ளன.

விவசாயத்தைப் பொறுத்தவரை, ஆம்பூர், பேரணாம்பட்டு, வாணியம்பாடி, ராணிப் பேட்டை பகுதிகளில் மட்டும் சுமார் ஒரு லட்சம் ஏக்கர் விளை நிலங்கள் இப்பிரச்சினை யால் மிக மோசமாகத் தாக்கப்பட்டுள்ளன. இதனால் வேளாண்மைத் தொழிலில் சுமார் 25 கோடி ரூபாய் அளவுக்கு இழப்பு ஏற்படுவதாக 1982-ம் வருடத்திய அரசின் புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

ஆம்பூரில் மட்டும் பாலாற்றுப் படுகையில் இருந்து நாளொன்றுக்கு சுமார் 50 முதல் 70 லட்சம் லிட்டர் தண்ணீர் தோல் பத னிடும் தொழிற்சாலைகளுக்காக எடுக்கப்படு கிறது. மிகப்பெரிய தோல் தொழிற்சாலைகள் சில தங்களின் பகாசுர தண்ணீர் தேவைக்குக் கெடாமலிருக்கும் ஒரிரு கிணறுகளைத் தான் நம்பி இருக்கின்றன. தண்ணீர் சீர் கேடு தொடர்ந்து பரவி வருவதால் இந்த ஒரிரு கிணறுகளும் மிக விரைவிலேயே கெட்டுப் போய் விடலாம். அதனால் தொழிற்சாலைகள் பாதிக்கப்பட்டு, தொழிலாளர்கள் மத்தி யில் வேலை குறைவு, வேலை நீக்கம் போன்ற பிரச்னைகள் ஏற்படலாம். எனவே இந்தப் பிரச்னை உருவாகும் இடத்துக்கே திரும்பி வந்து தாக்குகிறது.

வேறு சிக்கல்கள்

மண், மற்றும் தண்ணீர் சீர்கேடுகளுக்குக் காரணம் தோல் தொழில் கழிவு நீர்தான் என்றாலும், தோல் தொழிற்சாலைகளை புறக் கணித்து விட முடியாது. கடந்த 30 ஆண்டு களாக இப்பகுதிகளில் இயங்கி வரும் தோல் தொழிற்சாலைகளால் கோடிக் கணக்கான ரூபாய் அன்னியச்செலாவணி நம்நாட்டுக்குக் கிடைத்திருக்கிறது. பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் இந்தத் தொழிலைத்தான் நம்பியிருக்கிறார்கள். நம் பொருளாதார அமைப்பில் தோல் தொழிற்சாலைகள் முக் கிய பங்கு வகிப்பதால் அவற்றை இழுத்து மூடிவிட முடியாது.

※ தொழிற்சாலை கழிவுநீர் பாலாற்றில் சங்கமித்தல்





※ இந்த விபரீதத்தால் பயிர் செய்ய முடியாது போன நிலமும் பட்டுப்போன ஏராளமான தென்னைமரங்களும்

பாழாகிறது

அதே நேரத்தில் இத்தொழிற்சாலைகள் நம் சுற்றுப்புறச் சூழ்நிலையைத் தொடர்ந்து சீரழித்து வருவதையும் நாம் அனுமதிக்க முடியாது. தோல் தொழிற்சாலைகளும், இயங்க வேண்டும், விவசாயமும் வாழ வேண்டும். மக்களின் உயிர் வாழ்க்கைக்கே மிகவும் அவசியமான தூய்மையான குடி தண்ணீரும் உறுதி செய்யப்பட வேண்டும்.

பிரச்னை தீர வழி


இதற்கான ஒரே வழி தோல் தொழிற்சாலைகள் கழிவு நீரை சுத்திகரித்து அதன் நச்சுத் தன்மையையும் வீரியத்தையும்நீக்கிய பின்னரே வெளியேற்றுதல். இப்படி கழிவு நீரைச் சுத்திகரிக்கும் தொழில் நுட்ப முறைகள் அரசாங்கத்தின் ஆராய்ச்சி நிறுவனங்களான மத்திய தோல் தொழில் ஆராய்ச்சி நிறுவனம் (CLRI) தேசிய சுற்றுப் புற சூழல் பொறியியல் ஆராய்ச்சிநிலையம் (NEERI) போன்ற அமைப்புக்களில் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இந்த சுத்திகரிப்பு நிலையங்களை ஒவ்வொரு தொழிற்சாலையும் நிறுவி, கழிவு நீரை சுத்திகரிக்க வேண்டும். தனியே சுத்திகரிப்பு நிலையம் அமைக்க இயலாத, இடவசதி குறைந்த சிறியதோல் தொழிற்சாலைகள் கூட்டுறவு முறையில் சுத்திகரிப்பு நிலையங்களை நிறுவிக் கொள்ள வேண்டும். அரசாங்கத்தின் உதவியோடு இந்த சுத்திகரிப்பு அமைப்புக்களை ஏற்படுத்தலாம். மத்திய அரசாங்கம் மானியமாக வழங்கும் (தோல் ஏற்றுமதி மானியம்) சுமார் 126 கோடி ரூபாயில் ஒரு பகுதியை இந்தச் சுத்திகரிப்பு நிலையங்களை நடத்துவதற்கு அரசு பயன்படுத்திக் கொள்ளலாம். இதற்குப் பின்பும் இந்தத் தொழிற்சாலைகள் தங்கள் கழிவு நீரை சுத்திகரித்துத்தான் வெளியேற்றுகின்றனவா என்பதைக் கண்காணிக்க அரசு, மற்றும் பொது மக்கள் பிரதிநிதிகள் அடங்கிய கண்காணிப்பு குழு ஒன்று அமைத்துச் செயல்பட வேண்டும். பல ஆண்டுகளாக இந்தப் பிரச்சினை உணரப்பட்டு வந்தாலும் கடந்த சில ஆண்டுகளாகத் தீவிரமான பாதிப்புக்கள் ஏற்பட்ட பின்னர் தான் மக்களுக்கு இந்தப் பிரச்சினையின் முழு வடிவம் புலப்பட ஆரம்பித்தது. இதற்கு முன்னர் தனித்தனியாகப் பொது மக்களில் சிலர் இந்தப் பிரச்சினைக்கு முடிவு காண முயன்றும் கூட, எல்லாத் தரப்பினரும் ஒருமித்து ஈடுபடாததால், அந்த முயற்சிகள் வெற்றியடையாமல் தற்போது எல்லா மக்களையும் தாக்கும் இந்த அளவுக்குவளர்ந்து விட்டது. பொது மக்கள் எல்லோரும், குறிப்பாக ஆம்பூர் நகரின் பொது மக்கள் அனைவரும் பாதிக்கப்பட்டு இருப்பதால் ஒருங்கிணைந்து செயல்பட்டுத் தீர்வுகாண முற்பட்டுள்ளார்கள். பொருளாதார வசதியும், தொழில் நுட்ப வசதியும் இருந்தும் கூட, தோல் தொழிற்சாலைகளும், அரசாங்கமும் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களை அமைக்காமல் தங்கள் தங்கள் சமுதாயப் பொறுப்பைத் தட்டிக் கழித்துக் கொண்டு, அலட்சியமாக இருந்து வருகிறார்கள். இனி மக்கள் அனைவரும் விழிப்புணர்வோடு ஒருங்கிணைந்து செயல்பட்டு அரசாங்கமும், தொழிற்சாலைகளும் தங்கள் சமுதாயக் கடமையை உணருமாறு செய்யாவிடில் இப்பிரச்சினைக்கு விடிவே இல்லை.

கட்டுரை, புகைப்படங்கள்:

பி. ஜே. தினகரன்

வாசகர் பங்கு

அரைப்பக்கச் சிறுகதை



பின்வரும் சிறுகதைகள் பிரசுரத்துக்கு ஏற்கப்பட்டுள்ளன. வாரம் ஒன்றாகப் பிரசுரமாகும்.

1. **ஒரு தங்கை தாயானாள்**
   கே. சுதா; சென்னை–41.
2. **ரூ. 5000 வித்தியாசத்தில்...**
   பட்டுக்கோட்டை ராஜேஷ் பட்டுக்கோட்டை..
3. **ரமா செய்த தவறு**
   வானதி விட்டதாஸ், சென்னை–20.
4. **ரத்தம் குடிக்க வாரீகளா?**
   கே. ஸ்ரீனிவாசன், பூனா–16.
5. **சிறு தவறு பெரிய தண்டனை**
   பட்டுக்கோட்டை ராஜா, பட்டுக்கோட்டை..
6. **ஊனம் உடலில் இல்லை**
   எஸ். சம்பத்குமார், சென்னை–5.
7. **இது உங்க தெருவா ஸார்?**
   வெங்கட், சென்னை–86.
8. **வேஷம்**
   சரஸ்வதி பஞ்சு திருச்சி–20.
9. **முதல் இரவு**
   குமரி அமுதன், நாகர்கோயில்.
10. **நிறைவு**
    கஸ்தூரி, சென்னை–87.
11. **காட்டன் பெட்டிங் கபாலி**
    சரோஜா கிருஷ்ணசாமி, சென்னை–61
12. **விவரிக்க முடியவில்லை**
    என். கே. சுகவரி, பங்களூர்–10.
13. **''ப்பூ''**
    வி. ஆர். நாகராஜன், வலவனூர்.
14. **ஒய் நாட்?**
    ''வெசங்கரி ரவிகை'', ... திருநெல்வேலி மா.வ.
15. **தந்தி**
    மங்களம், சேலம்–1.
16. **மௌனமான நேரம்**
    எஸ். சுந்தரராஜ், மதுரை–2.
17. **கீழே இறங்கிய குரங்கு**
    விஜேதானந்த், திருவாரூர்.
18. **பிரிவு**
    ஜி. பத்மாவதி, காரைக்குடி.
19. **அந்த ஒரு நாள்**
    பிரேமா ராமலிங்கம், சென்னை–20.
20. **மனம் எனும் கோவில்**
    வி. என். சந்திரமௌலி, திருச்சி–14.

> ராகமாலிகா வழங்கும் பட்டுப் புடைவையைக் குலுக்கல் முறையில் பரிசாகப் பெறுபவர்:
>
> **என். கே. சுகவரி**
>
> 172–ஏ, மாடி,
> 4–வது பிளாக், 4–வது மெயின் ரோடு,
> ராஜாஜிநகர், பெங்களூர்–560 010.

சிகரெட் – கல்யாணம்!

ஒரு சிகரெட் பாக்கெட்டின் சராசரி விலை ஒரு ரூபாய் என்று வைத்துக் கொண்டால் ஒரு நாளைக்கு ஒரு பாக்கெட் சிகரெட் பிடிக்கும், ஒரு மனிதன் ஒரு வருஷத்துக்கு ரூ. 386.90 செலவழிக்கிறான். (அவன் இழக்கும் வட்டி உள்பட...) இதே கணக்கில் அவன் 30 வருஷத்தில் 30 587 ரூபாயை சிகரெட்டுக்காகச் செலவிடுகிறான். அந்தப் பழக்கம் இல்லாவிட்டால் இந்தப் பணம் குழந்தைகளின் படிப்பு அல்லது திருமணத்துக்கு ஆகுமே

('காரவான்' என்ற பத்திரிகையிலிருந்து)

–அனிதா ராமச்சந்திரன்.

அந்த ஒரு நாள்!

- பிரேமா ராமலிங்கம் -

ரோஸ் கலர் புடவைக்குப் பொருத்தமா அதே கலர் சோளியை அணிந்து கொண்டேன். நீண்ட பின்னலில் ஒற்றை ரோஜாவைக் காமதாரம் எட்டிப் பார்க்க வைத்தேன். கண்ணாடியில் என்னைப் பார்த்துத் திருப்தி அடைந்தேன்.

புத்தகங்களை எடுத்துக் கொண்டு அறையை விட்டு வெளியே வந்தேன். உள் பக்கம் பார்த்து, ''அம்மா காலேஜ் போய் வரேன்'' என்றேன்.

குரல் கேட்டு வெளியே வந்த அம்மா என்னைப் பார்த்து அசந்து நின்றாள். கூட வந்த தங்கை, ''வாவ், ப்யூட்டிபுல்'' என்று ஆர்ப்பரித்தாள்.

நான் சந்தோஷத்துடன் புன்னகைத்து, செருப்பை மாட்டிக் கொண்டு புறப்பட்டேன். தெருவில் போவோரெல்லாம் என்னையே பார்ப்பது போல் இருந்தது. காலேஜ் வாசலில்,

''ஹாய், நளினி, உஷா'' என்றேன்.

இருவரும் என்னைப் பார்த்து வியந்தார்கள். மெல்ல நடந்தேன். எதிர்ப்பட்ட விசு, ரவி, குமார், ராஜாவையும் பார்த்து,

''ஹாய், குட்மார்னிங்'' என்றேன்.

பயல்கள் என்னைப் பார்த்து விழித்த விழியை ரசித்தேன்.

''ஏய் மச்சி, யார்டா அவ, நியூ அட்மிஷனா? அப்படின்னா நம்ப பெயரெல்லாம் எப்படிடா தெரியும்?''

நான் மனத்துக்குள் சிரித்துக் கொண்டே வகுப்பறைக்குச் சென்றேன். என் பின்னால் வந்து கொண்டிருக்க மச்சிகள் நான் உட்கார்ந்திருந்த இடத்துக்கு வந்து ''மிஸ் இது ஆண்கள் உட்காருமிடம்'' என்றதுகள்.

''ஓ, ஸாரி.''

என்று பெண்கள் உட்காருமிடத்திற்குச் சென்று கடைசி பெஞ்சில் அமர்ந்தேன்.

லெக்சரரும் வந்து அட்டெண்டன்ஸ் எடுக்க ஆரம்பித்தார் வரிசையாக.

''உதயமூர்த்தி.''

''எஸ், ஸார்.'

''உமா.''

''எஸ், ஸார்.''

''உஷா.''

''எஸ், ஸார்.''

''வசந்தா.''

''எஸ், ஸார்.''

''வாசு.''

''எஸ், ஸார்.''

''டேய்...ய்...'' வகுப்பறை முழுவதும் ஒலி அலைகள் மோதின. சட்டென்று நிமிர்ந்த லெக்சரரும்,

''என்ன...? என்ன...?'' என்றார்.

''ஸார், ஸார் நம்ப வாசுவைப்பாருங்க ஸார்'' என்று என்னிடம் ஓடிவந்து, என்னைத் தூக்கி நிறுத்தினான் விசு.

''ஹேய்... என்னப்பா... இது...?''

நானும், நாணிக் கோணிக்கொண்டு, ''எங்களுக்குள் ஒரு பந்தயம் ஸார். பெண் வேடம் போட்டுக் கொண்டு காலேஜ் வர முடியுமா? முடியாது என்றார்கள். அதைச் சேலஞ்ச் ஆக எடுத்துக் கொண்டேன் ஸார். பதோற்றவர் வெற்றி பெற்றவருக்கு டின்னர் தர வேண்டும் ஸார்!''


வகுப்பறை முழுவதும் கைத்தட்டல்.

சிரித்துக் கொண்டே, லெக்சரர், ''கங்கிராஜுலேஷன்'' என்றார்.





அழகுக்கு அலங்காரம்!



எல்காட்
குவார்ட்ஸ் கடிகாரம்

ஜெர்மானிய தொழில் நுணுக்கம்
(**Kienzle movement**) கொண்டது.
சாதாரண 1.5 வோல்ட்
பாட்டரியில் இயங்குவது.

விதவிதமான மாடல்கள்.
பளபளக்கும் பல வண்ணங்கள்.
இலேசானது. உறுதியானது.
துல்லியமான ஓட்டம்.
நீடித்த உழைப்பு. இல்லம்,
அலுவலகம், கடைகள் போன்ற
எந்த இடத்திலும் பயன்படுத்த ஏற்றது.

ஒரு வருட
உத்திரவாதம்

எல்காட்

தமிழ்நாடு மின் அணு நிறுவனம்
(தமிழ்நாடு அரசு நிறுவனம்)
735, அண்ணா சாலை, சென்னை 600 002

DIPR/211/84/ADWAVE/ELCOT/26918

அமெரிக்கத் தேர்தல்

பெண்மை மென்மை திண்மை



✻ மாண்டேல்



✻ ஜெரால்டின்

''ஜெர்ரி...'' — வால்டர் மாண்டேல் தொலைபேசியில் அந்த முக்கியமான கேள்வியைக் கேட்டார். ''...என்னுடன் இணைந்து போட்டியிடுகிறீர்களா?''

ஜெரால்டின் உடனே சம்மதித்து விட்டார் — முதல் முறையாக ஒரு பெண் — அதுவும் 48 வயது இல்லத்தரசி அமெரிக்கத் துணை அதிபர் பதவிக்குப் போட்டியிடத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இப்பதவி சுவாரசியமற்றது என்று பல முன்னாள் துணை அதிபர்கள் வாக்குமூலம் கொடுக்கத் தயாராய் இருந்தாலும் அது ஒரு பொருட்டாகத் தோன்றவில்லை. ஜனநாயகக் கட்சி சார்பில் போட்டியிடும் ஜெரால்டினும் மாண்டேலும் நவம்பர் வாக்குப் பதிவில் வெற்றி பெற்றால் ஜெரால்டின் அமெரிக்காவின் முதல் பெண் துணை அதிபர் ஆவார். ஜனாதிபதி பதவியிலிருந்து ஒரு மயிரிழை அளவே எட்டியிருக்கும் அவர் பதவி.

ஜெரால்டினின் அப்பாவுக்குப் பூர்வீகம் இத்தாலி. அமெரிக்காவில் அவருடைய சொந்த ஊர் நியூயார்க் என்ற ஒரு தூங்கி வழியும் சிற்றூர். இரண்டு பிள்ளைக் குழந்தைகளுள் ஒன்றை விபத்தில் பறிகொடுத்த ஃபெர்ராரோ மூன்றாவதாக பிறந்த பெண்ணுக்கு மறைந்த அண்ணு ஜெரார்டின் நினைவாக ஜெரால்டின் என்று பெயரிட்டார்.

ஜெரால்டின் அப்பா செல்லம். அம்மாவோ குழந்தை கை, கால்களை அழுக்காக்கிக்கொள்வாள் என்று பயந்து அவளைக் கீழே தவழக் கூட விட்டதில்லை.

எட்டாவது வயதில் தந்தையை இழந்த ஜெரால்டின் சில காலம் தேவாலய மடத்தில் சேர்ந்து துறவறம் மேற்கொள்ள உத்தேசித்தார். கல்லூரிப் படிப்புக்கு உதவிச் சம்பளம் கிடைத்ததும் பட்டப் படிப்பை மேற்கொண்டார். கல்லூரி பத்திரிகையின் ஆசிரியையாய் இருந்த போது பத்திரிகையாளராகும் எண்ணமும் அவருக்கு ஏற்பட்டது.

சட்டப் படிப்பில் தேறி 1960-ஆம் ஆண்டு ஜான் ஜக்காரோவை மணந்தார், ஜெரால்டின். இருப்பினும் ஃபெர்ராரோ என்ற தன் கன்னிப் பெயரை மாற்றிக் கொள்ளவோ கணவர் பெயரை ஒட்ட வைத்துக் கொள்ளவோ இல்லை. பிராஸிகியூட்டர் வேலை பெற்றுக் கொடிய குற்றங்களை எதிர்க்கும் சிறப்புக் குழுவின் தலைவி ஆனார்.

''அவர் 'பெர்ஸனாலிடி' முதல் தரம். என்னதான் சோதனைகள் ஏற்பட்டாலும் பெண்மையின் நளினத்தை விட்டுக் கொடுக்காமல் அவற்றைச் சந்திப்பவர்'' என்ற பெயர் ஜெரால்டினைச் சீக்கிரமே வந்தடைந்தது.

ஒரு பேட்டியில் இவர் சொல்லியிருப்பது: ''எனக்கு ஒரு வேலை இருக்கிறது— நவம்பரில் ரானல்ட் ரேகனைத் தோற்கடிக்க வேண்டும்!'' இந்தத் தலையாய பணிக்கு அடுத்ததாக, புதிய அதிபரின் முதல் பொறுப்பு அச்சுறுத்திக் கொண்டிருக்கும் அணு ஆயுதப் போரைத் தடுப்பதே ஆகும் என்கிறார் இவர். மாண்டேல் பதவிக்கு வந்தால் ரஷ்யாவுடன் பேச்சு வார்த்தை மேற்கொள்ளுவார் என்று வாக்களித்துள்ளார்.

ஜெரால்டின் மூன்று குழந்தைகளுக்குத் தாய்.

'பெண்மைக்கே உரிய மென்மையோடு திண்மைப் பண்புகளும், கொண்டவர்'' என்று வர்ணிக்கப்படும் இப்பெண்மணியைத் தமது சகாவாகத் தேர்ந்தெடுத்தது வால்டர் மாண்டேலின் அபார சாணக்கியம் என்று கருதப்படுகிறது. தேர்தலில் இன்றைய ஜனாதிபதி ரேகனின் (குடியரசுக் கட்சி) வெற்றி வாய்ப்புகள் ஜெரால்டின் காரணமாகக் கணிசமாகக் குறையும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

-எஸ்ஸார்

சென்று வந்தவர் சொல்கிறார்:

'கர்'சேவாவில் கலந்து கொண்டேன்

அ. தி. மு. க. பிரமுகரும், பத்திரிகையாளருமான முசிறிப்புத்தனுக்குப் பஞ்சாப் நிலைமை எப்படித்தான் இருக்கிறது என்பதைக் கண்டறிய பேராவல். கிளம்பி விட்டார். டில்லிக்குச் சென்றவுடன் பிரதமரின் உதவியாளரும் சர்வோதயத் தலைவியுமான நிர்மலா தேஷ்பாண்டேயை (1978–ம் மகளிர் தேர்தலிலிருந்தே பழக்கம்.) கண்டு விவரத்தைச் சொல்ல அவரும் கிளம்பி விட்டார். இருவரும் அமிர்தசரஸ் சென்றார்கள். முசிறிப்புத்தன் சொல்கிறார்:

''மூன்று நாட்கள் அங்கு தங்கி இருந்தேன். ராணுவத்தின் கடுமையான சோதனைக்குப் பின் தான் உள்ளே அனுமதிக்கப்படுகிறார்கள். பொற்கோயிலின் சேதங்கள், நாம் டெலிவிஷனில் பார்த்த அளவுக்குத் தான் இருந்தன. அங்கு கர்சேவாவில் ஈடுபட்டிருந்த 'நிஹங்'குகளின் தலைவர் பாபா சாந்தா சிங்கைச் சந்தித்தேன். 'கர் சேவா' என்பது 'சேவா கரோ' (சேவை செய்) என்ற சொல்லிலிருந்து மருவி வந்ததாம். நான் ஒரு நாள் முழுவதும் பொற்கோயிலில் இருந்து கர்சேவாவில் என்னுடைய பங்காகக் கல்லுடைத்தேன். சாந்தா சிங் என்னை அணைத்தவாறே ''உங்கள் உடலில் ஊனம் இருந்தாலும்—உள்ளம் பலமாகத்தான் இருக்கிறது.'' என்றார். எனக்கு இன்னொரு ஆச்சர்யம் என்னவென்றால் முதல்வர் எம். ஜி. ஆர். பற்றியும் தெரிந்து வைத்திருக்கிறார் ''அவர் பெரிய கொடையாளியாமே'' என்றதும் எனக்குப் புல்லரித்துப் போயிற்று.

''சில பொல்லாத சீக்கியர்கள் பீர், பிராந்தி பாட்டில்களை உள்ளே கன்னு பின்னு வென்று விசிறியடித்துவிட்டு, 'ராணுவம் குடித்துவிட்டு அட்டகாசம் செய்கிறது' என்று பிரச்சாரம் செய்தார்கள். அதனால் தான் கட்டுப்பாடு நீடிக்கிறது'' என்றார்கள்.

தீவிரவாதிகள் இறப்பதற்கு முன்னர் பொற்கோயிலை அவர்களே நாசப்படுத்த முயன்றார்களாம். பழி ராணுவத்தின்பேரில் விழும் அல்லவா?

பொற்கோயில் முகப்பில் பீடா கடை வைத்திருக்கும் ஒருவரிடம் விசாரித்தேன். ''ஸார் மூன்று வருடங்களாக நான் உள்ளே செல்லவில்லை. காரணம், தீவிரவாதிகள் தான். உள்ளே சென்றால் பணம் கேட்பார்கள். கொடுக்கவில்லை என்றால் யமலோகத்தைப் பார்க்க வேண்டியதுதான்.''

ஒரு ரிக்ஷா தொழிலாளியைச் சந்தித்தேன். ''கடந்த ஒரு வருடமாக யாரும் பொற்கோயில் சவாரிக்கு என்னைக் கூப்பிட்டதில்லை. இப்பொழுதுதான் சவாரி வருகிறது'' என்றார்.

என்னுடைய இந்தப் பயணம் மறக்க முடியாதது.

பேட்டி: ப்ரியன்

✖ பாபா சாந்தா சிங்குடன் முசிறிப்புத்தன், நிர்மலாதேஷ் பாண்டே




Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600032. (Phone: 431543)

Assistant Editor: P. S. Mani Editor: K. Rajendran

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka
[illegible] 1/75

"என் குடும்பத்தினரின்
ஆரோக்கியத்தைப்
பொறுத்தவரை
நான் அசிரத்தையாக
இருக்கவே மாட்டேன்"





குடிப்பதற்கு நீரைக் கொதிக்க விட்டால் மட்டும் போதாது. வீலன் வாட்டர் ஃபில்டரிலுள்ள 'லோ-ஹைட்' காண்டில் விசேஷ முறையில் அமைக்கப்பட்ட நுண்ணிய துளைகளைக் கொண்டதாகையால் மிகமிகச் சிறிய பதார்த்தங்களைக்கூட நன்கு வடிகட்டி, துல்லியமான நீரை மட்டுமே பெற வழி செய்கிறது... அதுவும் விரைவாக!

வெளிப்புறம் உறுதிமிக்கதாகும். இதன் கலம் திடமான பாலி ப்ரொபிலீனிலானது. அதனால் வீலன் வாட்டர் ஃபில்டர் விரிவதோ, நசுங்குவதோ, துருப்பிடிப்பதோ இல்லை.

ஆம். அதனால்தான் எந்த ஒரு தாயும் வீலன் வாட்டர் ஃபில்டரையே நம்புகின்றாள்.

வீலன் வாட்டர் ஃபில்டரில் ஒரு இணையற்ற 'லோ-ஹைட்' காண்டில் பொருத்தப் பட்டுள்ளது. அதன் விளைவாக சீராகவும், வேகமாகவும் நீரை வடிகட்ட முடிகிறது.

விற்பனைக்கு விடுப்போர்:
வோல்டாஸ் லிமிடெட்
அப்ளையன்ஸெஸ் டிவிஷன்
19, ஜே.என். ஹெரெடியா மார்க்
பலார்டு எஸ்டேட்
பம்பாய்-400 038.

வோல்டாஸ்
வீலன்
நம்பகமான வீட்டுப்பயோக சாதனங்கள்

CLARION/V/10/173 TAM